மலர் : 51 இதழ் : 10

தமிழரசு

ஏப்ரல் 2020
விலை ரூ. 20

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2051
விகாரி – சார்வரி வருடம் : பங்குனி – சித்திரை
ஏப்ரல் 2020
மலர் : 51 விலை ரூ.20 இதழ் : 10

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **பொ. சங்கர்** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
முனைவர் **இரா. பாஸ்கரன்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
மு.அ. ரோசன் குர்சிதா பேகம்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
சு. கமலா
தேச. கலையரசன்

உதவி ஆசிரியர்கள்
ச. மஞ்சுளா
மு. மோகனவல்லி
மு. மணிமேகலை
அ. மதன்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

**"விழித்திருப்போம்; விலகியிருப்போம்;
வீட்டிலேயே இருப்போம்; கொரோனாவை வெல்வோம்."**

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

இந்த இதழில்...

கொரோனா வைரஸ் நோய்க்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் மருத்துவமனையில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு ஒரு மாத ஊதியம் சிறப்பு ஊதியமாக வழங்கப்படும்!
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 24.03.2020 அன்று சட்டப்பேரவையில், கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளில் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றுகின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்களை பாராட்டி, அவர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்குவது குறித்து ஆற்றிய உரை 28

ஒரு நாளைக்கு நான்கரை இலட்சம் பேருக்கு அம்மா உணவகத்தின் மூலம் உணவு வழங்கப்பட்டு வருகிறது
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.04.2020 அன்று சென்னையில் அம்மா உணவகங்களை பார்வையிட்ட பின்பு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி........ 52

பொதுமக்கள் பயனடையும் வகையில் குரல்வழிச் சேவை!
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமைச் செயலகத்திலும், மாண்புமிகு மத்திய சட்டம், நீதி, தொலைத்தொடர்பு மின்னணு மற்றும் தகவல் நுட்பவியல் துறை அமைச்சர் திரு. **ரவிசங்கர் பிரசாத்** அவர்கள் புதுடெல்லியிலும், குரல் வழிச் சேவையை காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள் – 09.04.2020 74

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள், 11.04.2020 அன்று, காணொலிக் காட்சி மூலமாக அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மூன்றாவது முறையாக கலந்தாய்வு மேற்கொண்டார்கள். இந்த கலந்தாய்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், தமிழ்நாட்டில் எடுக்கப்பட்டு வரும் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் இதற்கு தேவைப்படும் மத்திய அரசின் உதவி ஆகியவற்றை எடுத்துரைத்தார்கள்.

தங்களிடம் கோரியபடி ரூ.9,000 கோடியை தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள் காணொலிக் காட்சி மூலம் அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டபோது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் பிரதமரிடத்தில் வைத்த கோரிக்கையின் தமிழாக்கம். (02.04.2020)

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மற்ற மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கும் எனது வணக்கம்.

கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருக்க பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. இந்த வைரஸ் தொடர்பான பரிசோதனை உபகரணங்கள் அடங்கிய கிட், தமிழகம் முழுவதும் விநியோகம் விரிவாக்கம் செய்யப்படவேண்டும். என்–95 முகக்கவசம், வெண்டிலேட்டர் போன்றவை போதிய அளவில் அளிக்கப்பட வேண்டும். இதுபோன்ற தேவைகள் தொடர்பாக ஏற்கெனவே நான் தங்களிடம் ரூ.3,000 கோடியை கேட்டிருக்கிறேன். மேலும், இதற்கு முன்பு நான் கோரியபடி ரூ.9,000 கோடியை தமிழகத்திற்கு அனுமதிக்க வேண்டும்.

ஜி.எஸ்.டி.பி.யில் பணப்பற்றாக்குறையின் அளவு 3 சதவீதம் என்பதை 2019–2020 மற்றும் 2020–2021ஆம் ஆண்டுகளுக்கு தளர்த்த வேண்டும். கொரோனாவை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஏற்படும் கூடுதல் செலவை எதிர்கொள்ளும் வகையில், நிர்ணயிக்கப்பட்ட அளவான 33 சதவீதத்தை விட கூடுதலாக 2019–2020 மற்றும் 2020–2021ஆம் ஆண்டுகளுக்கு கடன் பெற அனுமதிக்க வேண்டும்

2020–2021ஆம் ஆண்டுக்கான மானிய நிலுவைகள் முன்கூட்டியே வழங்கப்பட வேண்டும். நகர்ப்புறம் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிக்கமிஷன் பரிந்துரைத்துள்ள மானியத்தில் 50 சதவீதத்தை தற்போது உடனடியாக வழங்க வேண்டும். வருவாய் பற்றாக்குறை மானியத்தின் 50 சதவீத தொகையை இப்போதே அனுமதிக்க வேண்டும். கடந்த டிசம்பர், ஜனவரி மாதத்துக்கான ஜி.எஸ்.டி. இழப்பீட்டு நிலுவைத் தொகை உடனடியாக வழங்கப்பட வேண்டும் .

தேசிய சுகாதார பணிகளுக்கான மானியம் உடனடியாக அனுமதிக்கப்பட வேண்டும். மாநிலங்களுக்கு ரிசர்வ வாங்கி வழங்கும் வழிவகை முன்பணத்தை 30 சதவீதத்தில் இருந்து இரட்டிப்பாக்க வேண்டும். 2020–2021ஆம் ஆண்டுக்கான வழிவகை முன்பணத்தை வட்டியில்லாமல் வழங்க வேண்டும். கொரோனாவினால் ஏற்பட்டுள்ள சவாலை எதிர்கொள்ள தமிழகம் எடுத்துள்ள நடவடிக்கைகளை பட்டியலிட விரும்புகின்றேன். இதுவரை 2.10 இலட்சம் சர்வதேச பயணிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 77,330 பேர் 28 நாட்களாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். முதியோர்கள், கர்ப்பிணிகள், தாய்–சேய், எய்ட்ஸ், சர்க்கரை நோயாளிகள் உள்ளிட்டவர்களின் மருத்துவ தேவைகளை கவனிக்க மாவட்ட அளவில் சிறப்பு திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவர்களுக்கு நடமாடும் சுகாதாரக் குழுக்கள் மூலம் சேவைகள் அளிக்கப்படுகிறது. அரசு மற்றும் தனியார் மூலம் 22,000 தனி படுக்கைகள் 5,934 ஐ.சி.யு. படுக்கைகளுக்கு சுகாதாரத் துறை ஏற்பாடு செய்துள்ளது. இதுவரை 2,641 தொண்டை மற்றும் இரத்த மாதிரிகள் சோதிக்கப்பட்டு 1,631 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

தமிழகத்தில் எந்த இடத்திலாவது கொரோனா தொற்று இருப்பதாக தகவல் வந்தால் அந்த பகுதி உடனடியாக அரசு கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டு அந்த பகுதி முழுவதுமே சுத்திகரிக்கப்படுவதோடு, மேலும் பரவாத அளவில் முற்றிலும் சீல்வைக்கப்படுகிறது.

சென்னை ஓமந்தூரார் மருத்துவ கல்லூரி மருத்துவமனை கோவை இ.எஸ்.ஐ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவை கொரோனா மருத்துவமனையாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதுதவிர ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மருத்துவமனையில் கொரோனா சிகிச்சைக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. தற்போது தனிமைப்படுத்தப்படும் ஒவ்வொரு நபருக்கும் சத்தான உணவு, எதிர்ப்பு சக்தி அளிக்கும் உணவுகள் அளிக்கப்படுகின்றன. பரிசோதனை வசதிகள் மாநிலமெங்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 11 அரசு மற்றும் 6 தனியார் சோதனைக் கூடங்கள் உள்ளன. இதை மாவட்டத்துக்கு ஒன்று என்று விரிவாக்க வேண்டியுள்ளது. இந்த கொரோனா தொற்றை எதிர்கொள்ள 530 டாக்டர்கள், 1,000 செவிலியர்கள் 1,508 லேப் டெக்னீஷியன் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

24 மணி நேரமும் இயங்கும் அவசரகால கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடு குறித்து ஆய்வு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.03.2020 அன்று, சென்னை, தேனாம்பேட்டை டி.எம்.எஸ். வளாகத்தில், கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்காக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையால் அமைக்கப்பட்டுள்ள 24 மணிநேரமும் இயங்கும் அவசர கால கட்டுப்பாட்டு அறையின் செயல்பாட்டினை பார்வையிட்டு, அங்கு பணியாற்றும் மருத்துவர்களிடம் உரையாற்றினார்கள்.

மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கு பேரிடர் நிதியிலிருந்து உடனடியாக ரூ.1,000 கோடி வழங்க வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள் காணொலிக் காட்சி மூலம் அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டபோது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் பிரதமரிடத்தில் வைத்த கோரிக்கையின் தமிழாக்கம் – 11.04.2020

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களுக்கும், மற்ற மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கும் மற்றும் உயர் அலுவலர்களுக்கும் எனது வணக்கம்.

கொரோனா வைரஸ் நோய் விடுத்திருக்கும் சவாலை எதிர்கொள்ள தாங்கள் அளித்து வரும் ஆதரவுக்கும், வழிகாட்டுதலுக்கும் தமிழகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.கொரோனா வைரஸ் தடுப்பில் தமிழகமும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதோடு சில கருத்துக்களையும் உங்கள் முன்வைக்க விரும்புகிறேன்.

தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு பணிக்குழுவும், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்ட 12 குழுக்களும் அமைக்கப்பட்டு கொரோனா தடுப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஊரடங்கு மிக கண்டிப்பாக அமல்படுத்தப்படுகிறது.

இரயில் மற்றும் சரக்கு போக்குவரத்து சேவைகள் தொடங்கப்படக் கூடாது. அதுபோல மாநிலங்களுக்கு இடையேயான பயணிகள் போக்குவரத்தும் அனுமதிக்கப்படக் கூடாது என்பதை பிரதமருக்கும் மற்ற மாநில முதலமைச்சர்களுக்கும் வேண்டுகோளாக வைக்கிறேன்.

அத்தியாவசிய பொருட்கள், மற்ற மாநிலங்களில் இருந்து இரயில்கள் மூலம் எளிதாக கொண்டு வரப்பட தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அதுபோல மாநிலங்களுக்கு இடையே சாலை வழி சரக்கு போக்குவரத்தை அனுமதிக்க வேண்டும். இந்த நீண்டகால ஊரடங்கு உத்தரவு அமலில் இருக்கும் காலகட்டத்தில் மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்காமல் நெருக்கடி ஏற்பட அனுமதித்துவிடக் கூடாது என்பதை வலியுறுத்துகிறேன்.

வேளாண்மைக்கு நாம் முழு ஆதரவை அளித்தாக வேண்டும். எனவே, வேளாண்மை மற்றும்

தோட்டக்கலை மேம்பாட்டுக்காக ஒரு சிறப்பு தொகுப்பை தாங்கள் அறிவிக்க வேண்டும். ஊரடங்கு உத்தரவு நீடித்தால் அமைப்பு சாரா தொழிலாளர்கள், வேளாண் தொழிலாளர்களை ஆதரிக்கும் வகையில் கூடுதல் நிதி மற்றும் அத்தியாவசிய பொருட்கள் அனுமதிக்கப்பட வேண்டும். அவர்கள் குடும்பத்திற்கு தலா ரூ.2 ஆயிரம் வழங்கப்பட வேண்டும். தமிழகத்துக்கு வந்துள்ள 2 இலட்சத்து 10 ஆயிரம் சர்வதேச பயணிகள் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களில் 93 ஆயிரத்து 146 பேர் வீடுகளில் 28 நாட்களுக்கு வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

உள்ளாட்சி அமைப்புகள் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து பொது இடங்களும் தூய்மைப்படுத்தப்படுகின்றன. இதுவரை 32 ஆயிரத்து 371 தனிப் படுக்கைகளும், 5,934 ஐ.சி.யு. படுக்கைகளும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தயார்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 8,410 பேரின் மாதிரிகள் சோதனையிடப்பட்டு, அவர்களில் 1,891 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதன் அடிப்படையில் தமிழகத்தில் 911 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா நோய் தொற்று இருப்பவர்களின் வீடு இருக்கும் பகுதி கண்டறியப்பட்டு கட்டுப்பாட்டு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. இதன்படி அதன் 5 கி.மீ. சுற்றளவுக்கு வீட்டுக்குவீடு சோதனை மேற்கொள்ளப்பட்டு, கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனா தொற்று தொடர்பான பரிசோதனைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக ரேப்பிட் டெஸ்ட் கிட் என்ற துரித பரிசோதனை உபகரணங்கள் தேவைப்படுகின்றன. தமிழகத்துக்கு 2 இலட்சம் உபகரணங்களை அளிப்பதற்கு மத்திய சுகாதாரத்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதி இருக்கிறேன். இதுவரையில் தமிழகத்தில் 21 அரசு மருத்துவமனைகளும், 155 தனியார் மருத்துவமனைகளும் கொரோனா சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. தற்போது எங்கள் மாநிலத்தில் 12 அரசு சோதனைக்கூடங்களும், 7 தனியார் சோதனைக் கூடங்களும் உள்ளன. மாவட்டத்துக்கு ஒரு சோதனை கூடம் என்ற அளவில் இதன் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும்.

நிவாரணத் தொகுப்புக்காக ரூ.3,280 கோடி நிதி ஒதுக்கி, 2 கோடி குடும்பத்துக்கு தலா ஆயிரம் ரூபாய் நிவாரணம் மற்றும் இலவச ரேஷன் பொருட்கள் அளிக்கப்பட்டுள்ளது. பதிவு செய்துள்ள அனைத்து நடைபாதை வியாபாரிகள், அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு கூடுதலாக ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்திற்கு அதிக அளவில் பி.சி.ஆர். மற்றும் துரித பரிசோதனை உபகரணங்களை மத்திய அரசு உடனடியாக வழங்க வேண்டும். பி.பி.இ. மற்றும் என் 95 முக கவசம் மற்றும் வெண்டிலேட்டர் போதுமான அளவில் தரப்பட வேண்டும். இதற்காக நான் ஏற்கனவே கேட்டுள்ள ரூ.3 ஆயிரம் கோடியை அனுமதிக்க வேண்டும். கொரோனாவை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளுக்காகவும், மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் ஒருங்கிணைந்த திட்டத்தை தொடங்குவதற்கு வசதியாக தமிழகத்துக்கு ரூ.9 ஆயிரம் கோடியை மானியமாக அனுமதிக்க வேண்டும்.

நிதிக்குழுவின் பரிந்துரையில் 50 சதவீத தொகையை இப்போதே உடனடியாக வழங்க வேண்டும். வருவாய் பற்றாக்குறை மானியத்தில் 50 சதவீதத் தொகையை உடனடியாக அனுமதிக்க வேண்டும். ஜி.எஸ்.டி. இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்பட வேண்டும். மாநில பேரிடர் நிவாரண நிதியில் ரூ.510 கோடியை அனுமதித்ததற்கு நன்றி. ஆனால், 15ஆம் நிதிக்குழுவின்படி இந்த நிதியில் தமிழகம் 64.65 சதவீத உயர்வை மட்டுமே பெற்றுள்ளது. மற்ற மாநிலங்கள் 120.33 சதவீத உயர்வை பெற்றுள்ளன.

2016ஆம் ஆண்டு வர்தா புயல் மற்றும் கடுமையான வறட்சி, 2017ஆம் ஆண்டு ஒகி புயல், 2018ஆம் ஆண்டு கஜா புயல் என தொடர்ச்சியாக இயற்கை பேரிடர்களை சந்தித்து வரும் தமிழகத்துக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியில் குறைவான ஒதுக்கீடே அனுமதிக்கப்படுகிறது. மருத்துவ மற்றும் தடுப்பு உபகரணங்களை வாங்குவதற்காக தமிழகத்துக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ஆயிரம் கோடி ரூபாயை தற்காலிக மானியமாக உடனடியாக வழங்க வேண்டும்.

❖ ❖ ❖

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய்
தடுப்பு நடவடிக்கைகள் குறித்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்
பத்திரிகை செய்தி – 15.03.2020

கொரோனா நோய்க்கான அறிகுறிகள் உள்ளவர்கள் உடனடியாக அரசு மருத்துவமனையை அணுக வேண்டும்!

கொரோனா வைரஸ் நோய் உலகளாவிய பொது சுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்ட நிலையில், உலக சுகாதார நிறுவனம் இதனை தற்போது உலகளாவிய நோய்த் தொற்றாக (Pandemic) அறிவித்துள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாக, தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய் பாதிப்பு இல்லையென்ற போதிலும், இந்த நோய் அண்டை மாநிலங்களிலிருந்து பரவாமல் தடுக்க கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள் :–

★ தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சி ஆகிய நான்கு விமான நிலையங்களிலும் வெளிநாட்டிலிருந்து பயணிகள் வருகின்றனர். மத்திய அரசு சில வெளிநாட்டு பயணிகள் வருகையை தடை செய்துள்ளது. எனினும், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் இங்கு திரும்பும் சூழ்நிலை ஏற்பட்டால், தேவைக்கேற்ப அவர்களை உலக சுகாதார நிறுவனத்தின் வழிமுறைகளின் படி, 14 நாட்கள் தனிமைப்படுத்தி கண்காணிக்க தேவையான வசதிகளை இயன்றவரை அந்தந்த விமான நிலையங்களின் அருகிலேயே ஏற்படுத்த மாண்புமிகு முதலைமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

★ அண்டை மாநிலங்களில் இருந்து கொரோனா வைரஸ் நோய் நமது மாநிலத்தில் பரவாமல் கட்டுப்படுத்துவதற்கு, உடனடியாக எல்லையோர மாவட்டங்களில் உள்ள கண்காணிப்பு சோதனை சாவடிகளில், நோய் கண்காணிப்புப் பணிகள் மற்றும் தூய்மைப்படுத்தும் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வருவாய்த்துறை, காவல்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

★ தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மழலையர் பள்ளிகளுக்கும் (LKG & UKG), துவக்கப் பள்ளிகளுக்கும் (1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை) 31.03.2020 வரை விடுமுறை அளிக்கவும்,

★ எல்லையோர மாவட்டங்களான தேனி, கன்னியாகுமரி, திருப்பூர், கோயம்புத்தூர், நீலகிரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, தென்காசி, திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, ஈரோடு, திண்டுக்கல், தருமபுரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உள்ள எல்லையோர வட்டங்களில் (Taluk) உள்ள திரையரங்குகளையும், மக்கள் அதிகம் கூடும் வணிக வளாகங்களையும் (Malls) 31.03.2020 வரை மூடவும்,

★ கெரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை முடிக்கிவிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநில பேரிடர் நிதியிலிருந்து சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறைக்கு ரூ.30 கோடி, போக்குவரத்துத்துறைக்கு ரூ.5 கோடி, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ரூ.4 கோடி, நகராட்சி நிருவாகத்திற்கு ரூ.6 கோடி, ஊரக வளர்ச்சித்துறைக்கு ரூ.5 கோடி, பேரூராட்சி இயக்குநரகத்துக்கு ரூ.2 கோடி, இந்து சமய அறநிலையத்துறைக்கு ரூ.3 கோடி, பள்ளிக் கல்வி மற்றும் உயர்க்கல்வித்துறைக்கு ரூ.2 கோடி,

அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.0.5 கோடி மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு ரூ.2.5 கோடி ஆக மொத்தம் ரூ.60 கோடி உடனடியாக வழங்க ஆணையிட்டார்கள்.

★ மாநிலத்தில் பிற பகுதிகளில் உள்ள திரையரங்குகள், வணிக வளாகங்கள் மற்றும் மக்கள் கூடும் இடங்களான கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் ஆகியவற்றில் தூய்மைப்படுத்தும் பணிகளை தீவிரமாக மேற்கொள்ளவும், இப்பணிகளை கண்காணிக்க தனி அலுவலர்களை நியமிக்கவும் ஊரக வளர்ச்சி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்.

★ பொது இடங்களில் குறிப்பாக, கோவில்கள், மசூதிகள், தேவாலயங்களுக்கு வருகை புரியும் மக்களுக்கு நோய் தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சளி, இருமல், காய்ச்சல் உள்ளவர்களைக் கண்டறிந்து, அத்தகையோரை மக்கள் கூடும் இடங்களுக்கு வருவதைத் தடுக்க தகுந்த தடுப்பு நடவடிக்கைளை மேற்கொள்ளவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்துசமய அறநிலைத்துறை அதிகாரிகளுக்கும் சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கும் ஆணையிட்டார்.

★ மேற்கூறிய பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க மாவட்ட ஆட்சி தலைவர்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளான மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

★ கொரோனா வைரஸ் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை தேசியப் பேரிடர் மீட்பு நிதியிலிருந்தும், தேசிய நலவாழ்வு குழும நிதியிலிருந்தும் மேற்கொள்ள மத்திய அரசு அறிவுறுத்தியதன்பேரில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

★ மேலும், மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்படும் கொரோனா வைரஸ் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை அனைத்துத் துறையினருடன் ஒருங்கிணைந்து செயல்படுத்த வருவாய் நிருவாக ஆணையருக்கு உத்தரவிட்டார்.

★ கொரோனா வைரஸ் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் வருவாய் நிருவாக ஆணையருக்கு தினந்தோறும் அனுப்ப வேண்டும் என்றும், வருவாய் நிருவாக ஆணையர் அந்த அறிக்கைகளைத் தொகுத்து, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தினசரி அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

★ மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை ஊடகங்களுக்கு அவ்வப்போது தெரிவிக்க மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

★ மேலும், பொதுமக்கள் கீழ்க்கண்ட அறிவுரைகளை பின்பற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார் :

★ பொதுமக்கள் மற்ற மாநிலங்களுக்கு பயணிப்பதையும், பொது இடங்களில் அதிக அளவில் மக்கள் கூடுவதையும் அடுத்த 15 நாட்களுக்குத் தவிர்க்கவும்,

★ கூட்டம் நிறைந்த பொது இடங்களுக்கு வயதானவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், குழந்தைகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த நபர்கள் பயணம் செய்வதை தவிர்க்கவும்,

★ பொதுமக்கள் அனைவரும் தனிநபர் சுகாதாரத்தினை பேணவும், குறிப்பாக வீட்டிற்குள் நுழையும் போதும், அவ்வப்போதும் கைகளை சோப்பு போட்டு சுத்தமாக கழுவுவதை உறுதி செய்யவும்,

★ கைகளை சுத்தம் செய்யாமல், முகத்தை தொட வேண்டாம் எனவும்,

★ பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் விடுமுறை நாட்களின்போது குழுவாக விளையாடாதவாறு கண்காணிக்கவும், வீட்டிற்குள் நுழைந்தவுடனும், அவ்வப்போதும் கைகளை சோப்பு போட்டு சுத்தமாக கழுவுவதை உறுதி செய்யவும்,

★ கொரோனா வைரஸ் நோயை தடுப்பதற்கான முயற்சிகளை அனைவரும் மேற்கொண்டால்தான் வெற்றிபெற இயலும் என்பதை கருத்தில் கொண்டு அனைத்து தரப்பு மக்களும் அரசின் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிடவேண்டுமென்றும், நோய்க்கான அறிகுறி உள்ளவர்களை உடனடியாக அரசு மருத்துவமனைகளை அணுகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

கொரோனா வைரஸ் நோயை தடுப்பதற்கான முயற்சிகளை ஒவ்வொரு தனி மனிதனும் சுயமாக உணர்ந்து அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்!

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு
நடவடிக்கைகள் குறித்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
பத்திரிகை செய்தி – நாள் 16.03.2020

மத்திய அரசு, கொரோனா வைரஸ் நோய் தொற்றை ஒரு பேரிடராக அறிவிக்கை செய்துள்ள நிலையில், இது தொடர்பாக மாண்புமிகு அம்மாவின் அரசு, “வருமுன் காப்போம்” என்ற முதுமொழிக்கு ஏற்ப, எடுத்துள்ள பல்வேறு தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்கள்:–

❖ தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சி ஆகிய நான்கு சர்வதேச விமான நிலையங்களிலும் வெளிநாட்டிலிருந்து பயணிகள் வருகின்றனர். சில நாடுகளிலிருந்து வரும் வெளிநாட்டு பயணிகளின் வருகையை, மத்திய அரசு தடை செய்துள்ளது. எனினும், அந்நாடுகளிலிருந்து இந்தியர்கள் இங்கு திரும்பும் சூழ்நிலை ஏற்பட்டால், தேவைக்கேற்ப அவர்களை உலக சுகாதார நிறுவனத்தின் வழிமுறைகளின் படி, 14 நாட்கள் தனிமைப்படுத்தி கண்காணிக்க தேவையான வசதிகளை இயன்றவரை அந்தந்த விமான நிலையங்களின் அருகிலேயே ஏற்படுத்த வேண்டும்.

❖ அதே போல தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விமான நிலையங்களிலும், உள்நாட்டுப் பயணிகளையும் தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்தி, சோதனை செய்திட இந்திய விமான நிலைய ஆணைய இயக்குநரும், பொது சுகாரதாரத் துறை இயக்குநரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

❖ அண்டை மாநிலங்களில் இருந்து கொரோனா வைரஸ் நோய் நமது மாநிலத்தில் பரவாமல் கட்டுப்படுத்துவதற்கு, உடனடியாக எல்லையோர மாவட்டங்களில் உள்ள கண்காணிப்பு சோதனை சாவடிகளில், நோய் கண்காணிப்புப் பணிகள் மற்றும் தூய்மைப்படுத்தும் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வருவாய்த் துறை, காவல் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார். அதை உடனடியாக நடைமுறைப்படுத்திட வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

❖ தமிழ்நாட்டிலிருந்து அண்டை மாநிலங்களுக்கு தனியார் (omni) பேருந்துகள் வாயிலாக இலட்சக்கணக்கானவர்கள் பயணிப்பதை கருத்தில் கொண்டு, அண்டை மாநில எல்லையை ஒட்டி உள்ள சுங்கச் சாவடி (Toll Plaza) அருகிலேயே பயணிகளின் உடல்நிலையை தெர்மல் ஸ்கேனர் மூலம் பரிசோதனை செய்யத் தேவையான கட்டமைப்புகளை சுகாதாரத் துறை, போக்குவரத்துத் துறை, காவல் துறை மற்றும் மாவட்ட நிருவாகத்தின் கண்காணிப்பில் ஏற்படுத்த வேண்டும்.

❖ தனியார் மற்றும் அரசுப் பேருந்துகள், மெட்ரோ இரயில், இரயில்வே, மாநகரப் பேருந்துகள், பேருந்து நிலையங்கள், பேருந்து நிறுத்தங்கள், மெட்ரோ ரயில் நிலையங்கள், பொதுக் கழிவறைகள் போன்ற இடங்களில் பொது சுகாதாரத் துறையினர், போக்குவரத்துத் துறையினர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து பேருந்துகளையும், மெட்ரோ ரயில்களையும், தினந்தோறும் கிருமிநாசினி மூலம் தூய்மைப்படுத்திடவும், கூடுதல் சுகாதார நடவடிக்கைகளையும், கோரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளையும் தவறாமல் மேற்கொள்ள வேண்டும்.

❖ இரயில்களின் மூலம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து நம் மாநிலத்திற்கும், நம் மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கும் நாள்தோறும் இலட்சக்கணக்கானோர் பயணிப்பதைக் கருத்தில் கொண்டு, அனைத்து இரயில் நிலையங்களிலும், தெர்மல் ஸ்கேனர் மூலம் பயணிகளின் உடல் வெப்ப நிலையைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இரயில் நிலையங்களையும், இரயில் பெட்டிகளையும் தொடர்ந்து கிருமிநாசினி மூலம் தினந்தோறும் சுத்தம் செய்யுமாறு தென்னக இரயில்வேயின் பொது மேலாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது. (இது குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து மத்திய இரயில்வே துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது).

❖ மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கிருமிநாசினி கொண்டு தூய்மைப்படுத்தும் பணிகளை உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சுகாதாரத் துறை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்.

❖ ஒருங்கிணைந்த குளிர்சாதன வசதி (Centralised Air Conditioning) உள்ள இடங்களில் அவற்றை (Vent, Duct) ஆகியவற்றை வாரம் ஒருமுறையாவது கிருமிநாசினி கொண்டு முழுமையாக சுத்தம் செய்ய வேண்டும்.

❖ தலைமைச் செயலகத்தில் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்று வரும் நிலையில், சட்டமன்ற நடவடிக்கைகளைப் பார்வையிட வரும் பொது மக்களை அனுமதிக்க வேண்டாம் என மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில், சட்டமன்றத்திற்கு வரும் பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை என மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் உத்தரவிட்டுள்ளார். எனவே, தலைமைச் செயலகத்திற்கு வருவதை பொது மக்கள் தவிர்க்கவும்.

❖ மாநிலத்தில் செயல்படும் அனைத்து அரசு, மாநகராட்சி மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், பயிற்சி மையங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களும் 31.03.2020 வரை மூட உத்தரவிடப்பட்டுள்ளது. அரசுத் தேர்வுகள் (10 முதல் 12ஆம் வகுப்பு வரை மற்றும் கல்லூரித் தேர்வுகள் – செய்முறைத் தேர்வுகள் (Practical) உட்பட) மற்றும் நுழைவுத் தேர்வுகள் திட்டமிட்டபடி நடைபெறும்.

இத்தேர்வுகள் முடிவடையும் வரை தேர்வு எழுதும் மாணவர்களுக்காக மட்டும் விடுதிகள் மற்றும் உறைவிடப் பள்ளிகள் தொடர்ந்து இயங்கும்.

❖ மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த கல்லூரிகள் தொடர்ந்து இயங்கும்.

❖ அங்கன்வாடி மையங்கள் அனைத்தும் 31.03.2020 வரை மூடப்பட வேண்டும். இம்மையங்களில் உணவருந்தும் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கான உணவுப் பொருட்களை (Dry Ration) அந்தந்த குடும்பத்திடம் அங்கன்வாடி மைய அமைப்பாளர்கள் வழங்க வேண்டும்.

❖ மாநிலத்தில் செயல்படும் அனைத்து திரையரங்குகள், மக்கள் அதிகம் கூடும் வணிக வளாகங்கள் (Malls), கேளிக்கை அரங்கங்கள் (Amusement Parks), நீச்சல் குளங்கள் (Swimming Pools), உடற்பயிற்சி மையங்கள் (Gymnasiums), உயிரியல் பூங்காக்கள் (Zoos) மற்றும் அருங்காட்சியகங்கள் (Museums) 31.03.2020 வரை மூடப்பட வேண்டும்.

❖ ஏற்கெனவே திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் தவிர வேறு எந்த நிகழ்ச்சிகளும் திருமண மண்டபங்களில் நடத்தக்கூடாது.

அவ்வாறு திட்டமிடப்பட்ட நிகழ்வுகளில் கூட குறைந்த அளவில் மக்கள் பங்கேற்க வேண்டும். ஏற்கெனவே திட்டமிடப்பட்டது போக, புதிய நிகழ்ச்சிகள் எதுவும் 31.03.2020 வரை நடைபெறுவதை திருமண மண்டபங்களின் உரிமையாளர்கள் தவிர்க்க வேண்டும்.

❖ திருவிழாக்கள், துக்க நிகழ்வுகள் உட்பட அனைத்து சமூக நிகழ்வுகளிலும், குறைந்த அளவில் மக்கள் கூடினால், கொரோனா வைரஸ் பரவுதல் பெரிய அளவில் தடுக்கப்படும் என சுகாதார வல்லுநர்கள் அறிவுறுத்துகின்றனர். அதனை கடைபிடிக்குமாறு பொது மக்கள் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

❖ அதிகமாக கூட்டம் கூடும் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், கோடைக் கால பயிற்சி வகுப்புகள், முகாம்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், வணிகக் கண்காட்சிகள், கலாச்சார நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்வுகளை நடத்த 31.03.2020 வரை அனுமதி வழங்கக் கூடாது.

❖ அனைத்து விளையாட்டு அரங்குகள், கிளப்புகள், பார்கள் (டாஸ்மாக் பார்கள் உட்பட) கேளிக்கை விடுதிகள் (clubs) போன்றவை 31.03.2020 வரை மூடப்பட வேண்டும்.

❖ மேற்கூறியவற்றைத் தவிர பிற அவசிய மற்றும் அத்தியாவசியப் பணிகள் வழக்கம் போல் தொடர்ந்து நடைபெறும்.

❖ கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்தும் மத்திய மக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதாரத் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளையும், மாநில அரசு வழங்கியுள்ள அறிவுரைகளையும் அனைத்து அரசுத் துறைகளும், பொது நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் தவறாது கடைபிடிக்க வேண்டும்.

❖ அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில், முழுமையாக கை கழுவுவதைப் பற்றியும், தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும், அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதற்குத் தேவையான சோப், கிருமிநாசினி, முகக்கவசம் ஆகியவற்றை போதிய அளவில் இருப்பில் வைத்து, பணிபுரியும் அனைவருக்கும் வழங்க வேண்டும்.

❖ அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆணையாளர்கள், மாவட்ட பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் உள்ளிட்ட தொடர்புடைய அனைத்து அதிகாரிகளும், பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 மற்றும் தொற்று நோய் சட்டம், 1897, மற்றும் தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939ன்படி பிறப்பிக்கட்ட மேற்கண்ட உத்தரவுகள் மற்றும் நடைமுறைகளை சிறிதும் தவறாது நடைமுறைப்படுத்தி, கொரோனா தொற்று நோய் மேலும் பரவாமல் தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

❖ கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளதாலும், சில தனியார் நிறுவனங்கள் வீட்டிலிருந்தே பணி செய்ய தங்கள் பணியாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாலும், பொது மக்கள் குடும்பத்துடன் சுற்றுலா செல்ல வாய்ப்பு இருப்பதாக தவறாகக் கருதி, வெளியில் சுற்றுலா செல்வதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

❖ மேலும், சுற்றுலாவை ஒருங்கிணைக்கும் தனியார் மற்றும் அரசு சுற்றுலா ஒருங்கிணைப்பாளர்கள் 31.03.2020 வரை புதிய சுற்றுலா எதையும் ஒருங்கிணைத்து, பொது மக்களை சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லக் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

❖ சுற்றுலா பயணியர் தங்குமிடம் (Tourist Resorts) அனைத்தும் 31.03.2020 வரை மூடப்பட வேண்டும். சுற்றுலா பயணியர் தங்குமிட உரிமையாளர்கள் எவ்வித முன்பதிவும் (Advance Booking) 31.03.2020 வரை செய்யக் கூடாது.

❖ கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் பிற வழிபாட்டுத் தலங்களில் கூட்டம் கூடுவதை தவிர்க்குமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இவ்விடங்களில், நோய்த் தடுப்புக்கான போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தெர்மல் ஸ்கேனர் முறையில் பரிசோதித்து, எவருக்கேனும் நோய்த் தொற்று இருப்பது கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இந்து சமய அறநிலையத் துறையும், சுகாதாரத் துறையும், மசூதிகள் மற்றும் தேவாலயங்களின் நிருவாகங்களும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

❖ யாரேனும் கொரோனா வைரஸ் காய்ச்சல் பற்றி பொய்யான செய்தியோ, வதந்தியோ அல்லது தேவையற்ற பீதியை செய்தியாகவோ, சமூக வலைதளத்திலோ அல்லது வேறு எந்த வடிவிலோ பரப்பினால், இந்திய தண்டனைச் சட்டம், பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 மற்றும் நடைமுறையில் உள்ள பிற சட்டங்களின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பொதுமக்கள் கீழ்க்கண்ட அறிவுரைகளை பின்பற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார் :

❖ பொதுமக்கள் மற்ற மாநிலங்களுக்கு பயணிப்பதையும், பொது இடங்களில் அதிக அளவில் மக்கள் கூடுவதையும் அடுத்த 15 நாட்களுக்குத் தவிர்க்கவும்,

❖ கூட்டம் நிறைந்த பொது இடங்களுக்கு வயதானவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், குழந்தைகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த நபர்கள் பயணம் செய்வதை தவிர்க்கவும்,

❖ மக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு குறிப்பாக, வழிபாட்டுத் தலங்கள், கடற்கரை, வணிக மையங்கள் (Markets), திருமணங்கள் மற்றும் இதர சமூக விழாக்கள், விருந்துகள் ஆகியவற்றை தவிர்க்குமாறும், தனி மனித சுகாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்குமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

❖ பொதுமக்கள் அனைவரும் தனிநபர் சுகாதாரத்தினை பேணவும், குறிப்பாக வீட்டிற்குள் நுழையும் போதும், அவ்வப்போதும் கைகளை சோப்பு போட்டு சுத்தமாக கழுவுவதை உறுதி செய்யவும், கைகளை சுத்தம் செய்யாமல் முகத்தைத் தொட வேண்டாம் எனவும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் விடுமுறை நாட்களின்போது குழுவாக விளையாடாதவாறு கண்காணிக்கவும், வீட்டிற்குள் நுழைந்தவுடனும், அவ்வப்போதும் கைகளை சோப்பு போட்டு சுத்தமாக கழுவுவதை உறுதி செய்யவும், அனைத்து அரசு அலுவலகங்கள் வழக்கம் போல் இயங்கும். அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்களுக்கு செல்பவர்கள் பாதுகாப்பு கருதி, தங்கள் கைகளை உரிய கிருமிநாசினியைக் கொண்டு தூய்மைபடுத்திக் கொண்ட பின் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ சளி, இருமல், காய்ச்சல் உள்ளவர்கள் அலுவலகம் செல்வதை தவிர்க்கவும், கொரோனா நோய் அறிகுறி உள்ளவர்கள் உடனடியாக அரசு மருத்துவமனையை அணுகி உரிய சோதனை மேற்கொண்டு சிகிச்சை எடுத்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

❖ நோய்க்கான அறிகுறி உள்ள பொது மக்கள் உடனடியாக அரசு மருத்துவமனையை அணுக வேண்டும்.

❖ கொரோனா வைரஸ் சம்பந்தமாக தெரிந்து கொள்ள சுகாதாரத் துறையின் 24 மணிநேர கட்டுப்பாட்டு அறை இயக்கப்படுகிறது. இதன் எண்கள் 104, 044–29510400, 044–29510500, 9444340496 மற்றும் 8754448477.

மேற்சொன்ன அனைத்து உத்தரவுகளும் நாளை (17.03.2020) முதல் நடைமுறைக்கு வரும்.

கொரோனா வைரஸ் நோயை தடுப்பதற்கான முயற்சிகளை ஒவ்வொரு தனி மனிதனும் சுயமாக உணர்ந்து, முழுமையாக மேற்கொண்டு, தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நோய் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

❖ ❖ ❖



கொரோனா வைரஸ் நோய் தொடர்பான நடவடிக்கைகளை தீவிரமாக கண்காணிக்க, சிறப்பு பணிக் குழு அமைக்க உத்தரவிட்டுள்ளேன்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 17.03.2020 அன்று சட்டப்பேரவையில், மாண்புமிகு எதிர்கட்சி துணைத்தலைவர் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அளித்த விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொரோனா வைரஸ் பற்றி இங்கே சொன்னார்கள். நேற்றைய தினம் தான், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் கொரோனா வைரஸ் பற்றி குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து மாலையிலேயே, கொரோனா வைரஸ் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாக அதை தெரிவித்தார். அதனுள் செல்ல விரும்பவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களும் இதைப் பற்றி தெரிவித்தார். அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை. கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையிலே அரசு முழு மூச்சோடு ஈடுபட்டு வருகிறது. ஆகவே, என்னென்ன தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமோ அத்தனை தடுப்பு நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு இருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாக சொன்னார். அச்சப்பட வேண்டிய அவசியமே இல்லை. தமிழ்நாட்டில் ஒருவர் தான் பாதிக்கப்பட்டு இருக்கிறார். கிட்டத்தட்ட 8 கோடி பேர் தமிழகத்தில் இருக்கின்றோம். இன்னும் சொல்லப்போனால், அனைவருமே மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். நானும் மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்திருக்கின்றேன். நீங்களும் அடிக்கடி மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்து கொண்டு இருக்கிறீர்கள். நோய் வருவது இயற்கை. அதை யாராலும் தடுக்க முடியாது. ஏதோ ஒரு ரூபத்தில் அவ்வப்போது அனைவருக்கும் நோய் வரும். ஆனால் இந்த நோயை பொறுத்தவரைக்கும், இந்த கொரோனா வைரஸ் ஒரு அபாயகரமான நோய் என்று உலக நாடுகளிலிருந்து செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. கிட்டத்தட்ட 136 நாடுகளில் பரவி இருப்பதாக செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே இதை வைத்து தான் அச்சப்பட்டு கொண்டு இருக்கிறோம். இது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களும் இந்த அவையிலே தெரிவித்தார்கள்.

அதற்குண்டான முழு விளக்கத்தையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கின்றார். அரசு எந்தெந்த வகையிலே தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்ற முழு விவரங்களையும் தெரிவித்தார். ஆகவே, இதில் அச்சப்பட வேண்டிய தேவையே இல்லை. ஆகவே, சட்டமன்றத்தை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து உறுப்பினர்களுக்கும் முழு பாதுகாப்பு வழங்கப்படும், உங்களுக்கு பரிசோதனை வேண்டுமென்றால், உங்களை பரிசோதிப்பதற்கும், மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கும் அரசு தயாராக இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, நாம் சட்டமன்றத்திற்கு உள்ளே வருகின்ற போது கூட, அனைவரையும் பரிசோதனை செய்து தான் அனுப்புகிறார்கள் என்பதையும் இந்த அவைக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

கொரோனா வைரஸ் நோய் குறித்து என்னுடைய தலைமையில், மூத்த அமைச்சர்கள், அரசுத் துறை செயலாளர்கள், ரயில்வே துறை, விமான போக்குவரத்து துறை உள்ளிட்ட பல்வேறு துறை வல்லுநர்களைக் கொண்டு அவ்வப்போது கூட்டம் நடத்தப்பட்டு, அறிவுரைகள் வழங்கப்படுகிறது. நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து தகுந்த ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது.

மேலும், கொரோனா வைரஸ் நோய் குறித்து மத்திய அரசால் அளிக்கப்படும் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் பரிசீலித்து, மாண்புமிகு அம்மாவின் அரசால் தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கொரோனா வைரஸ் நோய் தொடர்பான நடவடிக்கைகளை தீவிரமாக கண்காணிக்க, அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் அலுவல் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களை கொண்ட சிறப்பு பணிக் குழு (Task Force) ஒன்றை அமைக்க உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். இந்தக் குழுவில்

- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அரசு செயலாளர்,
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
- நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின்
- அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
- தகவல் தொழில்நுட்ப துறையின் அரசு முதன்மைச் செயலாளர்
- தொழில் துறையின் அரசு முதன்மை செயலாளர்,
- போக்குவரத்து துறையின் அரசு முதன்மை செயலாளர்,
- வருவாய் நிருவாக ஆணையர்,
- காவல்துறை தலைமை இயக்குநர்,
- மருத்துவ கல்வி இயக்குநர்,
- பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறையின் இயக்குநர்,
- மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர்,
- தென்னக இரயில்வே பொது மேலாளர்,
- சென்னை விமான நிலைய இயக்குநர்,
- சென்னை துறைமுக பொறுப்பு கழகத்தின் தலைவர்
- பொது சுகாதாரத் துறையின் சார்பாக வல்லுநர் ஒருவரும்,
- தனியார் துறை சார்பாக வல்லுநர் ஒருவரும் கொண்ட குழுவினை அமைக்க உத்தரவிட்டுள்ளேன்.

இச்சிறப்பு பணிக்குழு, அவ்வப்போது சந்தித்து, அரசு வழங்கும் உத்தரவுகளை சரியான முறையில் அமல்படுத்தப்படுகின்றதா என்பதை தீவிரமாக கண்காணித்து, கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தமிழ்நாட்டில் முழுமையாக தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவும், அரசுக்கு உரிய அறிவுரைகளை வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அரசு எடுத்துவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் தங்கள் ஒத்துழைப்பினை நல்கி தங்களை தற்காத்துக்கொள்ள வேண்டும்!

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பத்திரிகை செய்தி – 19.03.2020

மாண்புமிகு அம்மாவின் அரசு, “வருமுன் காப்போம்” என்ற முதுமொழிக்கு ஏற்ப, கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுக்க பல்வேறு தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இந்த நோய்த் தொற்றைத் தடுக்க இனி எடுக்க வேண்டிய தீவிர முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்கள்:–

★ ஏற்கெனவே 09.03.2020, 13.03.2020 மற்றும் 16.03.2020 அன்று இது சம்பந்தமாக கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, விரிவான அறிவுரைகள் மற்றும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. இதனை அனைத்து துறை அதிகாரிகளும் தீவிரமாக கடைபிடிக்க வேண்டும்.

★ அனைத்து மாவட்டங்களிலும் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்கான படுக்கை வசதி உட்பட அனைத்து வசதிகளையும் கொண்ட சிறப்பு மருத்துவமனைகளை உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

★ வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுடன், சுகாதாரத் துறையைச் சேர்ந்த மருத்துவர்கள் காணொலிக் காட்சி மூலம் தொடர்பு கொண்டு மருத்துவ அறிவுரைகளும், ஆற்றுப்படுத்துதலையும் தொடர்ந்து வழங்க வேண்டும்.

★ அனைத்து மருத்துவமனைகளிலும் நோய்த் தடுப்பு மற்றும் சுகாதாரப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும். தூய்மைப் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்புக் கவசங்கள், பாதுகாப்பு உடைகள், கையுறைகள், காலணிகள் ஆகியவை போதிய அளவில் வழங்கப்பட வேண்டும்.

★ அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில், மக்கள் கூடும் இடங்களில் கிருமிநாசினியை நாளொன்றுக்கு இரண்டு முறை தெளிக்க வேண்டும்.

★ வாரச் சந்தைகள் அனைத்தும் 31.03.2020 வரை மூடப்பட வேண்டும்.

★ மக்கள் மிக அதிகமாகக் கூடக்கூடிய நீதிமன்றங்கள், விமான நிலையம், இரயில்வே நிலையம், மெட்ரோ இரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் தீவிர நோய்த் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நாள் ஒன்றுக்கு மூன்று முறை கிருமிநாசினி தெளிக்க வேண்டும்.

★ தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், சிறு, குறு மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நோய்த் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இந்நிறுவனங்களில் நோய் தடுப்புப் பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, இந்நிறுவனங்களில் உள்ள உணவகங்களை மிகவும் தூய்மையாக பராமரிக்க வேண்டும். மேலும், இவ்வலுவலகங்கள் பணியாளர்களின் எண்ணிக்கையை குறைக்கவும், அவர்கள் வீட்டிலிருந்தே பணி செய்ய அனுமதிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ தமிழ்நாட்டில் உள்ள பெரிய நகரங்களில்‘ ஏற்கெனவே, வணிக வளாகங்கள் (Malls) மூடப்பட்டுள்ள நிலையில்,

தற்போது மக்கள் அதிகம் செல்லக்கூடிய ஒருங்கிணைந்த குளிர்சாதன வசதி (Centralised Air Conditioning) கொண்ட பெரிய ஜவுளிக் கடைகள், பெரிய நகைக் கடைகள், பல்வகை பொருட்களை விற்பனை செய்யும் மிகப்பெரிய கடைகள் போன்றவற்றில் அதிக மக்கள் கூட்டம் கூடுவதால், இவை நாளை முதல் மூடப்படும். எனினும், நகைக் கடை போன்றவற்றில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட ஆர்டர்படி பொருட்களை பெற்றுச் செல்ல மட்டும் ஒரு தனி வழியை பயன்படுத்தலாம்.

★ அத்தியாவசியப் பொருட்கள் விற்கும் மளிகைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள், காய் கனிக் கடைகள், மருந்தகங்கள் மற்றும் உணவகங்கள் ஆகியவை வழக்கம் போல் செயல்படும்.

★ சென்னையில் வடபழனி அருள்மிகு முருகன் திருக்கோவில், திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி பெருமாள் திருக்கோவில், மைலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோவில், மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில், திருச்செந்தூர் அருள்மிகு முருகன் திருக்கோவில், ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாத சுவாமி திருக்கோவில், பழனி அருள்மிகு முருகன் திருக்கோவில், திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோவில், திருத்தணி அருள்மிகு முருகன் திருக்கோவில், காஞ்சி அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோவில், திருச்சி அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் திருக்கோவில், ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாத சுவாமி திருக்கோவில் உள்பட அதிக மக்கள் வரக்கூடிய மிகப் பெரிய திருக்கோவில்களில் நாளை முதல் 31.03.2020 வரை பக்தர்கள் தரிசனம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும். இருப்பினும், ஆகம விதிகளின்படி, திருக்கோவில்களில் அனைத்து கால பூஜைகளும் எப்பொழுதும் போல் நடைபெற வேண்டும்.

★ அதே போன்று, அதிக மக்கள் வரக்கூடிய பெரிய தேவாலயங்கள் மற்றும் மசூதிகள் / தர்காக்களில் 31.03.2020 வரை பொதுமக்கள் வருவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க, அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் சம்பந்தப்பட்ட நிருவாகிகளிடம் பேசி தகுந்த அறிவுரை வழங்கி, அதனை கடைபிடிக்க கேட்டுக் கொள்ள வேண்டும்.

★ பிற மாநிலங்களில் இருந்து நோய் பரவ வாய்ப்புள்ளதால், மாநிலங்களுக்கு இடையேயான பேருந்து போக்குவரத்தை குறைக்க முடிவு செய்யப்பட்டது. அதே போல், பிற மாநிலங்களில் இருந்து வரும் இரயில் போக்குவரத்தையும் கணிசமாகக் குறைக்க தென்னக இரயில்வேயின் பொது மேலாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

★ விமான நிலையங்களில், உள்நாட்டு முனையத்தில் சோதனைகளை தீவிரப்படுத்தவும், மாநிலங்களுக்கு இடையேயான இரயில் மற்றும் சாலை மார்க்கமாக வரும் பயணிகளை தீவிரமாக சோதனை செய்யவும் சம்பந்தப்பட்ட துறைகள் அறிவுறுத்தப்படுகிறது.

★ இரயில் மற்றம் சாலை மார்க்கமாக வரும் பயணிகளை தீவிரமாக சோதனை செய்யவும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

★ தனிமைப்படுத்தப்பட வேண்டிய பயணிகளை அழைத்துச் செல்வதற்கென விமான நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்களில் சிறப்பு வாகன ஏற்பாடுகளை செய்ய அறிவுறுத்தப்பட்டது. அத்தகைய வாகனங்களை கிருமிநாசினி மூலம் அடிக்கடி தூய்மைப்படுத்தியும், அதன் ஓட்டுநர்கள் முழு பாதுகாப்புடன் வாகனங்களை இயக்குவதற்கான வசதிகளை செய்யவும் அறிவுறுத்தப்பட்டது.

★ கிருமிநாசினி தெளிப்பான்கள் மற்றும் பிற உபகரணங்கள் தேவையான அளவு பேரிடர் நிவாரண நிதியில் இருந்து வாங்கி பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் இத்தகைய நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் தங்கள் முழு ஒத்துழைப்பினை நல்கி, தங்களை தற்காத்துக் கொள்ள வேண்டும் என்றும், அரசுடன் மக்களும் இணைந்து இந்த கொரோனா வைரஸ் நோயினை வென்று, நோயற்ற தமிழ்நாட்டினை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

பொதுமக்கள் "செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை" பற்றி பெரிய அளவிலான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.03.2020 அன்று, சட்டப்பேரவையில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க அரசின் பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அளித்த விளக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம், கொரோனா வைரஸ் குறித்து பல்வேறு அச்சங்களையும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு எப்படி மேற்கொள்ள வேண்டும் என்ற விவரங்களையும் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். அரசின் நிலைப்பாட்டை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

- எனது தலைமையிலான மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், இதுவரை 4 முறை கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தி தினசரி நிலவரங்களை ஆராய்ந்து, பல்வேறு உத்தரவுகளை உடனுக்குடன் வழங்கி வருகின்றது.
- பொது சுகாதாரச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன.
- மாநிலம் முழுவதும் தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்கவும், நிலைமைக்கு ஏற்றாற்போல் நடவடிக்கை எடுக்கவும், தலைமைச் செயலாளர் தலைமையில், ஒரு சிறப்பு பணிக் குழு (Special Task Force) அமைக்கப்பட்டுள்ளது.
- பொதுமக்கள் "செய்யக் கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை" பற்றியும், தன்னைத் தானே தனிமைப்படுத்திக் கொள்வது பற்றியும், பெரிய அளவிலான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 31.03.2020 வரை அனைத்து பள்ளிகள், கல்லூரிகள், திரையரங்குகள், வணிக வளாகங்கள், கேளிக்கை விடுதிகள், உடற்பயிற்சிக் கூடங்கள், நீச்சல் குளங்கள், சுற்றுலாத் தலங்கள், ஆன்மீகத் தலங்கள், வாரச் சந்தைகள், மிகப் பெரிய ஜவுளிக் கடைகள், நகைக் கடைகள் உள்ளிட்ட மக்கள் அதிக அளவில் கூடும் இடங்கள் மூட உத்தரவிடப்பட்டுள்ளது.
- பெரிய அளவிலான கூட்டங்கள் கூடுவது தடை செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஒன்று

கூடுவதைத் தவிர்க்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

- அனைத்து விமான நிலையங்கள், இரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் ஆகியவற்றில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது வரை சுமார் 2 இலட்சம் பயணிகள் பரிசோதிக்கப்பட்டு, அதில் 2 ஆயிரத்து 984 பயணிகள் வீடுகளில் கண்காணிக்கப்பட்டும், 32 பயணிகள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டும், ஆய்வகப் பரிசோதனைக்குப் பின்னர், நோய் உறுதி செய்யப்பட்ட 3 நபர்களுக்கு தகுந்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு, அதில் ஒருவர் வீடு திரும்பியுள்ளார்.

- மாநிலங்களுக்கு இடையிலான எல்லைப் பகுதிகளில் சோதனைச் சாவடிகள் அமைத்து தீவிர நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- போதுமான அளவு நிதி ஒதுக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக பொதுமக்கள் கூடும் இடங்களிலும், பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும், தீவிர நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- நீதிமன்றங்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் போதுமான அளவு தனிமைப்படுத்தி கண்காணிக்கும் பிரிவுகளை (Isolation Ward) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை கண்டறிந்து, அதற்குத் தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

- மத்திய அரசு மற்றும் அகில இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் (ICMR) வழிகாட்டுதலின்படி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை துரிதமாக செயல்பட்டு வருகிறது.

- மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் 19.03.2020 அன்று வெளியிட்ட 9 அம்ச நோய்த் தடுப்பு வழிமுறைகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து தீவிரமாக கடைபிடித்து வருகிறது.

- வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற பயணிகள் அனைவரையும் பரிசோதித்து, நோய்த் தொற்று அறிகுறி உள்ளவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றனர். அவருடன் பயணம் செய்த பிறர் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு, நம் மருத்துவர்கள் அவர்களை காணொலிக் காட்சி மூலமாக தொடர்ந்து கண்காணித்து தேவையான மருத்துவ அறிவுரைகளையும், ஆற்றுப்படுத்துதலையும் வழங்கி வருகின்றனர்.

- தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அரசு எடுக்கும் தடுப்பு நடவடிக்கைகளில் தங்களை சுயமாகவும், முழுமையாகவும் ஈடுபடுத்திக் கொண்டு, கொரோனா வைரஸ் தொற்று தமிழ்நாட்டில் பரவாமல் இருக்க ஒத்துழைக்க வேண்டும்.

- கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை முடிக்கிவிட மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பல்வேறு துறைகளுக்கு 60 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான மருத்துவ உபகரணங்கள், கிருமி நாசினிகள், முகக் கவசங்கள், கவச உடைகள், காலணிகள் ஆகியவை சம்பந்தப்பட்ட துறையில் வாங்கி மருத்துவம் மற்றும் களப்பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

- தற்போது சட்டப்பேரவைக் கூட்டம் நடந்து வரும் நிலையில், தலைமைச் செயலகத்திற்கு உள்ளே வரும் அனைத்து வாகனங்களிலும் கிருமிநாசினி தெளிக்கப்படுகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைவருக்கும் உடல் வெப்ப அளவைக் கண்டுபிடித்தும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

- பல்வேறு சிரமங்களுக்கிடையே கொரோனா வைரஸ் தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை அர்ப்பணிப்பு உணர்வோடு பணி மேற்கொண்டு வரும் அரசு அதிகாரிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் ஆகிய அனைவருக்கும் இத்தருணத்தில் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சட்டமன்றத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். சட்டமன்றம் நடைபெற்று கொண்டு இருந்தால் தான் நாட்டினுடைய நிலைமையை மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும். அதற்காகத் தான் சட்டமன்றம் கூடுகிறது. ஆகவே, மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகளை இங்கே தான் விவாதிக்க முடியும். நீங்கள் கூட என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகின்றது என்ற விவரத்தை சொல்லுகின்றீர்கள் என்றால், சட்டமன்றம் நடைபெற்று கொண்டு இருக்கின்ற காரணத்தினால் தான் நீங்கள் இங்கே தெரிவிக்கின்றீர்கள். அதற்குண்டான நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கின்றோம்.

ஆகவே, மக்கள் பணியாற்றுவதற்காகத் தான் மக்கள் நம்மை தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கின்றார்களே தவிர, நாம் இங்கே கூடியதால் நோய் ஏற்படும் என்ற அச்சம் தேவையில்லை. ஏன் என்று சொன்னால், இது வெளிநாட்டில் இருந்தும், வெளி மாநிலத்தில் இருந்தும் தான் இங்கே இந்த தொற்று நோய் நம்முடைய பகுதிக்கு வருகின்ற காரணத்தினால், அதை தடுக்கின்ற பணியிலே அரசு முழு மூச்சுடன் ஈடுபட்டு கொண்டு இருக்கிறது. அந்த விவரத்தை தான் நான் இங்கே முழுமையாக தெரிவித்திருக்கின்றேன்.

இன்னும் சில கருத்துக்களை சொன்னார்கள். சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றது என்று சொன்னீர்கள். எந்த சிறு தொழிற்சாலைகளும் மூடப்படவில்லை, இயங்கிக் கொண்டு தான் இருக்கின்றது. அதில் அச்சப்பட வேண்டியதில்லை. தொழிலாளர்கள் பாதுகாப்பாக பணியாற்றுவதற்கு தொழிலாளர் நலத் துறை மூலமாகவும், அதேபோல நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்களும், அதனுடைய துறை செயலாளரும் தகுந்த அறிவுரைகளை வழங்கி இருக்கின்றார்கள். அவர்களுக்கு போதுமான பாதுகாப்பு, இந்த நோய் தடுப்பு நடவடிக்கைகள் முழுவதும் அவர்கள் தெரிந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எந்தெந்த இடத்தில் எல்லாம் அதிகமான மக்கள் கூடுகிறார்கள் என்ற விவரத்தை எல்லாம் நான் ஏற்கனவே தெரிவித்தேன். ஏற்கனவே நான்கு முறை கூட்டங்கள் கூட்டப்பட்டு, அந்த கூட்டத்திலே மாண்புமிகு மூத்த அமைச்சர்கள், துறையினுடைய அமைச்சர்கள், துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் எல்லாம் கலந்து ஆலோசித்து, முடிவெடுத்து, அந்த முடிவின் அடிப்படையில் வேகமாக, துரிதமாக நோய் தடுப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். யாரும் அச்சப்பட வேண்டியதில்லை. வெளிநாட்டிலிருந்தும், வெளி மாநிலத்திலிருந்தும் வந்தவர்களை பரிசோதனை செய்து, அந்த பரிசோதனையின் அடிப்படையில் அவர்களுக்கு நோய் கண்டறியப்பட்டால், அவர்களை தனிமைப்படுத்தி, அதற்குண்டான சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதில்கூட ஒருவருக்கு பூரண குணமாகி வீடு திரும்பி இருக்கின்றார். அவரோடு வந்தவர்களுக்கு எல்லாம், அவர்களையும் வீட்டிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு, காணொலிக் காட்சி மூலமாக அவர்களை தொடர்பு கொண்டு, அவர்களது உடல்நிலை குறித்து மருத்துவர்கள் கேட்டறிந்து, அதற்கு தேவையான சிகிச்சை அளித்து கொண்டு இருக்கிறார்கள். யாரும் அச்சப்பட வேண்டியதில்லை. தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தான் அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அமெரிக்கா, இத்தாலி போன்ற நாடுகளில் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தினால் தான் அந்த நோய் அங்கு பரவிவிட்டது. அதற்கு பிறகு தான் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்தில் அப்படி அல்ல. தமிழகத்தில் இருக்கின்ற யாருக்கும் வரவில்லை. நேற்றைய தினம் கூட, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், மலேசியா, பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து வர வேண்டும், அப்படி வருகின்றவர்களுக்கு தான் இந்த நோய் இருக்கின்றது. இங்கே இருப்பவர்களுக்கு இல்லை. ஆகவே, நாம் உணர்வுபூர்வமாக நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் வெளிநாட்டிலிலே பணிபுரிய சென்றவர்கள், ஏதாவது நோய்வாய் பட்டுவிட்டால் அவர்களுடைய பெற்றோர்கள் அச்சப்படுகின்றார்கள். அங்கே படிக்கின்ற மாணவர்களும், பணியில் இருக்கின்றவர்களும் அச்சப்படுகின்றார்கள். அது இயற்கை தான். ஆகவே, தனது தாய்நாட்டிற்கு செல்ல வேண்டும் என்ற விருப்பத்தின் பேரிலே அவர்கள் நம்முடைய நாட்டிற்கு வருவதற்கு விருப்பம் தெரிவித்து, அதன் அடிப்படையிலே மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுத்து, அவர்கள் அழைத்து வரப்படுகிறார்கள். அப்படி அழைத்து வரப்படுபவர்களுக்குத் தான், அந்த நாட்டில் நோய் தொற்று இருக்கின்ற காரணத்தினாலே, இங்கே பரிசோதனையிலே கண்டுபிடித்து, தனிமைப்படுத்தப்பட்டு, குணப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றோமே தவிர, தமிழ்நாட்டில் இருந்து ஒருவருக்கு கூட இந்த கொரோனா வைரஸ் ஏற்படவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அச்சப்பட வேண்டியதில்லை. முழுமையான பரிசோதனை செய்யப்படுகிறது. நான் கூறியது போல, இரயில், விமானம், பேருந்து ஆகியவற்றின் மூலம் வருகின்றவர்களுக்கு பரிசோதனை செய்யப்படுகிறது. மற்ற மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்திற்கு வருகின்ற போது, நம்முடைய மாநில எல்லையிலே தடுத்து நிறுத்தி, பரிசோதனை செய்து, அந்த பரிசோதனையிலே ஏதாவது நோய் அறிகுறி தென்பட்டால் உடனடியாக அவர்களை Isolation Ward-லே சேர்க்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு, உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இப்படி சட்டமன்றம் நடைபெற்று கொண்டு இருந்தால் தான், மக்களுடைய அச்ச உணர்வை போக்க முடியும். இதன்மூலமாக செய்தி வெளியே வரும், அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கின்றது என்ற செய்தி வெளியே போகும். அதேபோல், மக்களிடத்தில் இருக்கின்ற பிரச்சனைகள் எதிர்க்கட்சிகள் மூலமாக அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து, அரசு அதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.500 கோடி பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து வழங்கப்படும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
23.03.2020 அன்று, சட்டப்பேரவையில்,
தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க
பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும்
தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள்
குறித்து அளித்த விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு போர்க்கால அடிப்படையில் எடுத்துவரும் அதே நேரத்தில், இந்த நோயால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான கூடுதல் வசதிகளை அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்திட தேவையான திட்டங்களையும் முழு வீச்சில் செயல்படுத்தி வருகிறது.

இந்த சூழ்நிலையில், மாநில அரசு மற்றும் மத்திய அரசின் முயற்சிகளுக்கு தமிழக மக்கள் அளித்துள்ள ஏகோபித்த ஆதரவுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, நேற்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட சுய ஊரடங்கு நிகழ்வு தமிழ்நாட்டில் முழுமையாக கடைபிடிக்கப்பட்டது. இது தமிழகத்தில் இன்று காலை 5.00 மணி வரை நீட்டிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மாநிலங்களுக்கு இடையிலான பஸ் போக்குவரத்தும், மெட்ரோ இரயில் போக்குவரத்தும் 31.03.2020 வரை ரத்து செய்யப்பட்டது. நாட்டின் பல பகுதிகளிலும் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்து வரக் கூடிய சூழ்நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கைகளையும் இந்த அரசு திட்டமிட்டு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

முதற்கட்டமாக, அரசு மருத்துவமனைகளில் தற்போது உள்ள 92,406 உள்நோயாளி படுக்கை வசதிகளில், 9,266 படுக்கைகளை கொரோனா வைரஸ் சிகிச்சைக்கு தேவையான தனிமைப்படுத்தப்பட்ட படுக்கைகளாக மாற்றப்பட்டுள்ளன. தேவைக்கேற்ப இந்த எண்ணிக்கை மேலும் உயர்த்தப்படும். இது தவிர, தற்பொழுது கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய கட்டடங்களில் கொரோனா வைரஸ் சிகிச்சைக்காக கூடுதலாக படுக்கை வசதிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. மேலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள அவசர சிகிச்சை அதிகம் தேவைப்படாத அரசு மற்றும் மத்திய அரசு மருத்துவமனைகளிலும், கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இவ்வாறு படுக்கை வசதிகளை எற்படுத்தும்போது, தீவிர சிகிச்சை வசதிகளை உருவாக்குவதற்காக, 560 வெண்டிலேட்டர்கள், மானிட்டர்கள், அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும், 500 தீவிர சிகிச்சை படுக்கை வசதிகளை ஏற்படுத்த தேவையான மருத்துவ கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. கொரோனா வைரஸ் சிகிச்சைக்கு தேவையான அனைத்து மருந்துகளும் போதிய அளவு கொள்முதல் செய்யப்பட்டு இருப்பில் உள்ளன.

தனியார் மருத்துவமனை நிருவாகங்களோடு கலந்து ஆலோசிக்கப்பட்டு, தமிழகத்திலுள்ள பெரிய தனியார் மருத்துவமனைகளிலும், ஏற்கெனவே இருக்கக் கூடிய படுக்கை வசதிகளில் 750 படுக்கை வசதிகள் கொரோனா வைரஸ் சிகிச்சைக்கான தனி படுக்கை வசதிகளாக மாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனைகளும் முழு மனதோடு அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை தர முன்வந்துள்ளன.

தவறான தகவல்களை பரப்பும் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது பொது சுகாதார சட்டம் – 1939இன் விதி 41, 43, 44இன் படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நபர், அதற்கான அறிகுறிகள் தென்பட்டு, வேலை செய்யும் இடத்திலோ / விடுதியிலோ / வீட்டிலோ இருந்தால், அவரைப் பற்றிய தகவல்களை அருகாமையில் உள்ள சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சுகாதார நிலையங்கள் அல்லது 24 மணி நேர மாநில கட்டுப்பாட்டு அறைக்கு உடனடியாக தெரிவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இது தொடர்பான தகவல்களை உடனுக்குடன் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தொடர்பு எண்ணிலும் (044–29510500, 29510400 மற்றும் கைபேசி எண்.94443 40496, 87544 48477 மற்றும் இலவச சேவை எண்.1800 120 555550) ஆகிய மையங்களில் உடனடியாக தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது. தவறும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை மேலாளர், விடுதி உரிமையாளர் மற்றும் குடும்பத் தலைவர் ஆகியோரின் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பாக இன்று (23.03.2020) நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் கீழ்கண்ட உத்தரவுகளை நான் வழங்கியுள்ளேன் :–

- ஏற்கெனவே வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களுக்கு பயணம் செய்தவர்களின் வீட்டுக் கதவில், “வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள்” என்ற விபரம் ஒட்ட வேண்டும்.
- இந்த பட்டியலின் விபரம் காவல் துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் களத்தில் உள்ள சுகாதாரத் துறை அலுவலர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். இதனால், தனிமைப்படுத்தப்பட்டவர்களுடன் பிற மக்கள் தொடர்பு கொள்வது தவிர்க்கப்படும்.
- தனியாரிடம், கொரொனா வைரஸ் நோய் தொற்றை கண்டுபிடிக்கும் பரிசோதனை வசதியையும் பயன்படுத்தி, பரிசோதிக்க வேண்டிய இனங்களை உடனுக்குடன் பரிசோதித்து முடிக்க வேண்டும்.
- வெளிநாடு பயணித்தோர் மற்றும் அவர்களுடன் தொடர்பில் இருந்தோர் ஆகியோரை தீவிரமாக கண்காணித்து, சமுதாயத்தின் நலன் கருதி, சுய தனிமைப்படுத்துதல் மூலம், அவர்கள் யாரும் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளாமல் இருப்பதை கண்காணிக்க வேண்டும்.
- தனியார் மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட நோயாளிகளின் மருத்துவ சேவைக்கென, 25% ஒதுக்க வேண்டும்.
- சோதனைச் சாவடிகளில் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் அதிக அளவில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.
- அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்படும் மளிகைக் கடைகள், காய்கறிக் கடைகள், பழக்கடைகள், பால் அங்காடிகள் போன்ற இடங்களில் தூய்மையைப் பராமரிப்பதை, உள்ளாட்சி அமைப்புகள் முறையாக கண்காணித்து, தூய்மைப்படுத்த வேண்டும்.
- காவல்துறை, இத்தகைய கடைகளில் மக்கள் அதிகம் கூடாதவாறு கண்காணிக்க வேண்டும்.
- சிறு, குறு மற்றும் பெரிய தொழில் நிறுவனங்கள் 50% ஊழியர்களை வைத்து பணியாற்றுமாறு

கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். எனினும், மருத்துவ உபகரணங்கள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை தயார் செய்யும் நிறுவனங்களுக்கு இது பொருந்தாது. அவர்கள் வழக்கம்போல் செயல்படலாம்.

- கொரோனா நோய்த் தடுப்பு பணிகள் தினந்தோறும் மாவட்ட வாரியாக கண்காணிக்கப்படுகிறது. இதுவரை, என் தலைமையில் 6 முறை உயர் அலுவலர்கள் மற்றும் அமைச்சர்களுடன் கூட்டங்கள் தலைமைச் செயலகத்தில் நடத்தப்பட்டு, உரிய அறிவுரைகள் வழங்கி, அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- தலைமைச் செயலாளர் தலைமையில் Task Force அமைக்கப்பட்டு, இந்தக் கூட்டமும் அவ்வப்போது நடத்தப்படுகிறது. இதுவரை, மாவட்ட ஆட்சியர்களுடன் 3 முறை தலைமைச் செயலாளர், காணொலிக் காட்சி மூலம் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி போதிய அறிவுரைகள் வழங்கியுள்ளார்.
- மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சரும், மாவட்ட ஆட்சியர்களுடனும், சுகாதாரத் துறை அலுவலர்களுடனும், அடிக்கடி காணொலிக் காட்சி மூலம் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, அறிவுரைகள் வழங்கி வருகிறார். கள ஆய்வுகள் மேற்கொண்டு, சூழ்நிலை அவ்வப்போது கண்காணிக்கப்படுகிறது.
- அதேபோல, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், தங்களுடைய துறைகளின் வாயிலாக நாட்டு மக்களுக்கு என்னென்ன தேவையோ அதை எல்லாம் செய்வதற்கும், தடுப்புப் பணிகள் மேற்கொள்வதற்கும் அறிவுறுத்தி வருகிறார்கள்.
- நான் நேரடியாக தினந்தோறும் ஆய்வு செய்து நிலைமையை கண்காணித்து வருகிறேன்.

மக்கள் இந்த சூழ்நிலையின் தீவிரத்தை உணர்ந்து முழு மனதோடும், மன உறுதியோடும் தமிழ்நாடு அரசோடு தோளோடு தோள் நிற்க வேண்டும். அனைவரும், குறிப்பாக வெளிநாடுகள் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து தமிழகம் திரும்பியவர்கள், முழுமையான தகவல்களை சுகாதாரத் துறைக்கு அளித்து முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று வேண்டி வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 100 ஆண்டுகளில் இவ்வுலகம் சந்தித்திடாத இத்தகைய பெரும் சவாலை நாம் வெற்றி கொள்ள வேண்டிய இத்தருணத்தில், மக்களின் தொடர் ஆதரவும், நடைமுறை ஒழுக்கமும், சுய தனிமைப்படுத்தலும் உடனடி தேவை என்பதை மீண்டும் ஒருமுறை அன்புடன் வலியுறுத்துகிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு தொடர்ந்து கொரோனா வைரஸ் தடுப்பு

நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நான் ஏற்கெனவே பத்திரிகைகள் வாயிலாகவும், தொலைகாட்சிகளின் வாயிலாகவும் இதை தெரிவித்திருந்தேன். அதன்படி, இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் அடிப்படையிலே, மாநிலத்திலே செயல்படும் அனைத்து அரசு, மாநகராட்சி, தனியார் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், பயிற்சி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்கள் 31.03.2020 வரை மூட வேண்டும் என்று நான் ஏற்கனவே உத்தரவு வழங்கி அது நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. அதேபோல, மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த கல்வி நிறுவனங்கள் மட்டும் தொடர்ந்து இயங்கும். அங்கன்வாடி மையங்கள் அனைத்தும் 31.03.2020 வரை மூடப்படும் என்று அறிவுறுத்தப்பட்டு அத்தனையும் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. மாநிலத்தில் செயல்படும் அனைத்து திரையங்குகள், மக்கள் அதிகம் கூடும் வணிக வளாகங்கள், கேளிக்கை விடுதிகள், நீச்சல் குளங்கள், உடற்பயிற்சி மையங்கள், உயிரியல் பூங்காக்கள், அருங்காட்சியகங்கள் 31.03.2020 வரை மூடப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது.

ஏற்கெனவே திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் தவிர வேறு எந்த ஒரு நிகழ்ச்சியும் திருமண மண்டபத்தில் நடத்தக் கூடாது. அவ்வாறு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகளில் கூட குறைந்த அளவில் மக்கள் பங்கேற்க வேண்டும். ஏற்கனவே திட்டமிடப்பட்டதை தவிர, புதிய நிகழ்ச்சிகள் எதுவும் 31.03.2020 வரை நடைபெறுவதை திருமண மண்டபத்தின் உரிமையாளர்கள் தவிர்க்க வேண்டும் என்றும் உத்தரவு வழங்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோல, திருவிழாக்கள், துக்க நிகழ்வுகள் உள்ளிட்ட அனைத்து சமூக நிகழ்வுகளிலும் மக்கள் குறைந்த அளவில் கூடினால் கொரோனா வைரஸ் பரவுவது பெரிய அளவில் தடுக்கப்படும் என சுகாதார வல்லுநர்கள் அறிவுறுத்தியதன் பேரில், அதனையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று மக்களை கேட்டுக் கொண்டு, அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மக்களும் கடைப்பிடித்து வருகிறார்கள். அதேபோல, அதிகம் கூட்டம் கூடும் ஊர்வலங்கள், கோடைக்கால பயிற்சி வகுப்புகள், முகாம்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், வணிக கண்காட்சிகள், கலாச்சார நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்வுகள் நடத்த 31.03.2020 வரை அனுமதி வழங்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்து அதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. அனைத்து விளையாட்டு அரங்குகள், கிளப்புகள், பார்கள், கேளிக்கை விடுதிகள் போன்றவை 31.03.2020 வரை மூடப்பட வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டதை தவிர, பிற அவசியம் மற்றும் அத்தியாவசிய பணிகள் வழக்கம் போல் தொடர்ந்து நடைபெறும். கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்த மத்திய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை வழங்கியுள்ள வழிகாட்டு நெறிமுறைகளையும், மாநில அரசு வழங்கியுள்ள அறிவுரைகளையும் அனைத்து அரசு துறைகளும், பொது நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும், தவறாது கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு, இன்றைக்கு தமிழகத்திலே கொரோனா

வைரஸ் தடுப்புப் பணிகள் முழு முயற்சியுடன் நடைபெற்று கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதோடு, விமான நிலையத்திலே 2,05,391 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டது. வீட்டு கண்காணிப்பிலே 9,424 பேர் இருக்கின்றார்கள். அரசு கண்காணிப்பிலே 198 பேர் இருக்கின்றார்கள். அரசு மருத்துவமனையிலே Isolation Ward-இல் 54 பேர் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்கள். அரசு நோய் தடுப்புப் பணிகளிலே முழு மூச்சுடன் ஈடுபட்டு, அனைத்து வகையிலும் மருத்துவர்களை ஈடுபடுத்தி, இந்த நோய் தடுப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அதுமட்டுமல்லாமல், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் முழுமையாக இதில் ஈடுபடுத்தப்பட்டு, இன்றைக்கு அர்ப்பணிப்பு உணர்வோடு இவர்கள் எல்லாம் பணியாற்றி வருகின்றார்கள். அவர்களை இந்த நேரத்திலே அரசின் சார்பாக பாராட்ட கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அதேபோல, இதற்கு ஒத்துழைப்பாக நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, சுகாதாரத் துறை ஆகிய துறைகளின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள், இராணுவம், விமான நிலையம், இரயில்வே துறை, தூய்மைப் பணியாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த பணியாளர்களும், தங்களை இதில் ஈடுபடுத்திக் கொண்டு, அர்ப்பணிப்பு உணர்வோடு அரசுக்கு துணை நின்று, முழு மூச்சோடு இந்த கொரோனா வைரஸ் தடுப்புப் பணியிலே ஈடுபடுத்தி கொண்டுள்ளார்கள். மேலும், இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு முதற்கட்டமாக 60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், அதை கூடுதலாக்கி இப்பொழுது 500 கோடி ரூபாய் கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும்.

எங்களுடைய அரசை பொறுத்தவரைக்கும், எந்த ஒரு மக்களும் பாதிக்கப்படக் கூடாது என்பது தான் எங்களது நோக்கம். அந்த நோக்கத்தின் அடிப்படையிலே நாங்கள் செயல்பட்டு கொண்டு இருக்கின்றோம். அதற்கு நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து துறை அலுவலர்களும், உயர் அதிகாரிகளும், இரவு பகல் பாராமல் அரசுக்கு ஒத்துழைப்பு நல்கி நோய் தடுப்புப் பணியிலே தங்களை முழு மனதோடு ஈடுபடுத்திக் கொண்டு, தமிழகத்திலே கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுப்பதற்கு அரசிற்கு துணை நிற்கும் அனைவருக்கும் இந்த நேரத்திலே பாராட்டுதல்களையும், நன்றிகளையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு காவல்துறைக்கும் இந்த நேரத்திலே நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சிகளை பொறுத்தவரைக்கும், இந்த அவையிலே பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். இன்றைக்கு அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்து வருகிறது, இன்னும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற விவரத்தை எல்லாம் கேட்டார்கள். அத்தனை விவரங்களையும் நானும் தெரிவித்தேன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்களும் தெளிவாக விளக்கமாக அத்தனைக்கும் பதில் அளித்தார். அரசு எடுக்கின்ற ஒவ்வொரு நடவடிக்கையும், நோயை தடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தான். நான் குறிப்பிட்ட அத்தனை நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. ஏற்கனவே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் சுகாதாரத் துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்கமாக அவையிலே தெரிவித்து இருக்கின்றார். ஆனால் இன்றைக்கு எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் என்ன காரணத்திற்கு என்று தெரியவில்லை, திடீரென்று இன்றைக்கு அவையை புறக்கணித்து இருக்கின்றார்கள். மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் அவர்கள் கூட இன்றைக்கு அலுவல் ஆய்வுக் கூட்டம் காலை 10.15 மணிக்கு நடைபெறும் என்று ஏற்கனவே தெரிவித்தார்கள். அவையிலும் அதைப்பற்றி தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலே இன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழு கூட்டம் மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதிலே பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. அந்த முடிவுகளை எல்லாம் மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் அவர்கள் அறிவிப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய அரசை பொறுத்தவரைக்கும், கொரோனா நோயின் பாதிப்பால் ஒரு உயிரைக் கூட இழப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. முதலமைச்சர் முதல், துணை முதலமைச்சர், அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் அர்ப்பணிப்பு உணர்வோடு இதற்காக பணியாற்றிவோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து கொள்கிறேன். எங்களை பொறுத்தவரைக்கும், தமிழகத்தை பொறுத்தவரைக்கும், இது ஒரு மிகப் பெரிய நோய். இதனை மிகப் பெரிய சவாலாக எடுத்துக் கொண்டு, இந்த நோய் தடுப்புப் பணியில் நாங்கள் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, இந்த நோயை தமிழகத்திலிருந்து முழுமையாக, அறவே ஒழிக்கப்படும் வரை எங்களுடைய பணி தொடரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இதற்காக ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

நன்றி, வணக்கம். ❖

கொரோனா தொற்று நோய் பரவுவதை தடுக்க அரசு எடுத்துவரும் கடுமையான நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.03.2020 அன்று சட்டப்பேரவையில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க தனிமைப்படுத்துதல் என்ற முறையை தீவிரப்படுத்துதல் குறித்து அளித்த விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்க மாண்புமிகு அம்மாவின் அரசு, தொடர்ந்து தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட நபர்கள் உள்ள 75 மாவட்டங்களில், தீவிர நோய் கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் சில வழிமுறைகளை மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது. தனிமைப்படுத்துதல் (social distancing) என்ற முறையை தீவிரப்படுத்த, நோய் பாதித்த நபர்கள் உள்ள மாவட்டங்களில் சில கடுமையான நடவடிக்கைகளை தற்போது மேற்கொள்வது அவசியமாகிறது.

இதனை கருத்தில் கொண்டு, கீழ்க்கண்ட முடிவுகளை இந்த பேரவையின் வாயிலாக வெளியிட விரும்புகிறேன்.

மத்திய அரசால் கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட நபர்கள் உள்ள மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், ஈரோடு உள்பட தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், போக்குவரத்து மற்றும் பொதுமக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த, தொற்று நோய்கள் சட்டம், 1897இல் ஷரத்து 2இன் படி மாவட்ட எல்லைகளை மூட உத்தரவிடப்படுகிறது.

இதற்கான விரிவான அறிவிக்கை இன்று மாலை வெளியிடப்படும். இந்த உத்தரவு நாளை மாலை 6 மணி முதல் தொடங்கி 31.03.2020 வரை நடைமுறையில் இருக்கும்.

இந்த அறிவிக்கையை தீவிரமாக அமல்படுத்த அனைத்து காவல் ஆணையர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 144 கீழ் உரிய உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும்.

இந்த உத்தரவின்படி கீழ்க்கண்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன:—

1. அத்தியாவசிய மற்றும் அவசரப் பணிகள் தவிர மற்ற பொது போக்குவரத்து, தனியார் போக்குவரத்து, மகிழுந்துகள், ஆட்டோ, டாக்ஸி போன்றவை இயங்காது. மாநிலங்களுக்கு இடையேயும், மாவட்டங்களுக்கு இடையேயும் ஆன போக்குவரத்து அத்தியாவசிய இயக்கத்திற்கு தவிர மற்ற இயக்கம் முற்றிலும் தடை செய்யப்படுகிறது.



2. அத்தியாவசியப் பொருட்களுக்கான, பால், காய்கறி, மளிகை, இறைச்சி, மீன் கடைகள் போன்றவை தவிர அனைத்து கடைகளும், வணிக வளாகங்களும், பணிமனைகளும் இயங்காது.

3. அத்தியாவசியத் துறைகள் மற்றும் அலுவலகப் பணிகள் தவிர மற்ற அரசு அலுவலகங்கள் செயல்படாது. அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ளும் அரசுத் துறைகளான மாவட்ட நிருவாகம், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத்துறை, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறை, நீதிமன்றங்கள், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை தொடர்ந்து இயங்கும். எனினும், தனிநபர் சுகாதார நடவடிக்கை உட்பட அனைத்து நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் அலுவலகங்களில் பின்பற்றப்பட வேண்டும்.

4. தனியார் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப மற்றும் உயிர் தொழில்நுட்ப தொழில் அலுவலகப் பணியாளர்கள் வீட்டில் இருந்தே வேலை செய்ய வேண்டும். எனினும், அத்தியாவசிய பணிகளையும் மருத்துவம் உள்ளிட்ட பணிகளையும் மேற்கொள்ளும் தனியார் நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள் தொடர்ந்து இயங்கும்.

5. அத்தியாவசியமான பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்கள் குறைந்த பணியாளர்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது.

6. அத்தியாவசிய கட்டடப் பணிகள் தவிர பிற கட்டடப் பணிகளுக்கு தடை விதிக்கப்படுகிறது. எனினும், இந்த நாட்களில் வேலைக்கு வராத தொழிலாளர்களுக்கு சம்பள நிறுத்தம் செய்யக் கூடாது.

7. வீடுகளில் இல்லாமல், விடுதிகள் மற்றும் பிற இடங்களில் தங்கியிருக்கும் பல்லாயிரக்கணக்கான பணியாளர்களின் நலன் கருதி, பார்சல் மூலம் மட்டும் உணவு வழங்கும் வகையில் உணவகங்கள் திறந்திருக்க அனுமதிக்கப்படும். அம்மா உணவகங்கள் வழக்கம் போல செயல்படும்.

வெளிநாடுகளில் இருந்து வந்துள்ள நபர்கள் சுயமாகவே தங்களை தனிமைப்படுத்திக் கொண்டு, நோய் அறிகுறி வருகிறதா என கண்காணித்து அரசு மருத்துவமனைகள் மூலமோ, அனுமதிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் மூலமோ மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு, நோய் பாதிப்பு உறுதியானால் உரிய மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், அதற்கு குடும்ப உறுப்பினர்கள் நோய் தொற்று ஏற்படாத வண்ணம் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதுபோன்ற நடவடிக்கை இந்த கடுமையான தொற்று நோய் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் பரவாமல் தடுக்க பேருதவியாக இருக்கும் என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும்.

வெளிநாடு சென்று திரும்பிய நபர்களுடன் நேரடி தொடர்பு இல்லை என்றாலும் இந்நோய் தொற்றின் கடுமையை உணர்ந்து நோய் தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளதை கருத்தில் கொண்டு, இந்த நோய்க்கான அறிகுறி உள்ளவர்கள் உடனடியாக அரசு மருத்துவமனையோ அல்லது அனுமதிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் மூலமோ மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தடை உத்தரவால், கர்ப்பிணிப் பெண்கள், முதியோர் ஆகியோருக்கு ஏற்படும் இடையூறுகளை அறிந்து, அவற்றை தணிக்க உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இத்தடை காலத்தில் அத்தியாவசியப் பொருட்களான உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் போன்றவற்றின் போக்குவரத்துக்கும், விற்பனைக்கும் யாதொரும் தடையும் இல்லை.

நோய்த் தடுப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலித்து வருகிறது. இதற்கான ஆணைகள் தனியே வெளியிடப்படும்.

கொரோனா தொற்று நோய் பரவுவதை தடுக்க இந்த அரசு எடுத்துவரும் கடுமையான நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் நோய்க்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் மருத்துவமனையில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு ஒரு மாத ஊதியம் சிறப்பு ஊதியமாக வழங்கப்படும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 24.03.2020 அன்று சட்டப்பேரவையில், கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளில் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றுகின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்களை பாராட்டி, அவர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்குவது குறித்து ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாக தெளிவாக கொரோனா வைரஸ் நோயினுடைய தன்மையை தெரிவித்திருக்கின்றார்கள். ஏற்கெனவே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவுடைய அரசு கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் தொடர்ந்து செயல்படுத்தி கொண்டு இருக்கிறது. இதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது. இன்று மாலை 6.00 மணி முதல் மாவட்ட எல்லைகள் அனைத்தும் மூடப்பட்டு விடுகின்றன. அதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

இந்த கொரோனா வைரஸ் தொற்று நோயைப் பொறுத்தவரைக்கும் வேகமாக பரவக்கூடிய ஒரு நோய். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் போல, சுமார் 187 நாடுகளிலே இந்த நோய் பரவியிருக்கின்றது. மாவட்ட எல்லைகள் மூடுவது மட்டுமல்ல, பொதுமக்கள் தங்கள் வீட்டிலேயே இருந்து தங்களை தனிமைப்படுத்தி இந்த நோயை தடுக்கின்ற பணிக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதோடு அத்தியாவசிய பணிகளுக்கு மட்டும் பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லலாம். கூட்டமாக கூடுவதை தவிர்க்க வேண்டும். அதேபோல நோய் அறிகுறி தென்பட்டால் உடனடியாக மருத்துவர்களை சந்தித்து, பரிசோதனை செய்து, அந்த நோயினுடைய தன்மையை அறிந்து, அவர்கள் உரிய சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று இத்தருணத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இது ஒரு கொடிய நோய், தொற்று நோய். ஆகவே இந்த நோய் வந்தவர்கள் பிறரிடம் பேசுவதோ, தொடர்பு வைத்துக் கொள்ளவோ கூடாது. இது வேகமாக பரவக்கூடிய நோயாக இருக்கின்ற காரணத்தினாலே, அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் தங்களை முழு பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். முழு பரிசோதனை செய்து கொண்டால் தான், மற்றவர்களுக்கு அந்த நோய் வராமல் தடுக்க முடியும். அந்த நோய் வருவதற்கு உண்டான அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக மருத்துவர்களை சந்தித்து, மருத்துவமனையில் சேர்ந்து, சிகிச்சை பெற்று குணமடையலாம்.

தமிழகத்தை பொறுத்தவரைக்கும் எங்களுடைய அரசு, முழு மூச்சுடன் இன்றைக்கு வெளிநாட்டிலிருந்து வருகின்ற பயணிகளை பரிசோதனை செய்து,

அந்த பரிசோதனையிலே நோய் கண்டறியப்பட்டால், அவர்களை தனிமைப்படுத்தி உரிய சிகிச்சை அளித்து, குணமடையக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்குகின்றோம். இந்நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு கூட நம்முடைய மருத்துவர்கள் தகுந்த சிகிச்சை அளித்த காரணத்தினாலே அவர் குணமடைந்து இருக்கிறார். ஆகவே, பாதிக்கப்பட்டவர்கள் அச்சப்பட தேவையில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கென்று தனி வார்டுகள் அமைக்கப்பட்டு, மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மருத்துவமனையிலே சேர்ந்து சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

எங்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்களில் சில பேர் காய்ச்சலுக்காக இருக்கின்ற மாத்திரையை உட்கொள்வதன் காரணத்தினாலே இந்த பரிசோதனையில் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்னும் சிலபேர் பெங்களூருவில் இறங்கி, நமது மாநிலத்திற்கு வந்துவிடுகிறார்கள். அதோடு, வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் இந்தியாவில் உள்ள பிற விமான நிலையங்களிலிருந்து இறங்கி நமது மாநிலத்திற்கு வந்துவிடுகிறார்கள். அவர்களை நாம் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படி வெளிநாட்டிலிருந்து விமானம் மூலமாக பிற மாநிலத்திலிருந்து வந்தவர்கள் வீட்டிலே இருந்தாலும் உடனடியாக அருகில் இருக்கின்ற மருத்துவமனைக்கு சென்று, தங்களை பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அன்போடு அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அதேபோல அரசு, வெளிநாட்டிலிருந்து வந்தவர்களை தனிமைப்படுத்தி இருக்கின்றது. அவர்களும் மற்றவர்களோடு தொடர்பு கொள்ளாமல் இருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன். இதற்காக 24 மணிநேரமும் இயங்கக்கூடிய கட்டுப்பாட்டு அறையை அரசு உருவாக்கி இருக்கின்றது. ஏதாவது நோய் தென்பட்டால் உடனடியாக கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு, அவர்கள் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். இதை எல்லாம் இவ்வளவு வலியுறுத்தி சொல்வதற்கு காரணம், நோய் வந்துவிட்டால் கடுமையாக பாதிக்கப்பட்டு விடுகிறார்கள். வரும் முன் காப்போம் என்ற அடிப்படையிலே பொதுமக்கள் அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தினந்தோறும் அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறது, யார் யார் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், இதற்கு என்னென்ன சிகிச்சை அளிக்கப்படுகிறது என்ற விவரத்தை உடனுக்குடன் எங்களுக்கு தெரிவித்துக் கொண்டு இருக்கின்றார். அரசை பொறுத்தவரைக்கும் வேகமாக, துரிதமாக இன்றைக்கு நோய் தடுப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டு, சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் மருத்துவமனையிலே பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஒரு மாத ஊதியத்தை சிறப்பு ஊதியமாக வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கொரோனா வைரஸ் தொற்று நோய் ஏற்பட்டு மருத்துவமனையிலே சிகிச்சை பெறுகின்றவர்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றுகின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் இவர்கள் எல்லாம் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றுகின்றார்கள். அவர்கள் அனைவரையும் பாராட்ட நாம் கடமைப்பட்டு இருக்கின்றோம். மருத்துவப் பணி என்பது உன்னதப் பணி, மகத்தான பணி. அந்த மகத்தான பணியை சிரமேற்கொண்டு, அச்சம் இல்லாமல், நோய்வாய்ப்பட்டு இருக்கின்ற அந்த நபர்களுக்கு உரிய முறையிலே சிகிச்சை அளித்து, குணமடைய செய்து, இன்றைக்கு மகிழ்ச்சியோடு வீடு திரும்புகின்ற காட்சியை பார்க்க வேண்டும் என்பதற்காக, இரவு பகலாக பணியாற்றுகின்ற மருத்துவர்களை நாங்கள் மனமார, உளமார பாராட்டுகின்றோம். அந்தப் பணியிலே ஈடுபட்டு இருக்கின்ற அனைவரையும் நாங்கள் பாராட்ட கடமைப்பட்டு இருக்கின்றோம். அதேபோல, அரசு எடுத்து வருகின்ற தடுப்புப் பணிகளுக்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் அனைவரையும் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு ரூ.3,280 கோடி மதிப்பிலான சிறப்பு நிவாரண உதவிகள் வழங்க ஆணை!

சட்டப்பேரவை விதி 110இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் கொரோனா வைரஸ் நிவாரண அறிவிப்பு – 24.03.2020

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுக்க மாண்புமிகு அம்மாவின் அரசு, தொடர்ந்து தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

நேற்று 23.03.2020 அன்று, தனிமைப்படுத்துதல் (social distancing) என்ற முறையை தீவிரப்படுத்த நான் பல்வேறு அறிவிப்புகளை இந்த அவையில் வெளியிட்டேன். அவற்றுக்கு இணங்க, நேற்று மாலை விரிவான அறிவிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. மேலும், அந்த உத்தரவுகளை நடைமுறைப்படுத்த குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 144இன்கீழ், சென்னையில் காவல் ஆணையர் அவர்களும், பிற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உரிய உத்தரவுகளை பிறப்பிக்க உள்ளார்கள். இவ்வாணைகள் அனைத்தும் 24.03.2020 மாலை 6.00 மணி முதல் அமலுக்கு வருகிறது.

இதனால், தினக் கூலிகள், விவசாயக் கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள், டாக்ஸி ஓட்டுநர்கள், கட்டுமான மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகள், முதியோர்கள் உள்ளிட்ட பொது மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஏழை, எளிய மக்களின் சிரமங்களை உணர்ந்து, அவர்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவு செய்து, 3,280 கோடி ரூபாய் மதிப்பிலான பின்வரும் சிறப்பு நிவாரண உதவிகளை வழங்க நான் ஆணையிடுகிறேன்:–

1. அனைத்து குடும்ப அரிசி அட்டைதாரர்களுக்கும் 1,000/– ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும். அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களுக்கு உரித்தான ஏப்ரல் மாதத்திற்கான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் சர்க்கரை விலையின்றி வழங்கப்படும். பொது விநியோகக் கடைகளில் கூட்டத்தை தவிர்க்க இந்நிவாரணம், டோக்கன் முறையில், ஒதுக்கப்பட்ட நாளிலும், நேரத்திலும் விநியோகிக்கப்படும். இந்த 1,000 ரூபாய் நிவாரணம் மற்றும் விலையில்லாப் பொருட்களை பெற விருப்பம் இல்லாதவர்கள், இதற்கான வலைதளத்தில் மின்னணு முறையில் அல்லது செயலியில் பதிவு செய்து கொள்ளலாம்.

2. குடும்ப அட்டைதாரர்கள் மார்ச் மாதத்திற்கான ரேஷன் பொருட்களை வாங்க தவறியிருப்பின், ஏப்ரல் மாதத்திற்கான பொருட்களுடன் சேர்த்து வாங்கிக் கொள்ளலாம்.

3. கட்டடத் தொழிலாளர்கள் மற்றும் ஓட்டுநர் நல வாரியத்தில் உள்ள ஆட்டோ தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு சிறப்பு தொகுப்பாக தலா 1,000 ரூபாயும் மற்றும் 15 கிலோ அரிசி, ஒரு கிலோ பருப்பு, ஒரு கிலோ சமையல் எண்ணெயும் வழங்கப்படும்.

4. தற்போது தமிழ்நாட்டில் சிக்கித் தவிக்கும் பிற மாநிலங்களைச் சேர்ந்த கட்டுமான மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களை, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் தொழிலாளர் வாரியங்கள் அடையாளம் கண்டு, அவர்களின் குடும்பம் ஒன்றுக்கு 15 கிலோ அரிசி,

ஒரு கிலோ பருப்பு மற்றும் ஒரு கிலோ சமையல் எண்ணெய் இலவசமாக வழங்கப்படும்.

5. அம்மா உணவகத்தின் மூலமாக சூடான, சுகாதாரமான உணவு தொடர்ந்து வழங்கப்படும்.

6. எந்த வசதியும் இல்லாதோர், ஆதரவற்றோர் போன்றவர்களுக்கு, அவர்கள் இருக்கும் இடத்திலேயே, சூடான, சுகாதாரமான முறையில் உணவு தயாரித்து வழங்கப்படும். இதற்கென தேவைக்கு ஏற்ப பொது சமையல் கூடங்கள் அமைக்க, சென்னை மாநகர ஆணையருக்கும், பிற மாவட்ட ஆட்சியர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

7. அங்கன்வாடி மையங்களில் உணவருந்தும் முதியோர்களுக்கு தேவையான உணவினை அவர்கள் வசிக்கும் இடங்களில் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8. பதிவு செய்யப்பட்ட நடைபாதை வியாபாரிகளுக்கு பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் 1,000/– ரூபாயுடன் கூடுதலாக 1,000/– ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்படும்.

9. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், இந்த மாதத்தில் பணி புரிந்த தொழிலாளர்களுக்கு, 2 நாட்களுக்கான ஊதியம், சிறப்பு ஊதியமாக கூடுதலாக வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுடனான சந்திப்பு!

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **பன்வாரிலால் புரோஹித்** அவர்களை 31.03.2020 அன்று ஆளுநர் மாளிகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்கள்.

மத்திய அரசின் வேண்டுகோளின்படி, 21 நாட்கள் ஊரடங்கை நாமும் கடைபிடிக்க வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தொலைக்காட்சி வாயிலாக கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து 25.03.2020 அன்று, நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை.

வணக்கம்.

அன்பான சகோதர சகோதரிகளே,

இச்சமயத்தில் நான், தமிழக முதலமைச்சராக இல்லாமல், உங்களில் ஒருவனாக, உங்கள் குடும்பத்தில் ஒருவனாக, பேசுகிறேன்.

உங்கள் அனைவருக்கும் எனது வேண்டுகோள்.

உலகத்தையே ஆட்டிப் படைக்கும் கொரோனா வைரஸ், சீனாவில் துவங்கி, காட்டுத் தீ போல், வேகமாக பரவி வருவதை, நாம் எல்லோரும் அறிவோம்.

மத்திய அரசின் வேண்டுகோளின்படி, 21 நாட்கள், ஊரடங்கை நாமும் கடைபிடிக்க வேண்டும்.

இந்த வைரஸ் நோய் எப்படி பரவுகிறது, அதைத் தடுப்பதற்கு, ஒவ்வொருவரும் எப்படி இருக்க வேண்டும், என்பதை அறிந்து செயல்படுவது காலத்தின் கட்டாயம்.

கொரோனா வைரஸ், ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு நேரடியாகவும், கைகள் மூலமும் பரவுகிறது.

தமிழ்நாடு அரசு, இந்நோய் பரவாமல் தடுப்பதற்கு, பல்வேறு நடவடிக்கைகளை, போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகிறது.

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக, அரசின் சார்பில் ரூபாய் 3,780 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10,158 படுக்கைகள், மருத்துவமனைகளில் தயார் நிலையில் உள்ளன. மேலும், படுக்கை எண்ணிக்கையை அதிகரிக்க உத்தரவிட்டுள்ளேன். இந்த ஊரடங்கு காலத்தில், ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரம் கருதி, அனைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கும் ரூ.1,000 நிதியுதவி வழங்கப்படும். அத்துடன் ஏப்ரல் மாதத்திற்கான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், சர்க்கரை ஆகியவை விலையின்றி வழங்கப்படும்.

கட்டடத் தொழிலாளர்கள், மற்றும் ஓட்டுநர் நல வாரியத்தில் உள்ள, ஆட்டோ தொழிலாளர்கள் குடும்பத்திற்கு, சிறப்பு தொகுப்பாக 1,000 ரூபாயும் மற்றும் 15 கிலோ அரிசி, ஒரு கிலோ பருப்பு, ஒரு கிலோ சமையல் எண்ணெயும் வழங்கப்படும்.

பதிவுசெய்யப்பட்ட நடைபாதை வியாபாரிகளுக்கு, பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் 1,000 ரூபாயுடன், கூடுதலாக 1,000 ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்படும்.

அம்மா உணவகத்தின் மூலம் சூடான, சுகாதாரமான உணவு, தொடர்ந்து வழங்கப்படும். மகாத்மா காந்தி, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், இந்த மாதத்தில் பணி புரிந்த தொழிலாளர்களுக்கு, 2 நாட்களுக்கான ஊதியம், சிறப்பு நிதியாக கூடுதலாக வழங்கப்படும்.

அரசு மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது, உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் மிக, மிக அவசியம். இந்த நோயின் தீவிரத்தை உணர்ந்து, நீங்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம். வெளிநாடுகளில் இருந்து வந்துள்ளவர்கள், அவர்களாகவே முன்வந்து, தங்களை வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள்.

அவர்கள் அவ்வாறு செய்யத் தவறும்பட்சத்தில், அவர்களின் குடும்ப உறுப்பினர்களோ, உறவினர்களோ, பக்கத்து வீட்டார்களோ, உள்ளாட்சி அமைப்புகளுக்கோ, சுகாதாரத் துறைக்கோ, காவல்துறைக்கோ தகவல் தெரிவிக்கலாம்.

தனிமைப்படுத்துதல் என்பது, உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும், சமுதாயத்தையும், நாட்டையும் பாதுகாக்கத் தான்.

உங்கள் குடும்பம் உங்களுக்கு எவ்வளவு முக்கியமோ, அதைப் போல, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும், அரசுக்கு முக்கியம். இதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த 21 நாட்கள் ஊரடங்கு என்பது, விடுமுறை அல்ல, உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும், பாதுகாப்பதற்கான, அரசின் உத்தரவு என்பதை உணருங்கள். நோய் பரவுவதை கட்டுப்படுத்த, அனைத்து மாவட்ட எல்லைகளும் மூடப்பட்டுள்ளன. எனவே, பொது மக்கள், வெளியூர் செல்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொறுப்பான குடிமக்களாக இருந்து, நம்மையும், சமுதாயத்தைக் காப்போம். மக்களுக்கு தேவையான, அத்தியாவசியப் பொருட்களான, காய்கறிகள், பால், இறைச்சி, மருந்துகள் மற்றும் மளிகைப் பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்க, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மக்கள் யாரும் அச்சம் கொள்ள வேண்டாம். அத்தியாவசிய தேவைகளுக்காக, வெளியில் வரும்போது ஒருவருக்கு ஒருவர் கட்டாயம், 3 அடி இடைவெளி விட்டு, Social distancing என்கின்ற, கோட்பாட்டை கடைபிடிப்போம்.

கடுமையான சளி, காய்ச்சல், மூச்சுத் திணறல், போன்ற அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக உங்கள் மருத்துவரையோ, அல்லது அரசு மருத்துவமனையை அணுகவும். மருத்துவரின் ஆலோசனை இன்றி, சுய மருத்துவம் செய்யாதீர்கள்.

தேவைப்படின், அரசு அறிவித்துள்ள உதவி மையத்தின் எண்கள், 104 அல்லது 1077ஐ தொடர்பு கொள்ளவும். அடிக்கடி கையை சுத்தமாக கழுவுங்கள். கூட்டம் கூடுவதை தவிர்த்திடுங்கள். இருமும் போதும், தும்மும் போதும், வாய் மற்றும் மூக்கை கைக்குட்டையால் மூடிக் கொள்ளவும்.

அத்தியாவசிய தேவைகளுக்காக, வெளியே சென்றுவிட்டு, வீட்டிற்குள் நுழையும் முன்பு, நம் பாரம்பரிய வழக்கப்படி, கை, கால், முகத்தை சோப்பு போட்டு கழுவுங்கள். கை குலுக்குவதைத் தவிர்த்து, கை கூப்பி வணக்கம் சொல்லவும்.

“விழித்திரு – விலகி இரு – வீட்டில் இரு” அரசால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை, கடுமையாக கடைபிடிக்க வேண்டும்.

மக்கள் நலன் கருதி, அரசுஅவ்வப்போது பிறப்பிக்கும் உத்தரவுகளை, மீறுவோர் மீதும், வீண் வதந்திகளை பரப்புவோர் மீதும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள்.

சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்த நோய் உள்ளவர்கள், மருந்துகளை தவறாமல் உட்கொள்ள வேண்டும். முதியோர்கள், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களை கவனமாக பார்த்துக் கொள்ளவும்.

சாதி, மத, இன, மொழி, அரசியல் வேறுபாடுகளை கடந்து, அனைத்து தரப்பினரும் ஒன்றுபட்டு, கொரோனா நோயிலிருந்து தமிழ்நாட்டைக் காப்போம்.

கொரோனா தொற்று நோய்க்கு எதிராக தொடர்ந்து போராடி, தமிழக மக்கள் அனைவரது நலனையும் காப்போம் என இத் தருணத்தில் உறுதி ஏற்போம்.

நன்றி! வணக்கம்!

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளுக்கு சிறப்பு நிதியாக ரூ.3,000 கோடி வழங்க வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
எழுதிய நேர்முக கடிதத்தின் தமிழாக்கம் – 25.03.2020

கொரோனா வைரசிடம் இருந்து இந்திய மக்களை காப்பாற்றுவதற்காக நீங்கள் தைரியமான முடிவை எடுத்ததற்காக உங்களை வாழ்த்துகிறேன். தமிழகத்தில் 24ஆம் தேதி மாலை 6 மணியில் இருந்து ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்து வருகிறது. தேசத்தை காக்கும் பணியில் மத்திய அரசுடன் தமிழக அரசும் இணைத்து நிற்கிறது. கொரோனா வைரஸ் தாக்குதலை எதிர்கொள்ளும் வகையில் சுகாதாரத் துறையை பலப்படுத்தும் வகையில், தனிமைப்படுத்தும் வசதிகளை உருவாக்குவது, வெண்டிலேட்டர் வசதிகளை அளிப்பது, தனிப்பட்ட நபரை பாதுகாக்கும் உபகரணங்கள் வாங்குவது உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக ரூ.15 ஆயிரம் கோடியை சிறப்பாக ஒதுக்கியதற்கு நன்றியை தெரிவிக்கிறேன்.

தமிழகத்தில் சுகாதார உள்கட்டமைப்புகளை மேம்படுத்த நிதியை நானும் அறிவித்துள்ளேன். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகளில் 10 ஆயிரம் படுக்கைகளை அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வரும் வாரம், மாதங்களில் எந்த பாதிப்புகளும் வந்துவிட்டதா அளவிற்கு இப்போதே மிக விரைவான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. எதிர்பார்க்கும் அளவிலான நோயாளிகளை தனிமைப்படுத்துவது, சிறப்பு தனிமை மையங்களில் வைப்பது, மருத்துவ உபரணங்களை வழங்குவது, தோற்று பரவாமல் தடுக்க மருந்துகளை அளிப்பது போன்றவற்றிற்காக நிதி தேவைப்படுகிறது. இதன் அடிப்படையில் தேவையான உபரணங்கள், மருந்துகள் தடுப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை மேம்படுத்தி, உள்கட்டமைப்பு வசதிகளை அதிகப்படுத்துவதற்கு ரூ.3000 கோடி ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மார்ச் மாதம் 31ஆம் தேதி வரையிலான ஊரடங்கை முன்னிட்டு, ஏப்ரல் மாத ரேஷன் பொருட்களை இலவசமாக வழங்குவது, நிவாரண உதவித் தொகையாக ஒவ்வொரு ரேஷன் அட்டைதாரருக்கும் ஆயிரம் ரூபாய் வழங்குவது உள்ளிட்ட பணிகளுக்கு உடனடியாக ரூ.3,280 கோடி தொகையை ஒதுக்கி இருக்கிறேன். மேலும் 2 வாரங்களுக்கு ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில், தினக்கூலிகள் உள்ளிட்ட ஏழை எளியவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படும். எனவே உங்களின் பொருளாதார மற்றும் நிதி தொடர்பான நிவாரண உதவி தொடர்பான அறிவிப்புக்காக

காத்திருக்கிறோம். மேலும், குறிப்பிட்ட சில பிரிவுகளுக்கு நிவாரண உதவி வழங்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

மகாத்மா காந்தி வேலை உறுதி திட்டத்தில் கிடைக்கும் ஊதியத்தை நம்பி இருப்போரின் நிலை கடினமாக உள்ளது. தமிழகத்தில் இதற்காக ரூ.400 கோடி செலவிடப்படுகிறது. வேறு சில சிறிய அளவிலான பணிகளும் அனுமதிக்கப்படுகின்றன. எனவே, மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் அவர்களின் ஊதியத்தில் 50 சதவித்ததை வழங்க ரூ.500 கோடி தொகையை அனுமதிக்க வேண்டும். அமைப்பு சாரா தொழிலாளர்கள், கட்டுமான தொழிலாளர்களின் ஊதிய இழப்புக்காக சிறப்பாகவும், நிவாரண உதவிகளை அளிக்கவும் ரூ.500 கோடி அளிக்க வேண்டும். இந்திய உணவுக் கழகத்திடம் இருக்கும் உணவு தானியங்களை வறுமைக்கோட்டு அளவிலான விலை நிர்ணயம் செய்து தமிழகத்திற்கும் மற்ற மாநிலங்களுக்கும் வழங்க வேண்டும்.

சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களும் வருவாய் இழப்பாலும், கடன், வட்டி சுமையாலும் பாதிக்கப்படும் நிலையில் அவர்கள் கடன் செலுத்துவதற்கு கால அவகாசம் அளிக்க வேண்டும். இரண்டு காலாண்டுகளான வட்டி மற்றும் அபராதம் நீக்கப்பட வேண்டும்.

மாநில அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவை எதிர் கொள்ளவும் கூடுதல் நிதி அளிக்கப்பட வேண்டும். அந்த வகையில் சிறப்பு நிவாரண உதவி நிதியாக ரூ.4,000 கோடியையும், நிவாரண உதவிகளையும் உடனே வழங்க வேண்டும்.

படமும்/செய்தியும்

கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 27.03.2020 அன்று முகாம் அலுவலகத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அனைத்து நடவடிக்கைகளும், பொதுமக்களுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்டவையாகும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
26.03.2020 அன்று, கொரோனா நோய்த் தடுப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலம் நடத்திய ஆய்வுக் கூட்ட முடிவுகள்

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைத் தடுக்க தீவிர தடுப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகிறது. இதற்கென பொது மக்களின் நன்மை கருதி, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144ன்படி ஊரடங்கு உத்தரவு உட்பட பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றது. இவ்வுத்தரவுகளை அனைத்து மாவட்டங்களிலும் முறையாக நடைமுறைப்படுத்திட உத்தரவுகள் வழங்கப்பட்டன. அவ்வுத்தரவுகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மாநகர காவல் ஆணையர்கள், மாநகர ஆணையர்கள், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள், பொது சுகாதாரத் துறையின் துணை இயக்குநர்கள் ஆகியோருடன் காணொலிக் காட்சி மூலம் கலந்தாய்வு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் இன்று (26.03.2020) நடத்தப்பட்டது.

கலந்தாய்வில் எடுக்கப்பட்ட முடிவின்படி, பின்வரும் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன:–

1. 31.03.2020 வரை பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவும், இதர உத்தரவுகளும் 14.04.2020 வரை நீட்டிக்கப்படுகின்றது.

2. ஊரடங்கு உத்தரவினால் ஏற்படக்கூடிய இடையூறுகளை தவிர்க்கவும், மக்களுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய சேவைகளும் தடையின்றி கிடைக்கவும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளைக் கொண்ட

9 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அவர்கள் தலைமையில் இப்பணிகள் தீவிரமாக கண்காணிக்கப்படும்.

3. பல கிராமங்களிலும், நகரங்களிலும் தனியார் வங்கிகள், சிறிய நிதி நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் ஆகியவை தினசரி / வாராந்திர / மாத வட்டி மற்றும் அசலை வசூல் செய்கின்றன. தற்போது, ஊரடங்கு உத்தரவினால் யாரும் வேலைக்குச் செல்ல இயலாத நிலையில், இது போன்ற பண வசூலை உடனடியாக, மறு உத்தரவு வரும் வரை நிறுத்தி வைக்க வேண்டும். இந்த உத்தரவினை மீறுபவர்கள் மீது கடுமையான குற்றவியல் நடவடிக்கைகள் தொடரப்படும் என எச்சரிக்கப்படுகின்றனர்.

4. பெரிய காய்கறி மார்க்கெட் / சந்தை இருக்குமிடங்களில் மக்கள் அதிகமாக கூடுவதை தவிர்க்கும் வகையில், காய்கறி / பழ வகைகளை விற்கும் கடைகளை விசாலமான இடங்களில் அல்லது மைதானங்களில் அமைக்க வேண்டும். அப்போது Social distancing norms-ன்படி மக்களிடையே 3 அடி தூரம் இடைவெளி இருக்க வேண்டும். மளிகைக் கடைகளிலும், மருந்து கடைகளிலும், காய்கறி கடைகளிலும் சமூக விலகல் (social distancing norms) முறையை தீவிரமாக பின்பற்ற வேண்டும்.

5. அதிக மக்கள் வாழும் குடிசை மாற்று குடியிருப்புகள், பொது மக்கள் அதிகம் கூடும் வழிபாட்டு தலங்கள், சந்தைகள், பெரிய தெருக்கள் போன்ற இடங்களில் அவ்வப்போது தீயணைப்பு இயந்திரங்கள் மூலமாக கிருமிநாசினி தெளிக்கப்பட வேண்டும்.

6. இந்த நோய்த் தொற்று மிக மிகக் கடுமையானது என்பதையும், இது ஒரு ஆட்கொல்லி நோய் என்பதையும், இது மனித சமுதாயத்திற்கு ஒரு பேரழிவை ஏற்படுத்த வல்லது என்பதையும், மக்கள் உணரும் வண்ணம், விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதனையும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளையும் ஒலிபெருக்கி / தண்டோரா மூலம் பொது மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். மேலும், துண்டுப் பிரசுரம் மூலம் வீடு வீடாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

7. கர்ப்பிணிப் பெண்கள், இரத்தக் கொதிப்பு, நீரிழிவு, காச நோய், HIV தொற்று உள்ளோர், போன்றவர்கள் அரசு மருத்துவமனைகளில் மருந்து, மாத்திரைகள் பெறுகின்றனர். அவர்களுக்கு இரு மாதங்களுக்குத் தேவையான மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட வேண்டும்.

8. அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தி மற்றும் நகர்வுகள் தடையின்றி நடைபெற பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்திலும், ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் உதவி மையம் அமைக்கப்படும். இது தொடர்பான கோரிக்கைகள் இருப்பின், அவற்றிற்கான அத்தியாவசிய சான்றிதழை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் வழங்குவார்கள்.

   i) மருத்துவப் பொருட்களுக்கான சான்றிதழ்களை, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் (TNMSC), அரசு மருத்துவமனை முதல்வர்கள் (Dean), மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகளின் இணை இயக்குநர்கள் (JDHS) மற்றும் பொது சுகாதாரத் துறையின் துணை இயக்குநர்கள் (DDHS) ஆகியோர் வழங்குவர்.

ii) அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்யும் தனியார் வாகனங்களுக்கும், அத்தியாவசியப் பணியில் ஈடுபட்டுள்ள அரசு அல்லாத தனியார் பணியாளர்களுக்கும், சென்னை உட்பட அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்கள் (PA-G) சம்பந்தப்பட்ட காவல் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து, அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

iii) மின் வணிக நிறுவனங்களான (e-commerce) Grofers, Amazon, Big basket, Flipkart, Dunzo போன்ற நிறுவனங்கள் மூலம் மளிகைப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்ல ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இப்பொருட்களை மற்ற நிறுவனங்களும், அந்தந்த பகுதியில் உள்ள மளிகைக் கடைகளும், கூட்டுறவு விற்பனை அங்காடிகளும், வீடுகளுக்குச் சென்று அத்தியாவசியப் பொருட்களை வழங்க அனுமதிக்கப்படுகின்றது. Zomato, Swiggy, Uber eats போன்ற நிறுவனங்கள் மூலம், விநியோகம் செய்யப்படும் தயார் செய்யப்பட்ட உணவுப் பொருட்களை வீடுகளுக்குச் சென்று வழங்குவதற்கான தடை தொடரும். எனினும், மூத்த குடிமக்கள், நோய்வாய்ப்பட்டோர் மற்றும் தாங்களாகவே சமைக்க இயலாதோர் ஆகியோர் மெஸ் மற்றும் சிறு சமையலகங்கள் (caterers) மூலம் ஏற்கெனவே தங்கள் உணவுகளை பெற்று வருகின்றனர். இதற்கு தொடர்ந்து அனுமதி வழங்கப்படுகின்றது. இத்தகைய சேவைகளில் ஈடுபட்டுள்ள வாகன ஓட்டுநர்கள், அடையாள அட்டை வைத்திருப்பதை சம்பந்தப்பட்ட வாகனங்களில் "அத்தியாவசிய சேவைக்காக" என்று வில்லைகள் ஒட்டியிருப்பதையும், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும்.

iv) அதே போன்று, காய்கறி, பழங்கள், முட்டை போன்ற விளை பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் பிற நபர்களுக்கும் தேவையான அனுமதிச் சீட்டை அந்தந்த கிராம நிருவாக அலுவலர்கள் வழங்க வேண்டும்.

v) வேளாண்மைத் துறை விலக்களிக்கப்பட்ட அத்தியாவசியத் துறை என்பதால், விவசாயத் தொழிலாளர்கள், அறுவடை இயந்திரங்கள் ஆகியவற்றின் நகர்வு அனுமதிக்கப்படுகின்றது. அதே போன்று, வேளாண் விளை பொருட்களை சந்தைக்கும், தொழிற்சாலைகளுக்கும் எடுத்துச் செல்வதும் அனுமதிக்கப்படுகின்றது.

vi) கால்நடை, கோழி, மீன், முட்டை, கால்நடைத் தீவனம் ஆகியவற்றின் நகர்வுகளும் அனுமதிக்கப்படுகின்றது. இதில் சிரமங்கள் ஏதும் இருந்தால், காவல் துறை தலைமையக கட்டுப்பாட்டு அறையை கீழ்க்கண்ட எண்களில் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம்: 044–2844 7701, 044–2844 7703

9. முதியோர், நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள், டயாலிசிஸ் சிகிச்சை பெறுவோர் ஆகியோருக்கு அவசர உதவி தேவைப்பட்டால், அவர்கள் 108 எண்ணை தொடர்பு கொள்ளலாம். 108 ஆம்புலன்ஸ் சேவையுடன், இச்சேவையையும் இணைத்து செயல்பட வேண்டும்.

10. அரசால் அறிவிக்கப்பட்ட சிறப்பு நிவாரணம் முழுமையாக பயனாளிகளை சென்றடைவதையும், இவை வழங்கும்போது சமூக விலகல் உள்ளிட்ட சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளையும் முழுமையாக பின்பற்றுவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும். மேலும், அந்தந்த மாவட்டங்களின் நிலைமைக்கு ஏற்றவாறு, தேவைப்படின் நிவாரணத் தொகை மற்றும் பொருட்களை அவரவர் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று வழங்க மாவட்ட ஆட்சியர்கள் ஏற்பாடு செய்யலாம். நோய்த் தொற்றினை தடுக்கும் விதத்தில், கை ரேகை பதிவு செய்து அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதை தற்போது முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

11. வெளி நாட்டிலிருந்து வந்த சுமார் 54 ஆயிரம் பேர்களின் பட்டியல் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களை, அவரவர் வீடுகளிலேயே தனிமைப்படுத்த வேண்டும். அவர்கள் வெளியே வராதவாறு தீவிரமாக கண்காணிக்க உத்தரவிடப்படுகிறது.

12. கொரோனா தொற்று உடையோருடன் தொடர்பில் இருந்தோர் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய குடும்பத்தினர் வெளியில் வருவது முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளதால், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை மாவட்ட ஆட்சியர்கள் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதையும் மீறி வெளியில் வருவோர் மீது அபராதம் விதிப்பதோடு, தகுந்த பிரிவுகளின் கீழ் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

மேற்கண்ட இந்த அனைத்து நடவடிக்கைகளும், பொது மக்களுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்பட்டு விடக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் எடுக்கப்படுபவை. இதனை உணர்ந்து, அரசின் உத்தரவுகளை பொது மக்கள் தவறாது தீவிரமாக கடைபிடித்து, தங்களை தற்காத்துக் கொள்ள வேண்டும். "விழித்திரு – விலகி இரு – வீட்டிலேயே இரு" என்ற கோட்பாட்டினை இந்த சவாலான நேரத்தில் பொது மக்கள் அனைவரும் தீவிரமாகக் கடைபிடித்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்படும் நபர்களுக்கு சிகிச்சையளிக்க மாநிலம் முழுவதும் 15,000 படுக்கைகள் தயார் நிலையில் உள்ளன!

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய செய்தி வெளியீடு – 27.03.2020

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகிறது. இது சம்பந்தமாக பல்வேறு உத்தரவுகள் அரசால் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கும் நிலையில், அனைத்து அத்தியாவசியப் பொருட்களும், பால், காய்கறி, மளிகை, இறைச்சி, மீன் போன்ற பொருட்களும் தங்கு தடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்யவும், ஒரு சிலர் கொரோனா நோய்த் தொற்றின் தீவிரத்தைப் புரிந்து கொள்ளாமல், தெருக்களிலும் சாலைகளிலும் தேவையின்றி நடமாடுவதைக் கட்டுப்படுத்தவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று உயர் அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார். கொரோனா நோய் தொற்று முதலாம் கட்டத்தில் இருந்து, இரண்டாம் கட்டத்திற்கு செல்லும் நிலையில், பொது மக்களுக்குத் தொற்று ஏற்பட வாய்ப்பு மிக அதிகமாக உள்ளதைக் கருத்தில் கொண்டு, அத்தியாவசியப் பணிகளை இடையூறின்றி மேற்கொள்ளவும், கொரோனா நோய்த் தொற்று பொது மக்களுக்கு பரவாமல் தடுக்கவும், பின்வரும் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. இந்த உத்தரவுகள் 29.03.2020 (ஞாயிற்றுக்கிழமை) முதல் நடைமுறைக்கு வருகின்றன.

★ கோயம்பேடு போன்ற மொத்த காய்கறி, பழ அங்காடிகளுக்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் பொருட்களை ஏற்றி வரும் வாகனங்கள், மாலை 6 மணி முதல் அதிகாலை 6 மணிக்குள் பொருட்களை இறக்கி விட வேண்டும். வாகனங்களுக்கு கிருமி நாசினி தெளித்தல், சுமை தூக்கும் பணியாளர்கள் முறையாக பாதுகாப்பு, சுகாதார முறைகளை கடைபிடித்தல் போன்றவற்றை சென்னையில் மாநகராட்சி ஆணையரும் பிற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர்களும் ஒரு சிறப்பு குழு அமைத்து கண்காணிக்க வேண்டும். மேலும், இந்த மார்கெட் பகுதிகளில் பொது சுகாதாரம் பேணப்பட்டு, நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

★ கோயம்பேடு காய்கறி அங்காடி மற்றும் பிற காய்கறி விற்பனை கடைகள், அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்யும் கடைகள், காலை 6.00 மணி முதல் மதியம் 2.30 மணி வரை மட்டுமே திறந்திருக்க வேண்டும். இந்தக் கட்டுப்பாடு, தேவையின்றி மக்கள் வெளியே நடமாடுவதைக் கட்டுப்படுத்த எடுக்கப்படுகிறது.

★ அதேபோல், பெட்ரோல் பங்குகள் காலை 6.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை மட்டுமே செயல்படும். எனினும், அரசு வாகனங்கள், 108 அவசர ஊர்திகள் போன்ற ஊர்திகளுக்கான பிரத்யேக பெட்ரோல் பங்குகள் மட்டும் நாள் முழுவதும் தொடர்ந்து செயல்படும்.

★ மருந்தகங்கள், உணவகங்கள் (பார்சல் மட்டும்) நாள் முழுவதும் எப்போதும் போல் இயங்கும்.

★ வயது முதிர்ந்தோர் வீட்டில் சமைக்க முடியாதோர் போன்றோர், சமைத்த உணவு பொருட்களை வீட்டிற்கு இணையதளம் மூலம் முன்பதிவு செய்கின்றனர். இத்தகையோரின் நலன் கருதி "Swiggy, Zomato, Uber Eats" போன்ற நிறுவனங்களின் மூலம், காலை 7.00 மணி முதல் 9.30 மணி வரை காலை சிற்றுண்டியும், மதியம் 12.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை மதிய உணவும், மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இரவு உணவும் எடுத்துச்சென்று வழங்க சிறப்பினமாக அனுமதிக்கப்படுகிறது. எனினும் இத்தகைய பணியில் ஈடுபடும் நபர்களுக்கு அந்தந்த நிறுவனங்கள் மூலமாக காவல்துறையிடம் அடையாள அட்டை பெற்றுக்கொள்ளவும், சம்மந்தப்பட்ட நிறுவனங்களே அவர்களின் உடல்நிலையை தினந்தோறும் பரிசோதித்து, பின்னர் பணியில் ஈடுபடுத்தவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

★ இத்தகைய கடுமையான சூழ்நிலையில் ஆதரவற்ற மக்களுக்கு உதவி செய்ய விரும்பும் நபர்கள் சமைத்த உணவை விநியோகிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர். சமைக்க தேவைப்படும் உணவு பொருட்கள் மற்றும் பிற பொருட்களை சென்னையில் சென்னை மாநகராட்சி ஆணையரிடமும், பிற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமும் வழங்கலாம். மாவட்ட நிருவாகம், இவற்றுக்கென ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்தியுள்ளது. அந்தப் பிரிவைத் தொடர்பு கொண்டு பொருட்களை வழங்கலாம்.

★ அரசு மருத்துவமனைகளில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்த விரும்புவோரும், மருத்துவ உபகரணங்கள் வழங்க விரும்புவோரும், அந்தந்த மருத்துவமனை நிருவாகத்தை அணுகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவற்றுக்கென அந்தந்த மாவட்டத்தில் ஒரு சிறப்பு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

★ இறப்பு போன்ற நிகழ்வுகளுக்கு விதிவிலக்கு உள்ளது என்பது தெளிவு படுத்தப்படுகிறது. எனினும் இதுபோன்ற நிகழ்வுகளில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கை 20 நபர்களுக்கு மிகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்நிகழ்வுகளில் கலந்துகொள்பவர்கள் போதிய சுகாதார முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

★ வெளி மாநிலங்களிலிருந்து சொந்த ஊருக்கு திரும்பமுடியாமல் இருக்கும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அந்தந்த நிறுவனங்களே தங்குவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும். மாநிலத்திலிருந்து வெளியேற முடியாத தொழிலாளர்களுக்கு அவசர கால உதவியாக அந்தந்த மாவட்ட நிருவாகமும், சென்னை மாநகராட்சியும் தேவைக்கு ஏற்ப உரிய வசதிகளை செய்துதர அறிவுறுத்தப்படுகிறார்கள்.

★ சுகாதார கட்டுப்பாட்டு அறை தவிர மாவட்டங்களில் உள்ள கட்டுப்பாட்டு அறைகளையும், சுகாதாரத்துறை அவசர கால கட்டுப்பாட்டு அறையுடன் ஒருங்கிணைக்க தலைமைச் செயலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு மையம் "தலைமை கட்டுப்பாட்டு மையமாக" வலுப்படுத்தப்படுகிறது.

★ 15.02.2020க்குப் பிறகு வெளிநாடு சென்று திரும்பியவர்கள் மற்றும் அவர்களோடு தொடர்பில் இருந்த நபர்கள், தங்களைத் தாங்களே கட்டாயமாகத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த விபரத்தை, பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், பிற மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட நிருவாகத்திற்கும் கட்டாயமாகத் தெரிவிக்க வேண்டும். இத்தகைய நடவடிக்கை, சம்பந்தப்பட்ட நபர்களையும், அவர்களின் குடும்பங்களையும், சமுதாயத்திலுள்ள மற்ற மக்களையும் பாதுகாக்க வழிவகுக்கும் என்பதை அவர்கள் உணர்ந்து பொறுப்புடன் செயல்பட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கொரோனா வைரஸ் நோய் தொற்றினால் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கு சிகிச்சையளிக்க மாநிலம் முழுவதும் சுமார் 15,000 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் இ.எஸ்.ஐ. மருத்துவமனை 350 படுக்கைகள் கொண்ட COVID–19 சிறப்பு மருத்துவமனையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

சென்னையில் COVID–19 மருத்துவமனையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ள ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மொத்தம் 500 படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். இங்கு கொரோனா வைரஸினால் பாதிக்கப்படக்கூடிய நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்க மொத்தம் 200 மருத்துவர்கள், 200 செவிலியர்கள், 100 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், 180 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் 40 பாதுகாவலர்களைப் பணியமர்த்த உத்தரவிட்டார். மேலும், தமிழ்நாடு மருத்துவ கழகத்தின் சார்பில் பத்து கோடி ரூபாய் மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் இம்மருத்துவமனைக்கு வழங்கவும், 24 மணி நேர காய்ச்சல் புற நோயாளிகள் பிரிவு மற்றும் தீவிர சிகிச்சை பிரிவுகளும் செயல்பட அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, மருத்துவ மற்றும் ஊரக நலத்துறை இயக்கக வளாகத்தில் (DMS Campus) அமைக்கப்பட்டுள்ள சுகாதாரத் துறை அவசர கால கட்டுப்பாட்டு அறையையும் பார்வையிட்டு, அங்கு பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் பிற பணியாளர்களைப் பாராட்டி ஊக்குவித்தார்.

கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு தீவிரமாக மேற்கொண்டு வரும் இத்தருணத்தில் பொதுமக்களும் இந்நோய்ப் பரவலின் தீவிரத்தை உணர்ந்து தமிழ்நாடு அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 17.04.2020 சேலம் மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில், சேலம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கொரோனா வைரசால் ஏற்படும் பொருளாதார பாதிப்பை எதிர்கொள்ள ரூ.9,000 கோடியை சிறப்பு பங்களிப்பு நிதியாக வழங்கவேண்டும்!

மாண்புமிகு பிரதமர் திரு. **நரேந்திர மோடிக்கு** அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் எழுதிய நேர்முக கடிதத்தின் தமிழாக்கம் 28.03.2020

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க ஊரடங்கு உத்தரவை தமிழ்நாடு அரசு தொடர்ந்து அமல்படுத்தி வருகிறது. வெளிநாட்டு பயணம் மேற்கொண்டவர்களை தொடர்ந்து கண்காணித்தல், அவர்களை பரிசோதனை செய்தல், தனிமைப்படுத்துதல், சிகிச்சை போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு அது சமூகத் தொற்றாக மாறிவிடாதபடி தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் சாதாரண அடித்தட்டு மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வகையில் அவர்களுக்கு தேவையானவை தொடர்ந்து விநியோகிக்கபட்டு வருகிறது.

இதுபோன்ற நிலையில் நிவாரண உதவிகளை அறிவித்ததற்கு நன்றி தெரிவிக்கிறேன். வட்டிவிகிதம் குறைப்பு உள்ளிட்ட ரிசர்வ் வங்கியின் அறிவிப்புகள், இந்திய பொருளாதாரத்துக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும். ஏழை மக்களின் நலன் ஊரடங்கு உத்தரவை கண்டிப்பாக அமல்படுத்தும் அதே நேரத்தில் ஏழை, எளியவர்களுக்கான நலன் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதும் அவசியமாகிறது. இதற்காக பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழக அரசு அறிவித்துள்ளது. மேலும் நிவாரண உதவிகள் அடுத்து வருகின்ற நாட்களில் தேவைப்படுகிறது.

மருந்து உபகரணங்கள், உள்கட்டமைப்பு வசதிகளை செய்ய அதிக நிதி தேவைப்படும் நிலை ஏற்படும். பல பிரிவு மக்களின் தொழில் வளர்ச்சியை மீண்டும் எட்ட அவர்களுக்கு உதவி செய்வதோடு, அவர்களின் பொருளாதார மேம்பாட்டை புதுபிக்க நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. இதன் மூலம் எல்லா அரசுக்கும் வரி குறைப்பு, வருவாய் இழப்பு ஆகியவற்றில் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது. GSTPயில் சில விதிவிலக்கு சில காலங்களுக்கு வருவாயை உயர்த்தி கொள்ள முடியாது.

இந்த நிலையில் 2019–2020 மற்றும் 2020–2021ஆம் நிதியாண்டுக்கான GSTPயில் சில விதிவிலக்கை கேட்டு கடந்த 25ஆம் தேதி கடிதம் எழுதி இருந்தேன். அது, மாநிலத்தின் கூடுதல் செலவை எதிர்கொள்ள உதவும். தற்போது உள்ள இந்திய நிதி பரிவர்த்தனை முறைகளின்படி, ரிசர்வ் வங்கியிடம் இருந்து மத்திய அரசு மட்டுமே கடன் பெற்றுக்கொள்ள வழிவகை உள்ளது. ஆனால், ஊரடங்கு உத்தரவினால் பொருளாதாரத்தில் இதுவரை இல்லாத மிகக் கடுமையான தாக்கம் இருக்கும்.

இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலையில் பொருளாதாரத்தை புதுப்பிப்பதற்காக வழக்கத்தில் இல்லாத முறையை பின்பற்ற வேண்டியதுள்ளது. வழக்கமாக உள்ள பொருளாதார கொள்கை, கோட்பாடுகளை எல்லாம் தற்காலிகமாக ஓரம் ஒதுக்கிவிட்டு மாற்று ஏற்பாட்டை கைக்கொள்ளலாம்.

எனவே, இந்த சூழ்நிலையில் மாநில அரசுகள் கூடுதலாக கடன் பெறுவதை அனுமதிப்பதோடு, மாநில அரசுகளுக்கு சிறப்பு மானியமாக குறைந்தபட்சம் ஒரு இலட்சம் கோடி ரூபாயை அனுமதிக்க வேண்டும். மத்திய அரசின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி.) மாநில அரசு அளித்துள்ள பங்களிப்புக்கு ஏற்ற விகிதத்தில் மாநில அரசுகளுக்கு நிதிப்பகிர்வை வழங்கலாம். அந்த வகையில் தமிழகத்துக்கு சிறப்பு பங்களிப்பு நிதியாக ரூ.9,000 கோடியை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலையில், தேச நலனுக்காக தைரியமான, கடினமான, வழக்கத்துக்கு மாறான முடிவுகளை எடுப்பதோடு, எங்களின் சிறப்பான கோரிக்கையை பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊரடங்கு நேரத்தில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைக்கவும் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது!

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
பத்திரிகை செய்தி – 29.03.2020

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் நோய் தொற்றைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்துவருகிறது. மக்களின் நடமாட்டத்தை குறைத்து, நோய் தொற்று பரவுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துவரும் அதேவேளையில், பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம், அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைக்கவும் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவருகிறது.

இதன் தொடர்ச்சியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்கள்.

❖ இதர மாநிலங்களை சார்ந்த தொழிலாளர்களுக்கு தேவையான இருப்பிட வசதி, உணவு வசதி மற்றும் மருத்துவ வசதிகள்அனைத்தும் முன்புவேலை பார்த்த நிறுவனங்களே தொடர்ந்து ஏற்பாடு செய்யவேண்டும். இதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் தற்போதுள்ள இருப்பிடம் நெருக்கடியாக இருப்பின், மாற்று தங்கும் வசதி ஏற்படுத்தித்தர உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ வெளி மாநிலத்தை சார்ந்த தொழிலாளர்கள் சிலர், அவர்கள் முன்பு பணியிலிருந்த இடங்களில் இருந்து வெளியேறி இதர நகரங்களுக்கோ, ரயிலில் பயணம் மேற்கொள்ள ரயில் நிலையங்களுக்கோ வந்து வெளியில் இருந்தால், அத்தகைய தொழிலாளர்களை தற்காலிக முகாம்களில் தங்கவைத்து, உணவு மற்றும் மருத்துவ வசதி செய்து தருமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெளிமாநில தொழிலாளர்களுக்கான உணவு, தற்காலிக இருப்பிடம், மருத்துவ வசதிகள் மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. வெளி மாநிலத்தை சார்ந்த தொழிலாளர்களின் தேவையை அறிந்து அவர்கள் தங்குமிடங்களில் இருக்கும் வசதிகளை மேம்படுத்தும் முகமாக, மாநிலத்தில் உள்ள வெளிமாநிலத்தை சார்ந்த அமைப்புகளின் தலைவர்களோடு ஒருங்கிணைந்து செயல்பட உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ ஏற்கெனவே, பல்வேறு பணிகளை ஒருங்கிணைந்து செயல்படுத்த மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்டு ஒன்பது சிறப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, வெளிமாநிலத்திலிருந்து இங்கு தங்கியுள்ள தொழிலாளர்கள் மற்றும் வெளி மாநில மாணவர்களின் நலனை ஒருங்கிணைக்கவும், முதியோர், ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளிகள் நலனை கருத்தில்கொண்டு அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வதுடன், அத்தியாவசிய பொருட்கள் அவர்களுக்கு கிடைக்கும் வகையில் கண்காணிக்கவும் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்டு இரு தனி குழுக்கள் கூடுதலாக அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ மாத இறுதியில் சம்பளம் வழங்குவதை உறுதிசெய்ய, பள்ளி, கல்லூரிகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பளப்



பட்டியலைதயாரிக்க, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் இரண்டு அல்லது மூன்று ஊழியர்களுக்கு மட்டும் மார்ச் 30, 31 மற்றும் ஏப்ரல் 1 ஆகிய மூன்று நாட்களில் சம்பளப் பட்டியல் தயாரிக்க மாவட்டஆட்சியர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மூலம் சிறப்பு அனுமதி அளிக்கப்படும்.

❖ அனைத்து மாவட்டங்களிலும், கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக மாவட்ட ஆட்சியரின் தலைமையில்கீழ் பேரிடர் மேலாண்மை சட்டப்படி, தொழில் வர்த்தக சபை (Chamber of Commerce), தனியார் மருத்துவமனைகளின் நிருவாக இயக்குநர்கள், மருத்துவ வல்லுநர்கள், மருந்தக தயாரிப்பாளர்கள், வேளாண்மை மற்றும் கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம் ஆகிய துறைகளின் அரசு மற்றும் தனியார் துறையை சார்ந்த முகவர்கள், உணவுத் தயாரிப்பாளர்கள், அதன் விநியோகஸ்தர்கள், அரசுசாரா அமைப்பினர் (NGOs), நுகர்வோர் பிரதிநிதிகள்ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்டு நெருக்கடிகால மேலாண்மைக் குழு (Crisis Management Committee) ஒன்று அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

❖ கூட்டுறவு சங்கங்கள், வாகனங்கள் மூலம் அத்தியாவசிய பொருட்கள், காய்கறிகளை தேவையான இடங்களுக்கு எடுத்துச் சென்று சமூக விலகலைபின்பற்றி பொருட்களை விநியோகிப்பதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

❖ கொரோனா நோய் சமூக பரவலாக மாறுவதைத் தடுக்க,மாநிலத்தின்பல்வேறுபகுதிகளில்கொரோனா நோய் தொற்றுக்கு ஆளானவர்களின் சுற்று வட்டார பகுதிகள், ‘கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக’ (Local Containment) வரையறுக்கப்பட்டு தீவிர நோய் தடுப்பு நடவடிக்கைகள் சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் கடந்த இரண்டு நாட்களாக மேற்கொள்ளப்படுகிறது.இப்பகுதிகளில் இருந்து ஐந்து கிலோமீட்டர் சுற்றளவு வரையுள்ள பகுதி முழுவதும் நோய்க்கானஅறிகுறிகள் குறித்து வீடுகள்தோறும் ஆய்வு செய்து கண்காணிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

❖ முதியோர்கள், சர்க்கரை நோயாளிகள், உயர் இரத்த அழுத்த நோயாளிகள், நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு உள்ளவர்களை ஒவ்வொரு குடும்பமும் தாங்களே முன் வந்து அவர்களை தனிமைப் படுத்திக்கொண்டு, வீட்டில் உள்ள மற்ற குடும்ப நபர்கள் தொடர்பில் இல்லாமல் பார்த்துக்கொண்டு, நோய் தொற்றிலிருந்து அவர்களை காப்பாற்றி பாதுகாக்கும்படி கேட்டுகொள்ளப்படுகிறது.

❖ வருகின்ற இரண்டு மாதங்களில் பிரசவிக்க உள்ள சுமார் 1.5 இலட்சம் தாய்மார்கள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களின் உடல்நிலை குறித்து தனிகவனம் செலுத்துமாறு மருத்துவ அலுவலர்கள் கேட்டுகொள்ளப்படுகிறார்கள். அவர்களுக்கு தேவையான உதவிக்கு 102, 104 ஆகிய எண்களை தொடர்புகொண்டு உதவிகளை பெற்றுக்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

❖ தீவிர சுவாசக் கோளாறுடன் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அனைவரையும் கண்காணிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனைகள், இத்தகைய நோய் உள்ளவர்கள் குறித்து சுகாதாரத் துறைக்கு தெரிவிக்கவேண்டும்.

❖ மாநிலத்தில் பெரும்பான் மையான பகுதிகளில் பொருட்கள் வாங்கும் போது சமுதாய விலகல் கடைபிடிக்கப்பட வேண்டும் என்ற அறிவுரை தொடர்ந்து அரசால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் சமுதாய விலகல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், சில இடங்களில், குறிப்பாக மீன் அங்காடி, இறைச்சிக் கடை மற்றும் காய்கறி கடைகளில் இது முழுமையாகக் கடைபிடிக்கப்படுவதை கடுமையாக செயல்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எவ்வளவு சட்டம் போட்டாலும், மக்கள் ஒத்துழைக்க வேண்டும், கடுமையான சட்டம் என்பது மக்களை துன்புறுத்துவதற்கு அல்ல, விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு தான்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 30.03.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் குறித்த ஆய்வுக் கூட்டத்திற்கு பின்பு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.

கொரோனா வைரஸ் தொற்று நோய் உலகம் முழுவதும் பரவியிருக்கின்ற இந்த சூழ்நிலையில் இந்தியாவிலும் இந்த நோய் பரவியிருக்கின்றது, தமிழகத்திலும் இந்த நோய் பரவியிருக்கின்றது. இன்றைக்கு உலக அளவில் 199 நாடுகளில் இந்த கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவியிருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான பேர் இந்த வைரஸ் நோயால் இறந்துள்ளார்கள். இந்தியாவை பொறுத்தவரைக்கும் கொரோனா வைரஸ் தொற்று நோயால் இறந்தவர்களுடைய எண்ணிக்கை 27. தற்போது தமிழகத்தில் ஒருவர் மட்டும் தான் இறந்திருக்கிறார். இந்தியாவில் 1,139 பேர் பாசிடிவ் என சோதனையின் வாயிலாக கண்டறியப்பட்டு அவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் நேற்றையதினம் வரை 50 பேர் கண்டறியப்பட்டு அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இப்போது மேலும் கூடுதலாக 17 பேர் இன்றைக்கு இந்த வைரஸ் நோயால் தாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களையும் சேர்த்து 67 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நோய் ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள், முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில், கொரோனாவுக்கென்று அரசு மருத்துவமனை, தனியார் மருத்துவமனையோடு இணைந்து 17,089 படுக்கை வசதிகள் தயார் நிலையில் இருக்கிறது. தனியாரையும் சேர்த்து இன்றைக்கு வென்டிலேட்டரின் எண்ணிக்கை 3,018. நோயாளிகளுக்கு சோதனை செய்வதற்காக அரசும், தனியாரும் சேர்ந்து 14 மையங்களில் ஆய்வக வசதி ஏற்படுத்தியிருக்கிறோம். விரைவில் மேலும் 3 ஆய்வு மையங்கள் ஏற்படுத்தப்பட உள்ளது. இதுவரை விமான நிலையங்களில் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை 2,09,234. 28 நாட்கள் கண்காணிப்பு முடிந்த நபர்களின் எண்ணிக்கை 3,420. ஆய்வக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,981. வீடுகளில் கண்காணிக்கப்பட்டு வரும் நபர்களின் எண்ணிக்கை 43,537. தனிமைப்படுத்தப்பட்ட மையங்களில்

கண்காணிப்பில் இதுவரை இருந்தவர்களின் எண்ணிக்கை 1,641. கொரோனா வைரஸ் நோய் சந்தேகிக்கப்பட்டு உள்நோயாளியாக தனிப்பிரிவில் இருந்துள்ளவர்களின் எண்ணிக்கை 1,925. கொரோனா தொற்று நோய் கண்டறியப்பட்டு உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, குணமாகி வீட்டிற்கு திரும்பியவர்களின் எண்ணிக்கை 5. இதுவரை என்னுடைய தலைமையில் 8 முறை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றிருக்கின்றன. ஒவ்வொரு ஆலோசனைக் கூட்டத்திலும் தலைமைச் செயலாளர், சம்பந்தப்பட்ட துறைகளின் அமைச்சர்கள், DGP மற்றும் நியமிக்கப்பட்ட அரசு உயர் அதிகாரிகளுடைய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று ஒவ்வொரு மாவட்டத்திலும், இந்த நோயினுடைய தடுப்புப் பணி எவ்வாறு இருக்கின்றது என்பதையெல்லாம் ஆய்வு செய்து அதற்கேற்றவாறு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு Task Force குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட அவர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு பலமுறை கூடி ஆலோசனை செய்திருக்கின்றது. அதோடு, தலைமைச் செயலாளர் அவர்களும் காணொலி காட்சி மூலமாக இதுவரை 4 முறை மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் தொடர்பு கொண்டு ஆலோசனை நடத்தியிருக்கின்றார். இன்றையதினமும் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் தொடர்பு கொண்டு ஆலோசனை செய்ய இருக்கின்றார். நானும், அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களோடு காணொலிக் காட்சி மூலம் தொடர்பு கொண்டு, மாவட்டங்களில் இருக்கின்ற நிலைமைகளைக் கண்டறிந்து அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளேன். அதோடு, அரசு ஒன்றரை கோடி Mask வெளியிலிருந்து வாங்குவதற்கு order செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் 25 இலட்சம் N–95 Mask வாங்குவதற்கும் order செய்யப்பட்டிருக்கின்றது. 11 இலட்சம் பாதுகாப்பு கவசம் வாங்குவதற்கு order செய்யப்பட்டிருக்கின்றது. 2,500 வென்டிலேட்டர் புதிதாக வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. 30,000 Test Kit வாங்குவதற்கு அரசால் order கொடுக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் 121 test மாதிரி வர இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் தலைமையில் 11 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த 11 குழுவும் தனித்தனியாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பணியை நாங்கள் வரையறை செய்து கொடுத்திருக்கின்றோம். அந்தப் பணியை அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இதனால், இந்த நோய் தடுப்புப் பணி வேகமாக, விரைவாக செயல்பாட்டுக்கு வந்திருக்கின்றது. குறிப்பாக சொல்லவேண்டுமென்று சொன்னால்,

முதல் குழு – மத்திய அரசு மற்றும் பிற மாநில தொடர்புகள், மத்திய தகவல் மையம். ஆகியவற்றையும்

இரண்டாவது குழு – மருத்துவ உபகரணம் உட்பட அத்தியாவசியப் பொருட்களின் தொழிற்சாலை உற்பத்தி, மாநிலத்திற்கிடையேயான நகர்வையும்,

மூன்றாவது குழு – மாநில மாவட்ட அளவில் உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தி, நகர்வு, விநியோகத்தையும்,

நான்காவது குழு – செய்தி ஒருங்கிணைப்பையும்,

ஐந்தாவது குழு – தனியார் மருத்துவனைப் பணிகள் ஒருங்கிணைப்பு மற்றும் தொற்றுநோய் கண்காணிப்பையும்,

ஆறாவது குழு – போக்குவரத்து வசதிகளையும்,

ஏழாவது குழு – நோயாளியுடன் தொடர்பில் உள்ளவர்களைக் கண்டறிதல், தனிமைப்படுத்துதல், நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை, மருத்துவ உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வாங்கி விநியோகம் செய்யும் பணியையும்,

எட்டாவது குழு – நோய் தடுப்பு, மருந்து தெளித்தல் பணியையும்,

ஒன்பதாவது குழு – நிவாரண ஒருங்கிணைப்பு, தன்னார்வக் குழுக்களை ஒருங்கிணைத்தல், தனிமைப்படுத்தல் குழுவிற்கு உதவுதல் போன்ற பணிகளையும்,

பத்தாவது குழு – வெளி மாநில தொழிலாளர் மற்றும் மாணவர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளி மாநிலத்திலுள்ள தமிழ்நாடு தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுடைய விவரங்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யும் பணியையும்,

பதினொன்றாவது குழு – முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சிறப்பு உதவி கோருதல், முதியோர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் தேவையான உதவிகளைச் செய்தல், அவர்களுக்கு உணவு வழங்குதல், மருத்துவ சிகிச்சை அளித்தல் போன்ற பணிகளை இந்தக் குழுக்கள் மேற்கொள்ளும்.

இன்றைக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்காக இந்த 11 குழுக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குழு அமைக்கப்பட்டதன் காரணமாக, தமிழகத்தில் இந்த நோய் தடுப்புப் பணி மிக வேகமாக, துரிதமாக இன்றைக்கு செயல்பாட்டில் வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் ஆய்வகங்கள் அதிகமாக உள்ளன, ஆனால் பரிசோதனை குறைவாக உள்ளதே ?

பதில் : அறிகுறி இருந்தால்தான் நாம் test செய்ய முடியும். நம்முடைய அறிவிப்பே என்ன? மாண்புமிகு பாரதப் பிரதமரும் சரி, மத்திய சுகாதாரத் துறையும் அறிவிப்பு கொடுத்தது என்னவென்றால், யாருக்கு அறிகுறி உள்ளதோ, அவர்களுக்கு இந்த test செய்ய வேண்டும் என்பதுதான். அந்த test நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1,981 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 14 ஆய்வகங்களில் பரிசோதனை நடைபெற்று வருகிறது. மேலும், 3 கேட்டிருக்கின்றோம், அதற்கும் அனுமதி கிடைத்துவிடும். ஆகவே, 17 ஆய்வகங்கள் அமைக்கப்படும். ஆகவே, யார் யாருக்கெல்லாம் அறிகுறி இருக்கின்றதே, அவர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு, அந்த பரிசோதனையில் positive வந்தால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு உரிய சிகிச்சைகள் செய்யப்படும்.

கேள்வி : வெளியூர் செல்வதற்கு அனுமதி பெறுவதில் சிரமம் உள்ளதே?

பதில் : ஒன்று குடும்பத்தில் ஏதாவது இறப்பு ஏற்பட்டால் துக்க காரியங்களுக்கு செல்லலாம். ஏற்கனவே திருமணம் ஏற்பாடு செய்திருந்து, திருமணம் நடந்தால் அதற்கு அனுமதி அளிக்கப்படும். இரண்டாவது, குடும்பத்தில் யாராவது நோய்வாய்ப்பட்டிருந்தால், மருத்துவமனையில் சேர்க்க வேண்டுமென்றால் அனுமதி கொடுத்திருக்கிறோம். மற்ற எதற்கும் கிடையாது. எப்படி அனுமதி வாங்க வேண்டும் என்று தெளிவுபடுத்தியிருக்கிறோம். அந்தந்த மாவட்டத்தில் வட்டாட்சியரிடத்திலேயே அனுமதி பெற்றுக் கொள்ளலாம். எல்லோரும் வெளியே செல்ல வேண்டுமென்றால், அதற்கு 144 தடை உத்தரவு போடவேண்டிய அவசியமே இல்லை.

கேள்வி : காய்கறி, மளிகை கடைகளுக்கு நேரக் கட்டுப்பாடு எந்த அளவு கடைபிடிக்கப்படுகிறது?

பதில் : நாங்கள் ஒரு சட்டத்தை போட்டிருக்கிறோம். இந்த சட்டம் மக்களுக்கு எந்த அளவில் நன்றாக இருக்கிறது என்று ஊடக நண்பர்கள்தான் சொல்ல வேண்டும். தற்போதுள்ள தொற்றுநோய் ஒரு கடுமையான நோய் என்று தொலைக்காட்சி, பத்திரி கைகள் மூலமாகவும் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். நீங்களும் மக்களுக்கு இந்த நோயைப் பற்றிய முக்கிய தகவல்களையெல்லாம் தெரிவித்துக் கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் தினந்தோறும் காலையிலும், மாலையிலும் வாகனத்தில் ஒலிபெருக்கியின் மூலமாக இந்த நோயின் தாக்கத்தைப் பற்றி எடுத்துக்கூறி வருகிறோம், பத்திரிகை வாயிலாகவும் தெரிவிக்கிறோம். நாம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, நம்மை நாம் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நோய்க்கு மருந்தே தனிமை தான். தனிமையில் இருந்தால் இந்த நோய் வராமல் தடுக்கலாம். stage 2-க்கு வந்திருக்கிறது. ஆகவே, இந்த நிலையிலேயே இந்த நோய் மேலும் பரவாமல் நாம் கட்டுப்படுத்திவிட்டால், நமக்கு எந்தப் பிரச்சினையும் எழாது. இதற்கு மக்கள் முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து ஊடக நண்பர்களும், பத்திரிகை நண்பர்களும் அனைத்து தரப்பு மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அரசு மூலமாகவும், நோட்டீஸ் அடித்தும், துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டும் ஒவ்வொரு வீடாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

எவ்வளவு தான் சட்டங்கள் போட்டாலும், மக்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். கடுமையான சட்டம்

என்பது மக்களை துன்புறுத்தவதற்கு அல்ல, விழிப்புணர்வு ஏற்படுத்தவதற்குத் தான். அரசாங்கம் சட்டம் போட்டிருக்கிறது, அதை அனைவரும் மதிக்க வேண்டும். நம் மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும், நம் நாட்டை பொறுத்தவரைக்கும் மக்கள் தொகை நிறைந்த மாநிலம், மக்கள் தொகை நிறைந்த நாடு. இதுவரை, இதுபோன்ற சம்பவத்தை நாம் சந்திக்கவேயில்லை, இது ஒரு சவாலான நேரம். இந்த நேரத்தில் படிப்படியாகத் தான் மக்களுக்கு விழிப்புணர்வை கொண்டு வர முடியும். அந்த நிலையில், தமிழகத்தை பொறுத்தவரைக்கும் மற்ற மாநிலங்களை விட மக்களின் ஒத்துழைப்பு ஓரளவு இருக்கின்றது, இன்னும் படிப்படியாக மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று, இந்த நோய் பரவுவதை தடுக்க அனைத்து முயற்சிகளும் அரசு எடுத்து வருகிறது.

கேள்வி : அனைத்து நியாய விலைக் கடைகளிலும் ரூ.1,000 எந்த முறையில் வழங்கப்பட உள்ளது ?

பதில் : இன்றைக்கு அனைத்து மாவட்டங்களிலுமே அந்தந்த அமைச்சர் தலைமையில் கூட்டம் நடக்கிறது. இன்றைக்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக மக்களுக்கு பொருட்களை எப்படி விநியோகிப்பது, குடும்பத்திற்கு 1,000 ரூபாய் அரசு அறிவித்திருக்கின்றது, அதை எப்படி மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற விவரங்களையெல்லாம் தெளிவாக முடிவெடுத்து அறிவிக்கப்படும். அந்தந்த மாவட்டங்களில் உள்ள நிலைமைக்கேற்ப அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே முடிவு செய்து கொள்ளலாம் என்று கூறியிருக்கிறோம்.

கேள்வி : நிலவேம்பு கஷாயம் போன்று வேறு மருந்து பொதுமக்களுக்கு வழங்கப்படுமா ?

பதில் : இது மிகப் பெரிய தொற்று நோய், இந்த நோய்க்கு மருந்தே கண்டுபிடிக்கவில்லை. வல்லரசு நாடுகளே சரியான மருந்தை கண்டுபிடிக்கவில்லை. சளி, இருமல், காய்ச்சல் வருகின்றபொழுது அறிகுறி தென்படுகிறது, அப்படி அறிகுறி தென்பட்டால், உடனடியாக மருத்துவமனையை அணுகவேண்டும் என்று பத்திரிகை வாயிலாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் அறிவிக்கின்றோம், வாகனங்களில் ஒலிபெருக்கி மூலமாக நோயின் அறிகுறிகள் தொடர்பாகவும், அறிகுறி வந்தால் என்ன செய்யவேண்டும் போன்றவற்றையெல்லாம் மக்களுக்கு அறிவுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றோம். அதேபோல அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி தெளிக்கின்றோம், தொற்று நோய் வராமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாவட்ட எல்லைகள் மற்றும் மாநில எல்லைகள் மூடப்பட்டிருக்கின்றன. காய்கறிகள், பழங்கள் கொண்டுவரும் வண்டிகளுக்கெல்லாம் கிருமி நாசினி அடிக்கப்படுகிறது, அந்த வண்டியின் டிரைவர் மற்றும் கிளீனருக்கு கிருமி நாசினியை கொடுத்து கைகளை சுத்தம் செய்துகொள்ளச் சொல்கிறோம். அத்தியாவசியமான பொருட்களான பருப்பு, புளி, எண்ணெய் போன்றவை மற்ற மாநிலங்களிலிருந்தும் நம் மாநிலத்திற்கு கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கேள்வி: முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு எவ்வளவு தொகை வந்துள்ளது ?

பதில்: முதலமைச்சர் பொது நிவாரண நிதி வந்து கொண்டே இருக்கிறது. இன்றைக்கு கூட பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்திருக்கின்றோம். பலர் நிதி கொடுக்க முன் வருகிறார்கள். பலர் அரிசி, பருப்பு, எண்ணெய் போன்ற பொருளாகவும் கொடுக்கிறார்கள். சென்னையில் 20 முகாம்கள் இருக்கின்றன. வெளிமாநிலத்தில் இருந்து இங்கே தங்கி இருப்பவர்களுக்கு, உணவு, மருந்து வசதிகளை செய்து கொடுக்கிறோம். எல்லா மாவட்ட தலைநகரங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். வெளிமாநிலத்திலிருந்து இங்கு வந்து பணிபுரிபவர்களுக்கு தேவையான தங்கும் வசதி, உணவு, மருத்துவ வசதி அளிக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆங்காங்கே இருக்கின்ற முதியோர்களுக்கு ஏற்கனவே அங்கன்வாடியில் உணவு கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் ஆதரவற்ற முதியோர்கள் இருந்தால் சத்துணவுக்கூடங்கள் மூலமாக சமையல் செய்து கொடுக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மாற்றுத்திறனாளிகள் யாராவது இருந்தால் அவர்களுக்கு தேவையான உதவிகளையும், மருத்துவ உதவிகளையும் செய்ய அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அனைத்து ஏற்பாடுகளையும் அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கொரோனா தொற்று நோய் பாதிக்கப்பட்டவர்களில் ஈரோட்டில் 10 பேர், சென்னையில் 5 பேர், மதுரையில் 1, கரூர் 1 (திருவாரூரில் பரிசோதனை செய்யப்பட்டது) என 17 நபர்களுக்கு கொரோனா தொற்று நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கேள்வி : ஒரே நாளில் 17 அதிகரித்துள்ளதற்கு என்ன காரணம் ?

பதில் : ஒரே நாளில், 17 நபர்களுக்கு கொரோனா தொற்றுநோய் அறிகுறி இருப்பதற்குக் காரணம், டெல்லிக்கு 1,500 பேர் கொண்ட குழுவாக சென்றிருக்கிறார்கள். அந்தக் குழுவில் சென்றவர்களுக்குத் தான் இந்த தொற்று எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஈரோட்டில் 24 பேருக்கு இருக்கிறது. அதேபோல, இந்த குழுவில் சென்ற 1,500 பேரில் 981 பேர் வந்துவிட்டார்கள், இன்றைக்கு அந்த 981பேரையும் பரிசோதனை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் குழுவில் இடம் பெற்று சென்றவர்களால் தான் இவ்வளவு தொற்று எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

கேள்வி : போதுமான அளவு முகக் கவசம் உள்ளதா ?

பதில் : கொரோனா தடுப்புப் பணிகளுக்கான எல்லா பொருட்களும் இருப்பு இருக்கிறது. இது சீனாவில் ஏற்படும் போதே நாம் இந்த பொருட்களை இருப்பு வைத்து விட்டோம், மற்ற மாநிலங்களைப் போல் அல்ல. நம் மாநிலத்தில் முகக்கவசங்கள் தேவையான அளவிற்கு வைத்திருக்கின்றோம். நீங்கள் சொன்னதைப் போல N–95 மாஸ்க் இப்போது ஆர்டர் கொடுத்திருக்கின்றோம். இப்பொழுது நம்மிடம் தேவையான அளவிற்கு இருக்கிறது. இருந்தாலும் கூடுதலாக 25 இலட்சம் N–95 முகக்கவசங்கள் ஆர்டர் கொடுத்திருக்கின்றோம்.

கேள்வி : பல்வேறு மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்படுமென நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள், அதேபோன்று, தமிழ்நாட்டைச் சேர்ந்த வெளி மாநிலங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அந்த மாநில அரசுகள் மூலம் தேவைப்படும் உதவிகளை செய்ய நீங்கள் கேட்டுக்கொண்டுள்ளீர்களா ?

பதில் : வெளி மாநிலத்தில் வாழும் தமிழர்களுக்கு தமிழ்நாட்டில் நாம் என்னென்ன உதவிகளை செய்தோமோ, அதே உதவியை மற்ற மாநிலங்களும் செய்ய வேண்டும் என்று தெரிவித்திருக்கிறோம். அதற்குண்டான செலவை நம் மாநில அரசு கொடுக்கும் என்றும் தெரிவித்திருக்கின்றோம். இன்றைக்கு மகாராஷ்டிராவில் 600 பேர் இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. அந்த மாநில முதலமைச்சர் அவர்களை தொடர்பு கொண்டு, அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்யுங்கள், என்ன செலவாகிறதோ அதை நாங்கள் கொடுக்கிறோம் என்று தெரிவித்திருக்கின்றோம்.

மாநில எல்லைகளை மத்திய அரசு சீல் வைத்து விட்டது. மாநிலம் விட்டு மாநிலம் வர முடியாது. இது பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. உங்களுக்கு நன்றாக தெரியும். இன்றைக்கு ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு வருவதற்கு எல்லைகள் மூடப்பட்டுள்ளன. ஆகவே, அந்தந்த மாநிலத்தில் இருக்கின்ற தொழிலாளர்கள், தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கு தொழில் செய்ய போனவர்களுக்கு, அங்கேயே அவர்களுக்கு தேவையான வசதிகளை அந்த மாநிலமே செய்து கொடுக்கும். இதை மத்திய அரசும் தெளிவுப்படுத்தி விட்டது. நம் மாநிலத்தை பொறுத்தவரைக்கும், வெளிமாநிலத்தில் இருக்கின்ற தொழிலாளர்கள் 1 இலட்சத்து 49 ஆயிரத்து 394 பேர். அதில் கட்டுமானப் பணியில் இருப்பவர்கள் 32,469 பேர். இதில் மாத ஊதியம் பெறுபவர்களுக்கு அந்தந்த நிறுவனமே அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்கிறது. மத்திய அரசாங்கம் அறிவித்தபடி அவர்களுக்கு தங்கும் இடம், உணவு, மருத்துவ வசதிகளை அவர்களே செய்கிறார்கள். Daily Wages அதாவது தினக்கூலி பெறுபவர்களுக்கு தமிழ்நாடு அரசாங்கம் தங்குமிடம், உணவு, மருத்துவ வசதிகளை செய்து கொடுக்கிறோம்.

கேள்வி: மின் கட்டணம் ரத்து செய்யப்படுமா ?

பதில்: அரசாங்கத்தினுடைய நிலையை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். பொதுமக்களிடமிருந்து வருகின்ற பணத்தில் தான் அரசாங்கம் செலவு செய்கிறது. அரசாங்கத்திற்கு என தனியாக பணம் வருவதில்லை. பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கு இது நன்றாக தெரியும். ஆகவே, இருக்கின்ற நிலைமைக்கு தக்கவாறு மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்யும்.

அடுத்த நான்கு மாதங்களில் உற்பத்தி செய்யப்படும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளில் குறைந்தபட்சம் 50 சதவீதத்தை தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் கொள்முதல் செய்யும்!

கொரோனா நோய் தடுப்புக்கான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ள சிறப்பு சலுகைகள் – 02.04.2020

உலகத் தொற்று நோயான கொரோனா வைரஸ் நோய் பரவலை தடுக்க தமிழ்நாடு அரசு பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக கொரோனா நோய் தடுப்புக்கான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளின் உற்பத்தியை தமிழ்நாட்டில் மேற்கொள்ள தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு புதிய சலுகைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார். அதன்படி,

1. கொரோனா நோய் தடுப்புக்கான கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து பொருட்களின் உற்பத்திக்கு சலுகைகள் வழங்கப்படும்.

   i. உள் நுழைவு செயற்கை சுவாசக் கருவிகள் (Invasive Ventilators)

   ii. N–95 முகக் கவசங்கள் (N95 Masks)

   iii. கொரோனா நோய் தடுப்புக்கான வைரஸ் எதிர்ப்பு மற்றும் மலேரியா எதிர்ப்பு மருந்துகள் (Anti Viral and Anti Malarial drugs used to treat COVID 19) – ஹைட்ராக்சிக் குளோரோ குவினோன், அசித்ரோமைசின் வைட்டமின்–சி (மாத்திரை மற்றும் திரவ வடிவில்)

   iv. தனி நபர் பாதுகாப்பு கவச உடை (Personal Protection Equipments as per applicable National standards).

   v. பல்வகை பண்பளவு கணினித் திரைகள் (Multi Parameter ICU Monitors)

2. மேற்படி மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து பொருட்களை ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள நிறுவனங்களோ அல்லது புதிய நிறுவனங்களோ தமிழ்நாட்டில் ஜூலை 31, 2020க்குள் புதிதாக உற்பத்தி செய்யத் துவங்கினால், சலுகைகள் வழங்கப்படும்.

3. குறு, சிறு நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இச்சலுகைகள் பொருந்தும்.

4. தகுதி வாய்ந்த நிறுவனங்களுக்கு, மொத்த மூலதனத்தில் 30 சதவீதம் மூலதன மானியம், 20 கோடி ரூபாய் உச்சவரம்பாகக் கொண்டு 5 ஆண்டு காலத்திற்கு சம தவணைகளாக பிரித்து வழங்கப்படும்.

5. மேற்படி பொருட்களை உற்பத்தி செய்யும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், சிறப்பு தொழில் நிறுவனங்களாக (Thrust Sector) கருதப்பட்டு, ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள சலுகைகளும் வழங்கப்படும்.

6. மேற்படி பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து நிறுவனங்களும் திட்ட அனுமதி உட்பட அனைத்து வித அனுமதிகளும் பெறுவதற்காக காத்திருக்காமல் உடனடியாக உற்பத்தியை துவக்கலாம். உற்பத்தி துவக்கிய பின்னர் அனுமதிகளை பெற்றுக் கொள்ளலாம். இவை அனைத்திற்கும் ஒற்றைச்சாளர அனுமதிகள் வழங்கப்படும்.

7. மேற்படி தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப குறுகிய கால அல்லது நீண்ட கால குத்தகை அடிப்படையில் சிப்காட் மற்றும் சிட்கோ நிறுவனங்கள் மூலம் முன்னுரிமை அடிப்படையில் நிலம் / கூடாரங்கள் (Sheds) வழங்கப்படும்.

8. 100 சதவீத முத்திரைத் தாள் கட்டண விலக்கு வழங்கப்படும்.

9. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடம் பெறப்படும் செயல்பாட்டு மூலதனக் கடனிற்கான (Working capital) வட்டியில் 6 சதவீதத்தை இரண்டு காலாண்டுகளில் (31.12.2020 வரை) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் மானியமாக அரசு வழங்கும்.

10. மேலும், அடுத்த நான்கு மாதங்களில் உற்பத்தி செய்யப்படும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளில், குறைந்தபட்சம் 50 சதவீதத்தை தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் கொள்முதல் (Purchase Guarantee) செய்யும். இதற்கென திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.

11. இத்திட்டத்தின்படி உற்பத்தி துவக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் சலுகைகள் வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

12. பெரு நிறுவனங்களுக்கு சிப்காட் நிறுவனமும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தொழில் வணிக ஆணையரகமும் இச்சலுகைகளை வழங்குவதற்கான முகமை நிறுவனங்களாக செயல்படும்.

கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் கடன் பெற்றவர்கள் தவணை தொகை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு நீட்டிக்கப்படுகிறது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – நாள் 31.3.2020

கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட உயர் அதிகாரிகள் கொண்ட பல்வேறு குழுக்களுடன் நேற்றைய தினம் (30.03.2020) கலந்தாய்வு செய்த பின்னர், இன்று நான் உயரதிகாரிகளுடன் ஆலோசித்து தமிழ்நாட்டு மக்களின் நன்மை கருதி, கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கின்றேன்:

❖ கூட்டுறவு நிறுவனங்களில் பயிர்க்கடன் பெற்றவர்கள் தவணைத்தொகை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.06.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.

❖ வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களுக்கு தவணைத்தொகை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.06.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.

❖ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு தவணைத்தொகை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.06.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.

❖ அனைத்து மீனவ கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கைத்தறி கூட்டுறவு சங்கங்களிலிருந்து பெறப்பட்ட கடனுதவிகளுக்கான தவணைத்தொகை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.06.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.

❖ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் (TIIC) கடன் பெற்றுள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் கடன் தவணைகளைச் செலுத்த மூன்று மாத கால அவகாசம் (30.06.2020 வரை) வழங்கப்படுகிறது.

❖ 'கோவிட் நிவாரணம் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்' என்ற சுமார் 200 கோடி ரூபாய் மதிப்பிலான சிறப்பு கடனுதவித் திட்டம் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் கடனுதவி பெற்றுள்ள 2,000 சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் அவசர மூலதனத் தேவைகளுக்காக செயல்படுத்தப்படும்.

❖ சிப்காட் நிறுவனத்திடம் மென்கடன் பெற்றுள்ள தொழில் நிறுவனங்கள் கடன் தவணை செலுத்த மூன்று மாத கால அவகாசம் வழங்கப்படுகிறது.

❖ சிப்காட் தொழில் பூங்காவில் செயல்பட்டு வரும் தொழில் நிறுவனங்கள் பராமரிப்புக் கட்டணம் செலுத்துவதற்கு மூன்று மாத கால அவகாசம் (30.06.2020 வரை) வழங்கப்படுகிறது.

❖ மோட்டார் வாகன (Motor Vehicles Act), சட்டப்படி உரிமங்கள் மற்றும் வாகன தகுதிச் சான்றுகள் (Licence & FC) புதுப்பிக்கப்பட வேண்டிய கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.06.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.

❖ எடைகளும், அளவைகளும் சட்டம் (Weights & Measures Act), தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் (TN Shops & Establishments Act), உள்ளாட்சி அமைப்புகளினால் அமல்படுத்தப்படும் கேடும் குற்றமும் பயக்கும் தொழிற்சட்டம் (Dangerous & Offence Act), ஆகியவற்றின் கீழ் புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமங்களின் கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.06.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.

❖ உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம் போன்றவை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.06.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது.

❖ தற்போது உள்ள சூழ்நிலையில், வாடகை வீடுகளில் குடியிருப்போர் வாடகை செலுத்துவதில் உள்ள சிரமங்களை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். எனவே, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்திற்கான வீட்டு வாடகைத் தொகையை இரண்டு மாதங்கள் கழித்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வீட்டு உரிமையாளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு கொரானா வைரஸ் தொற்றினை தடுப்பதற்காக 144 தடை உத்தரவை பிறப்பித்துள்ளது. அதே சமயத்தில், இந்நோய்த் தொற்று இரண்டாம் கட்டத்தில் இருப்பதாகவும், அது மூன்றாம் கட்டத்திற்குப் பரவாமல் இருக்க பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு தந்து, தங்கள் வீட்டிலேயே இருப்பது மிகவும் அவசியம் என்று நிபுணர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். எனவே, அத்தியாவசிய பொருட்களை வாங்க அரசு பிறப்பித்துள்ள நேரக் கட்டுப்பாடுகளை பொதுமக்கள் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். மேலும், எந்தவிதமான வதந்திகளை நீங்கள் நம்ப வேண்டாம். வதந்திகள் பரப்புவோர் மீது தமிழ்நாடு அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனவே, உங்களின் நன்மைக்காகவும், உங்கள் குடும்பத்தின் நன்மைக்காகவும், நம் நாட்டின் நன்மைக்காகவும், பொதுமக்கள் அனைவரும் அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

"விழித்திருப்போம்; விலகியிருப்போம்; வீட்டிலேயே இருப்போம்; கொரோனாவை வெல்வோம்."

ஒரு நாளைக்கு நான்கரை இலட்சம் பேருக்கு அம்மா உணவகத்தின் மூலம் உணவு வழங்கப்பட்டு வருகிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 01.04.2020 அன்று சென்னையில் அம்மா உணவகங்களை பார்வையிட்ட பின்பு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஏழை, எளிய மக்களுக்காக மலிவு விலையில் உணவு கொடுப்பதற்காக அம்மா உணவகத்தைத் திறந்து வெகு சிறப்பாக இன்றைக்கு தமிழகம் முழுவதும் அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. வேலைக்கு செல்கின்றவர்கள், ஏழை மக்கள் மலிவு விலையில் உணவை வாங்கி உண்ணுவதற்காக அம்மா கொண்டு வந்த உன்னதமான திட்டம் இந்தத் திட்டம். இன்றைக்கு தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில், அம்மா உணவகத் திட்டம் சிறப்பான திட்டம் என்று, இன்றைக்கு பல்வேறு மாநிலங்களில் அமல்படுத்தியிருக்கிறார்கள். அப்படி உன்னதமான திட்டம் இன்றைக்கு மக்களுக்கு கை கொடுக்கிறது. இன்றையதினம், உலகையே உலுக்கிக் கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸ் தொற்று நோய் கடுமையாக பாதிக்கப்பட்டு, சுமார் 199 நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது என பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியாவிலும் இந்த கொரோனா வைரஸ் தொற்று நோய் பல்வேறு மாநிலங்களில் பரவியிருக்கிறது, தமிழகத்திலும் பரவியிருக்கிறது. நேற்று இரவு வரை 124 பேர் இந்த கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கேள்வி: அம்மா உணவகத்தில் வழங்குகின்ற உணவுகளை இலவசமாக கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை இருக்கிறதே ?

பதில்: மலிவு விலையில் தானே உணவு இருக்கிறது. இப்பொழுது 1 ரூபாய்க்கு இட்லி தருகிறோம். இந்தியாவிலேயே 1 ரூபாய்க்கு 1 இட்லி கொடுத்து தமிழ்நாடு, அதற்கு முன்னுதாரணமாக விளங்கிக் கொண்டு இருக்கிறது.

கேள்வி: இப்போதைய சூழ்நிலையில் அம்மா உணவகத்தைத் தான் எல்லோரும் நம்பியிருக்கிறார்கள். இப்பொழுது திறந்திருக்கும் ஓட்டல்களில் விலை மிகவும் அதிகமாக இருக்கிறது என்கிறார்களே ?

பதில்: எவ்வளவு உணவு வேண்டுமென்றாலும் அம்மா உணவகத்தில் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். அதாவது ஒரு நாளைக்கு நான்கரை இலட்சம் பேருக்கு அம்மா உணவகத்தின் மூலம் உணவு வழங்கப்பட்டு வருகிறது. எவ்வளவு பேருக்கு வேண்டுமானாலும் உணவு தயாரிப்பதற்கு அரசால் உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் அம்மா உணவகத்தின் மூலமாக மக்களுக்கு எளிதாக மலிவான விலையில் உணவு கிடைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. மற்ற உணவகங்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளது. ஓட்டல்களில் அதிக விலைக்கு உணவுகளை எப்படி விற்க முடியும் ? பார்சல் பெறுவோர்கள் பெற்றுக் கொள்ளலாம். உணவகம் எங்கும் திறக்கவில்லை, அப்படி இருந்தால் சொல்லுங்கள், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கேள்வி: EMI வசூல் செய்யக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டும், வங்கிகளிலிருந்து EMI கட்ட மெசேஜ் வருகிறதே ?

பதில்: நேற்றைய தினம் எங்களுடைய நிதித்துறை செயலாளரும் வங்கி உயர் அதிகாரிகளும் பேட்டியே கொடுத்தார்கள். அவர்கள் தான் வசூல் செய்கிறார்கள், அவர்களே பேட்டியும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இது மத்திய அரசு சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதனால், மாண்புமிகு மத்திய நிதி அமைச்சரின் கவனத்திற்கு இதை கொண்டு போகிறோம். ஏற்கெனவே தமிழக அரசு தெளிவுபடுத்தியிருக்கிறது, மத்திய அரசும் தெளிவுபடுத்தியிருக்கிறது. இருந்தாலும், நீங்கள் சொல்வதை கவனத்தில் எடுத்துக் கொண்டு மத்திய அரசிடம் இதுகுறித்து வலியுறுத்தப்படும்.

கேள்வி: டெல்லியில் ஜமாத் கூட்டத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 1,500 பேர் பங்கு பெற்றார்கள். அதில் கிட்டத்தட்ட 500 பேரை கண்டுபிடித்து விட்டார்கள், மற்றவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்களை தனிமைப்படுத்துவதற்கு தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ?

பதில்: நேற்றைய தினம் அரசாங்கத்தின் உத்தரவின் பேரில், ஊடகத்தின் வாயிலாக சுகாதாரத் துறை செயலாளர் பேட்டியில் இதுகுறித்து தெளிவுபடுத்தியிருக்கிறார். சுமார் 1,500 பேர் அந்த Conference–இல் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதில் தமிழ்நாட்டிலிருந்து சுமார் 1,331 பேர் என்று கருதுகிறேன், அவர்கள் கலந்துகொண்டு திரும்பி வந்திருக்கிறார்கள். மீதம் உள்ளவர்கள் டெல்லியிலேயே இருக்கிறார்கள். கலந்து கொண்டவர்களில் தமிழ்நாட்டை சேர்ந்த 515 நபர்கள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறார்கள். பல்வேறு தகவல்களின் அடிப்படையில் அவர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேற்றைய தினம் அந்த சோதனைகளில், டெல்லி Conference–இல் கலந்து கொண்ட 45 பேருக்கு positive முடிவு வந்திருக்கிறது. அதனால் ஏனைய நபர்கள் தானாக முன்வந்து அரசுக்கு தகவல் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஏனென்றால்,

அவர்களுடைய விலாசம் முழுமையாக கிடைக்கவில்லை. எனவே, நேற்றைய தினம் சுகாதாரத் துறை செயலாளர் அவர்கள் ஒரு வேண்டுகோளாக வைத்திருக்கிறார். இதனால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், அவர்களது குடும்பம் பாதிக்கப்படுவது மட்டுமல்ல, நாட்டிலுள்ள பலர் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இந்த நோயினுடைய தாக்கத்தை அறிந்து, தாங்களாக முன்வந்து அரசிற்கு தெரிவிக்க வேண்டும். உங்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்படும். பலர் குணமாய் கொண்டிருக்கிறார்கள். ஆரம்ப கட்டத்திலேயே அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டால் குணமாகும் சூழ்நிலை இருக்கிறது. அதைத்தான் நமது சுகாதாரத் துறை செயலாளர் அவர்கள் ஊடகம் மற்றும் பத்திரிகையின் வாயிலாக வேண்டுகோள் வைத்திருக்கிறார்.

கேள்வி: கலந்து கொண்டு திரும்பியவர்களுக்கு பாதிப்பு இருப்பது போலவே 21ஆம் தேதி ஈஷாவில் கூட கூட்டம் நடந்திருக்கிறது, பலபேர் வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள். ஈஷா கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை ஆய்விற்கு உட்படுத்தும் வாய்ப்பு இருக்கிறதா ?

பதில்: அறிகுறி இருந்தால் வாய்ப்பு இருக்கிறது. அறிகுறி இருக்கின்ற காரணத்தால் தான் இவர்களுக்கு சோதனை நடத்துகிறார்கள், அறிகுறி இல்லாமல் எதையும் சொல்ல முடியாது. கிட்டத்தட்ட 4 இலட்சம் பேருக்கு மேல் தகவலின் அடிப்படையில் வீடு வீடாக சென்று 1 இலட்சம் வீடுகளுக்கு மேலாக நம்முடைய அதிகாரிகள் சென்று சோதனை செய்திருக்கின்றார்கள். இதுபோல், இருமல், காய்ச்சல், சளி போன்ற அறிகுறிகள் இருந்தால் அவர்களை மருத்துவமனையில் சேர்த்து பரிசோதனை செய்கிறோம். அந்த பரிசோதனையில் positive–ஆக வந்தால், அவர்களை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்கிறோம். இது நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. இதனடிப்படையில் திருக்கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் என அனைத்தையும் மூட அரசு உத்தரவிட்டிருக்கிறது. மத்திய அரசாலும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஏனென்றால், அந்த இடங்களெல்லாம் அதிகமான கூட்டம் கூடுகின்ற இடங்களாகும். அதனால் பலருக்கு இந்த தொற்று வந்துவிடும் என்ற காரணத்தினால் தான் அனைத்து மதம் சார்ந்த கோவில்களும் மூடப்பட வேண்டுமென்று அரசால் உத்தரவிட்டு மூடப்பட்டிருக்கின்றது. நீங்கள் தகவல் சொன்னால் அவர்களையும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். அதுமட்டுமல்ல, வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் list-யையும் எடுத்திருக்கிறோம். அவர்கள் வெளிநாட்டவர்களானாலும் சரி அல்லது தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியவர்களானாலும் சரி, அனைவரும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

கேள்வி: மருத்துவமனைகள் அமைப்பதற்கு அரசியல் கட்சிகள் உட்பட தனியார்கள் தங்களுக்கு சொந்தமான இடத்தை கொடுக்கிறார்கள், அலுவலகத்தை கொடுக்கிறார்கள், அதை பயன்படுத்த அரசு முன்வருமா ?

பதில்: அந்த அளவிற்கு இன்னும் தேவைப்படவில்லை. நாம் 17,000 படுக்கைவசதிகள் செய்து கொடுத்திருக்கின்றோம். 17,000 பேர் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சை செய்யக்கூடிய அளவிற்கு மருத்துவமனைகள் இருக்கின்றன. அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படுகின்ற போது அதையும் நாங்கள் பயன்படுத்தி கொள்வோம்.

கேள்வி: ஏப்ரல் 14ஆம் தேதிக்கு பிறகும் ஊரடங்கு உத்தரவு தொடருமா ?

பதில்: மத்திய அரசு 14ஆம் தேதி வரை அறிவித்திருக்கிறது. அதற்குப் பிறகு மத்திய அரசு தான் ஊரடங்கு உத்தரவை நீட்டிப்பது பற்றி முடிவு செய்யும்.

கேள்வி: 144 தடை உத்தரவு முதல் மூன்று நாட்கள் மக்கள் நல்ல முறையில் கடைப்பிடித்தார்கள். தற்போது அந்த கட்டுப்பாடுகள் குறைந்துள்ளதா ?

பதில்: ஊடகமும் பத்திரிக்கையும்தான் சொல்கிறீர்கள். அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கவில்லை என்றும், மருத்துவமனைகளுக்கு போக முடியவில்லை என்றும் சொல்கிறீர்கள். இப்படி நீங்களே தான் கேள்வியும் கேட்கிறீர்கள், நீங்களே தான் பதிலும் சொல்கிறீர்கள். நாங்கள் என்ன செய்ய முடியும். பொதுமக்களுடைய நலன் கருதி அனைத்து வகையிலும் முன்னெச்சரிக்கையோடு பொதுமக்கள் இருக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து, 144 தடை உத்தரவை பிறப்பித்தோம். ஒவ்வொருவடைய உயிரும் மிக முக்கியம். எல்லாருமே இதில் பங்கு கொள்ள வேண்டும். இது தனிப்பட்ட ஒருவருடைய விஷயம் அல்ல. ஊடகம் மற்றும் பத்திரிகை நண்பர்கள், நான் உட்பட, அமைச்சர் அண்ணன் திரு. ஜெயக்குமார் உட்பட, அனைத்து அதிகாரிகள் உட்பட, பணி செய்கின்ற பணியாளர்கள் உட்பட, ஒட்டுமொத்த மக்களும் இதில் ஒன்று கூடினால் தான் இந்த கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்த முடியும், பரவுவதை தடுக்க முடியும். தனி ஒருவரால் அல்ல. அரசாங்கம் சட்டம் போடலாம். அந்த சட்டத்தை மதித்து மக்கள் நடக்க வேண்டும். நோய் பரவாமல் இருக்க வேண்டும் என்பதற்காக தான் இந்த சட்டத்தையே போட்டு

இருக்கிறோம். இதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். இந்த நோயின் தாக்கத்தை பற்றி தெரியாமலேயே மக்கள் பரவலாக வெளியே சென்று கொண்டு இருக்கிறார்கள். நோய்வாய்பட்டவர்கள் எவ்வளவு துன்பப்படுகிறார்கள் என்பது பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கு நன்றாக தெரியும். வெளிநாட்டில் இருக்கின்ற பலர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையிலே துடிதுடிக்கின்ற காட்சியை எல்லாம் பார்க்கின்றோம். சுமார் 42 ஆயிரம் பேர் இறந்துவிட்டதாக இன்றைக்கு ஊடக செய்தியில் பார்த்தோம். இப்படி நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் இறக்கின்ற இந்த சூழ்நிலையிலே, அரசுக்கு ஒவ்வொரு உயிரும் மிக முக்கியம். அதன் அடிப்படையில் தான் 144 தடை உத்தரவை போட்டு இருக்கின்றோம். மாண்புமிகு பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய திரு. நரேந்திர மோடி அவர்களும், இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களில் இருக்கின்ற பொதுமக்களும் இதை கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கின்றார்கள். தமிழ்நாடு அரசும், மக்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும், அதேபோல, மக்களும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய வேண்டுகோள்.

கேள்வி : பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கணிசமாக ஒரே நாளில் அதிகரித்து இருக்கிறது. ஏப்ரல் 14ஆம் தேதிக்கு பிறகும் ஊரடங்கு உத்தரவு நீட்டிப்பதற்கான சூழல் இருக்கிறதா ?

பதில்: முதலிலே இதற்கான பதிலை சொல்லிவிட்டேன். மத்திய அரசு தான் முடிவு செய்யும்.

கேள்வி : சிறு, குறு விவசாயிகள் தங்களுடைய விளைச்சலை விற்பனை செய்ய முடியவில்லை, நிறைய வீணாகிறது என்ற குற்றச்சாட்டு குறித்து ?

பதில் : விவசாயிகளுக்கு எந்தவித தடையும் இல்லை என்று அறிவிப்பு வெளியிடப்பட்டு விட்டது. அறுவடை செய்யவோ, வேளாண் பணியை மேற்கொள்ளவோ, எவ்வித சிரமமும் இல்லாமல் பணி மேற்கொள்ளலாம் என்று அரசு தெளிவுப்படுத்தி விட்டது. அதேபோல, விவசாயிகள் விளைவித்த பொருட்களை சந்தைக்கு எடுத்து செல்வதற்கும் எந்த தடையும் கிடையாது. அதற்கு அரசு தெளிவான உத்தரவை பிறப்பித்திருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் அனைவருக்கும் பாதிப்பு. இந்தியா மட்டுமல்ல, உலகமே பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. நம் இந்தியா மட்டுமல்ல, தமிழ்நாடு மட்டுமல்ல, உலகையே இந்த நோய் அச்சுறுத்தி கொண்டு இருக்கிறது. இந்த நோயினுடைய தன்மையை கருதி, அந்தந்த நாட்டிற்கு தக்கவாறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தமிழகத்தை பொறுத்தவரைக்கும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை துரிதமாக எடுக்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு ஒருவர் கூட இதனால் பாதிக்கப்படக் கூடாது என்பது தான் அரசினுடைய நோக்கம். அதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பதிவுபெற்ற 12,13,882 கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் 83,500 அமைப்புசாரா ஓட்டுநர்களுக்கும் தலா ரூ.1,000/- வழங்கிட அரசு ஆணை!

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கை நிவாரணமாக, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கும், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற ஓட்டுநர்களுக்கும் தலா ரூபாய் 1,000/– மற்றும் 15 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு, 1 லிட்டர் சமையல் எண்ணெய் வழங்கிடவும், தற்போது தடையுத்தரவு காரணமாக தமிழ்நாட்டில் சிக்கித்தவிக்கும் பிற மாநிலங்களைச் சேர்ந்த கட்டுமான மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களை அடையாளம் கண்டு அவர்களின் குடும்பம் ஒன்றுக்கு 15 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு, 1 லிட்டர் சமையல் எண்ணெய் வழங்கிடவும், சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.03.2020 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அவ்வறிவிப்புகளை தொடர்ந்து பதிவுபெற்ற 12,13,882 கட்டுமானத் தொழிலாளர்களுக்கும், பதிவு பெற்ற 83,500 அமைப்புசாரா ஓட்டுநர்களுக்கும் தலா ரூ.1,000/– வழங்கிட அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்படி தொழிலாளர்களுக்கு ரூ.1,000/– வீதம் வழங்க ஏதுவாக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) அவர்களுக்கு உரிய தொகை மாவட்டந்தோறும் அனுப்பிவைக்கப்பட்டு அத்தொழிலாளர்களின் வங்கி கணக்கில் உடன் பட்டுவாடா செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

தொழிலாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கை நிவாரணம் வழங்குதல் – 02.04.2020

மேலும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள், பிற மாநில கட்டுமானத் தொழிலாளர்கள், வாரியத்தில் பதிவு பெற்ற அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள், உள்ளிட்ட 14,57,000 தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பம் பயன்பெறும் வகையில் ஒவ்வொருவருக்கும் 15 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு, 1 லிட்டர் சமையல் எண்ணெய் அடங்கிய பை வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்படி தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய உணவுப் பொருட்கள் அடங்கிய பை ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிவில் சப்ளைஸ் குடோன்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு வருகிறது.

மேற்படி உணவுப்பொருட்கள் அடங்கிய பை வழங்கப்படும் முறை மற்றும் நாள், இடம், நேரம் ஆகியவை குறித்து அந்தந்த மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின்படி சம்பந்தப்பட்ட மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) மூலம் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிற மாநிலங்களிலிருந்து தமிழகத்தில் தங்கி பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு ரேஷன் கடைகளின் மூலம் பொருட்கள் வழங்குகிறோம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 03.04.2020 அன்று, சென்னை குருநானக் கல்லூரியில் மத்திய அரசு அறிவித்துள்ள ஊரடங்கு உத்தரவால் சொந்த ஊர்களுக்கு செல்ல முடியாத வெளிமாநிலத்தவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாமை பார்வையிட்ட பின்பு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.

பத்திரிகை நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம்.

இன்றைய உலகையே உறைய வைக்கக்கூடிய கொடிய கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி உள்ளது. இந்தியாவிலும், பல்வேறு மாநிலங்களில் இந்த வைரஸ் நோய் பரவியுள்ளது. தமிழகத்திலும் இந்த கொடிய வைரஸ் நோய் பரவுவதன் காரணமாக பலர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இந்தச் சூழ்நிலையில் வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு வந்து பணிபுரிந்து கொண்டிருக்கின்ற தொழிலாளர்களின் நலன் கருதி அம்மாவுடைய அரசு அவர்களுக்குத் தேவையான தங்குமிடம், உணவு, மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்திருக்கின்றது. ஒடிசா, மேற்கு வங்காளம், அசாம், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு வருகை தந்து பணிபுரிந்து கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு தேவையான வசதிகளை எங்களுடைய அரசு செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில், இன்றைய தினம், மூன்று முகாம்களில் தங்க வைக்கப்பட்டு இருக்கின்ற வெளிமாநிலத் தொழிலாளர்களை நாங்கள் சந்தித்து, அவர்களுக்கு அரசு எந்தெந்த வகையில் உதவிகள் செய்கின்றது என்ற விவரங்களை எல்லாம் நேரடியாக நான் கேட்டறிந்தேன். ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களும் நேரிலே வந்திருக்கின்றீர்கள். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வலியுறுத்தியபடி, எந்தெந்த மாநிலத்திலே, வேறு மாநிலங்களிலிருந்து வந்து பணிபுரிகின்றார்களோ, அவர்களுக்கு அந்தந்த மாநில

அரசு அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கினார்கள். அந்த ஆலோசனையை ஏற்று, மாண்புமிகு அம்மாவின் அரசு தமிழகத்தில் வெளிமாநிலங்களில் இருந்து வருகை தந்து பணிபுரிகின்ற அனைத்து தொழிலாளர்களுக்கும் தேவையான தங்கும் வசதி, உணவு மற்றும் மருத்துவ வசதிகளை செய்து கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : மாண்புமிகு பாரதப் பிரதமருடன் காணொலிக் காட்சியில் நீங்கள் என்ன பேசினீர்கள் என்பது தொடர்பாக...

பதில் : மாண்புமிகு பாரதப் பிரதமருடன் பேசியது அனைத்து தொலைகாட்சிகளிலும், பத்திரிகைகளிலும் வந்துள்ளது. நாங்கள் எடுத்து வைத்த கோரிக்கைகளை அவர்கள் பரிசீலிப்பதாக தெரிவித்திருக்கிறார்கள்.

இன்றைக்கு வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு வருகை தந்து தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,18,336. கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரிகின்ற பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் 3,409. உணவுக் கூடங்களில் பணிபுரிந்து வருகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை பிற மாநிலங்களை சேர்ந்தவர்கள் 7,871. விவசாயப் பண்ணைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 4,953. ஆக, பிற மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு வந்து பல்வேறு தொழில் புரிகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,34,569.

அதேபோல, தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்குச் சென்று பணிபுரிந்து வருகின்ற நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 7,198. தமிழகத்தில் இருந்து பிற மாநிலங்களுக்குச் சென்று தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றவர்கள், மேலும் பல்வேறு நிலைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்கள், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று அந்தந்த மாநில முதலமைச்சர்களைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அந்தந்த மாநில முதலமைச்சர்கள் தமிழகத்திலிருந்து சென்று பணிபுரிகின்ற அந்த தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கேள்வி : பொதுப் போக்குவரத்து இல்லாத காரணத்தினால் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்து இருக்கின்றதே, வாகனங்கள் வருவதற்கான அனுமதி குறித்து ?

பதில் : அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு வருவதற்கு எந்த தடையும் இல்லை. இதனை ஊடகம் மற்றும் பத்திரிகைகள் வாயிலாக தெளிவுபடுத்தி இருக்கிறோம். நமக்கு பல்வேறு மளிகைப் பொருட்கள் வேறு மாநிலங்களில் இருந்து வரவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. பல மாநிலங்களில் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து இருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் அத்தியாவசியப் பொருட்களை கொண்டு வருகின்ற வாகனங்கள், அதாவது லாரிகள் அதிகமாக இயக்கப்படுவது இல்லை. அதனால் இந்த நெருக்கடி ஏற்பட்டு இருக்கின்றது. இருந்தாலும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், அத்தியாவசியப் பொருட்களை கொண்டு செல்வதற்கு எந்த மாநிலங்களும் தடை செய்யக்கூடாது என்று அறிவுறுத்தி இருக்கின்றார்கள். அதனடிப்படையிலே, இனி அது சரி செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : ஊரடங்கு அமலில் இருக்கும்போது அத்தியாவசியப் பொருட்களுக்காக மக்கள் அதிகமாக வெளியில் வந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு போதுமான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

பதில் : ஆரம்ப காலத்திலிருந்தே தடை உத்தரவு பிறப்பித்ததற்கு காரணமே ஒருவருக்கு ஒருவர் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான். இது ஒரு கொடிய தொற்றுநோய். இந்தத் தொற்றுநோய் எந்தெந்த நாடுகளில் எவ்வாறு பரவியுள்ளது என்பதை அனைத்து தொலைகாட்சிகளிலும் தினந்தோறும் காண்பித்து கொண்டிருக்கிறீர்கள். மக்களும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இந்த நோயின் வீரியம் புரியாமல், தெரிந்து கொள்ளாமல், சில விளையாட்டுத்தனமாக இரு சக்கர வாகனத்தின் மூலமாகவும், பலர் கார்களின் மூலமாகவும் வெளியில் பொழுதை கழித்து வருகிறார்கள். ஊடகம் மற்றும் பத்திரிகையின் வாயிலாக அரசு கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த நோயின் தாக்கம் எந்தளவிற்கு இருக்கிறது என்பதை மக்கள் உணர வேண்டும். இந்த நோயால் பாதிக்கப்பட்டால் அதை குணப்படுத்துவதற்கு எந்த மருந்தும் கிடையாது என்பதை மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள். இன்றைக்கு உலகெங்கும் பரவி வருகின்ற இந்த வைரஸ் நோய் கட்டுப்படுத்துவதற்கு, பரவாமல் இருப்பதற்கு அரசால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழுஒத்துழைப்பு நல்க வேண்டும். அதைத்தான் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி கேட்டுக் கொண்டு இருக்கின்றோம். ஊடகமும், பத்திகையும் இதை தெளிவாக எடுத்துரைத்து

கொண்டு இருக்கிறீர்கள். ஆனாலும், சிலர் அதை பொருட்படுத்தவில்லை. இன்றைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் 144 தடை உத்தரவை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது. நாங்களும் பொறுமையாக இருந்தோம். அனைவரும் இதைக் கடைப்பிடிக்க வேண்டும். 144 தடை உத்தரவு என்பது மக்களை துன்புறுத்துவதற்காகவோ அல்லது அத்தியாவசிய பணிகளை தடை செய்யும் சட்டமல்ல. அனைவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக போடப்பட்ட சட்டம் தான் 144 தடை உத்தரவு. அதை மனதில் வைத்துக்கொண்டு, தமிழ்நாட்டு மக்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். இன்றைக்கு ஒவ்வொரு குடும்பமும் அரசுக்கு முக்கியம். ஒவ்வொரு உயிரையும் காக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. அதனடிப்படையில் தான், நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். சுகாதாரத் துறையும், காவல் துறையும், வருவாய்த்துறையும், உள்ளாட்சித் துறையும் ஆங்காங்கே ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு இந்த நோயினுடைய தாக்கத்தைப் பற்றி எடுத்துரைத்து கொண்டு இருக்கிறது. ஆகவே, அனைத்து துறைகளுடைய நோக்கம், இந்த நோய் வராமல் தடுக்க வேண்டும். அதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்ற விழிப்புணர்வை தொடர்ந்து ஏற்படுத்தி கொண்டு இருக்கின்றோம். ஆகவே தமிழக மக்கள், அரசு எடுக்கின்ற நடவடிக்கைக்கு இந்த தொற்று நோய் மேலும் பரவாமல் தடுப்பதற்கு அனைவரும் வீட்டிலேயே தங்களை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கேள்வி : பொதுப் போக்குவரத்து இல்லாத காரணத்தினால் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்து இருக்கின்றதே ?

பதில் : நீங்களே சொல்கிறீர்கள் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கவில்லை என்று லாரியை விட வேண்டும் என்று சொல்கிறீர்கள். அந்த லாரியை விட்டால் பொருட்களை இறக்க வேண்டும். அதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டும். ஓட்டுநர்களை அனுமதிக்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு பொதுமக்களை அனுமதிக்க வேண்டும். இப்படி எல்லா தேவைகளையும் மக்களுக்கு செய்து கொடுக்க வேண்டியது அரசினுடைய கடமை. மக்கள் இதை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அத்தியாவசியப் பொருட்கள் வாங்க வேண்டும் என்பதற்காக தினந்தோறும் கடைக்கு செல்லக்கூடாது. காய்கறி மற்றும் மளிகைப் பொருட்களை வாங்க வேண்டும் என்றால், ஒரு வாரத்திற்கு தேவையான காய்கறிகள் மற்றும் மளிகைப் பொருட்களை வாங்கி வீட்டிலே வைத்துக்கொண்டால், தினந்தோறும் வெளியில் வரவேண்டிய அவசியம்

இல்லை. ஆனால், மக்கள் தான் அதை கடைப்பிடிக்க வேண்டும். அரசாங்கத்தை பொறுத்தவரைக்கும், ஊடகத்தின் வாயிலாக, பத்திரிகையின் வாயிலாக தொடர்ந்து வலியுறுத்தி கொண்டு இருக்கின்றோம். நீங்களும் வலியுறுத்தி வருகிறீர்கள். இதை கடைப்பிடிப்பது மக்களின் கடமை. அதுமட்டுமல்ல, எவ்வளவு சொன்னாலும், சிலர் கேட்பது கிடையாது. ஆனால், இனிமேல் சட்டம் தன் கடமையை செய்யும். பொதுமக்களுக்கு எவ்வளவு தூரம் அரசு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமோ, அந்தளவிற்கு அரசு ஒத்துழைப்பு கொடுத்துள்ளது. பொதுமக்கள் அந்த ஒத்துழைப்பை சரியான முறையிலே பயன்படுத்த தவறினால் அரசு 144 தடை உத்தரவை கடுமையாக்குவதை தவிர வேறு வழி கிடையாது என்பதை ஊடகத்தின் வாயிலாக, பத்திரிகை வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு விதம் இருக்கிறது. நம்முடைய மாநிலத்தினுடைய நிலைமை வேறு, மற்ற மாநிலத்தினுடைய நிலைமை வேறு. அந்தந்த மாநிலத்திற்கு தக்கவாறு தான் அந்தந்த முதலமைச்சர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். நம்முடைய மாநிலத்திற்கு தக்கவாறு நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கேள்வி : ரேஷன் கடைகளில் இருக்கக்கூடிய பொருட்களை தொடர்ச்சியாக கொடுத்து கொண்டு இருக்கிறோம். நம்முடைய மாநிலத்தில் இருப்பவர்கள் அண்டை மாநிலத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ரேஷன் பொருட்கள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

பதில் : நாங்கள் ஏற்கெனவே, தமிழகத்திலிருந்து வேறு மாநிலத்திற்கு சென்று பணிபுரிந்து வருகின்ற தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும் என்று அந்தந்த மாநில முதலமைச்சர்களோடு, அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு நம்முடைய அதிகாரிகள் பேசி வருகிறார்கள். இதற்கென்று தனி குழு அமைக்கப்பட்டுள்ளது. துறை செய லாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அவர் தொடர்ந்து பேசி வருகிறார். நம்முடைய தொழிலாளர்கள் பிற மாநிலத்தில் பாதிக்கப்பட்டால் உடனடியாக அந்த மாநில அரசுடன் பேசி அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கிக் கொண்டுஇருக்கின்றோம். அதுமட்டுமல்ல, பிறமாநிலத்தில் பணிபுரிகின்ற நம்முடைய தொழிலாளர்களுக்கு அவர்கள் உதவி செய்கின்ற தொகையும் நாங்கள் வழங்குவோம் என்று அறிவித்திருக்கின்றோம்.

அதேபோல, பிற மாநிலத்தில் இருந்து தமிழகத்தில் தங்கி தொழிற்சாலகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு 15 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு, 1 கிலோ சமையல் எண்ணெய்யும் கொடுத்து கொண்டு இருக்கின்றோம்.

கேள்வி : தமிழகம் கொரோனாவில் 2ஆம் கட்ட நிலையில் இருக்கிறதா ? தற்போது வரை 309 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது சமூகத் தொற்றாக ஆகிவிட்டதா ? பீனிக்ஸ் மாலில் பணிபுரிந்த 3 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு யார் மூலமாக தொற்று வந்தது என்பதை முழுமையாக அறியாமல் உள்ளது.

பதில் : அரசு கண்டுபிடித்து கொண்டுதான் இருக்கிறது. இதை பரவாமல் தடுப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் அரசு செய்து கொண்டு இருக்கிறது.

கேள்வி : அண்டை மாநிலங்களான தெலுங்கானா, மஹாராஷ்டிராவில் அரசு ஊழியர்களின் சம்பளத்தில் விகிதாச்சார அடிப்படையில் பிடித்தம் செய்துள்ளது. தமிழக அரசின் அம்மாதிரி ஏதாவது திட்டம் இருக்கின்றதா ?

பதில் : இன்றைக்கு தமிழகத்தை பொறுத்தவரைக்கும் தொழிற்சாலைகள் பெரும்பாலும் இயங்கவில்லை. ஒரு சில தொழிற்சாலைகள் தான் இயங்கி வருகின்றன. பெரும்பாலான பெரிய நிறுவனங்களும் இயங்கவில்லை. ஏற்கெனவே 144 தடை உத்தரவு போடப்பட்டு மூடப்பட்டு இருக்கின்றன. திரையரங்குகளும் மூடப்பட்டு இருக்கின்றன. ஆகவே, அரசிற்கு வருகின்ற வருவாய் ஜி.எஸ்.டி கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் தமிழகத்தை பொறுத்தவரைக்கும் அரசு ஊழியர்கள் பெறுகின்ற சம்பளம் தற்போது பிடித்தம் செய்யப்பட மாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : மளிகைப் பொருட்கள் பதுக்கல் செய்யப்பட்டு கூடுதல் விலைக்கு நிறைய இடங்களில் விற்கப்படுகின்றன. அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

பதில் : ஏற்கெனவே நம்முடைய உயர் அதிகாரிகள், வியாபாரிகள் சங்கத் தலைவர்களோடு தொடர்பு கொண்டு இதுகுறித்து பேசி, யாராவது அதிக விலைக்கு விற்பனை செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கின்றோம். அந்த வியாபாரச் சங்கத் தலைவரும் பத்திரிகை வாயிலாக இதுகுறித்து செய்து வெளியிட்டிருந்தார். தவறு செய்கின்ற வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பை தந்திருக்கிறார். பொறுத்திருந்து பார்ப்போம்.

கேள்வி : மத்திய அரசிடம் நிதி கோரினீர்களே, அது ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

பதில் : நேற்று தான் நிதி கேட்டோம். இனிமேல் தான் மத்திய அரசு பரிசீலித்து அதற்குண்டான நடவடிக்கையை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

கேள்வி : சாலையோரத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள், மனவளர்ச்சி குன்றியவர்கள், வீடில்லாமல் இருப்பவர்களுக்கு உரிய உதவிகள் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா ?

பதில் : சாலையோரத்தில் மாற்றுத்திறனாளிகள் யாரும் இல்லை. ஏற்கெனவே நம்முடைய காவல்துறை அதிகாரிகள், உள்ளாட்சித்துறை அதிகாரிகள் ஆங்காங்கே சாலையோரம் வசிக்கின்றவர்களை அழைத்து வந்து, தங்கவைத்து அவர்களுக்கான உதவிகளை செய்து கொடுத்து கொண்டு இருக்கின்றோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாநிலம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. 144 தடை உத்தரவை மீறி வெளியில் வந்தவர்கள் மீது 45,046 வழக்குகள் பதியப்பட்டு இருக்கின்றன. 50,593 நபர்கள் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடப்பட்டு இருக்கின்றனர். 37,760 வாகனங்கள் உத்தரவை மீறியதற்காக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதேபோல, கொரோனா வைரஸ் தொற்று நோய் பற்றி வதந்திகளை பரப்புவோர் மீது 92 வழக்குகள் பதியப்பட்டு, 95 நபர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு தள்ளி வைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா ?

பதில் : ஏற்கெனவே மத்திய அரசு ஏப்ரல் 14ஆம் தேதி வரை ஊரடங்கு உத்தரவை பிறப்பித்திருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

கேள்வி : அம்மா உணவக பணியாளர்களுக்கு சிறப்பு ஊதியம் கொடுக்கப்படுமா ?

பதில் : அவர்கள் ஏற்கெனவே பணிபுரியும் தொழிலை தான் செய்து கொண்டு இருக்கிறார்கள். அம்மா உணவகத்தில் பணிபுரிகின்ற பணியாளர்கள், உணவு தயாரித்து வருகின்றவர்களுக்கு உணவு வழங்குவதுதான் அவர்களது பணி. அந்தப் பணியை இப்போது மேற்கொண்டு வருகிறார்கள். தினந்தோறும் சமைத்து ஏழைகளுக்கு மலிவு விலையிலே உணவு வழங்க வேண்டும். அந்த உத்தரவை பின்பற்றி செயல்பட்டு கொண்டு இருக்கிறார்கள்.

கேள்வி : ரேஷன் கடையின் மூலம் வழங்கப்படும் 1,000 ரூபாய் எல்லோருக்கும் கிடைக்க வழிவகை செய்யப்படுமா ? சிலர் வெளி மாநிலத்தில், வெளி மாவட்டங்களில் இருக்கிறார்கள், அவர்களுக்கும் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

பதில் : ரேஷன் கடைகளில் வழங்கப்படுகின்ற உணவுப் பொருட்கள் அனைத்தும் விலையில்லாமல் வழங்கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்தேன். அதன்படி நேற்றைய தினத்திலிருந்து விலையில்லாமல் அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் ஆகிய உணவுப் பொருட்களை வழங்கி கொண்டு இருக்கிறோம். யாராவது, வெளியூர் சென்று இருந்தாலோ, வாங்காமல் இருந்தாலோ, இந்த மாத இறுதிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

அதுமட்டுமல்லாமல், இனிமேல் டோக்கன் வழங்குகின்ற போதே, 1,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கின்றோம். ஏன் என்றால், கூட்டம் ஆங்காங்கே கூடுகிறது என்று பத்திரிகையிலும், ஊடகங்களிலும் வந்த செய்தியின் அடிப்படையில், எல்லா வீடுகளுக்குமே டோக்கன் கொடுக்கப் போகிறார்கள். அந்த டோக்கன் கொடுக்கும்போதே அவர்களுக்கு அரசு அறிவித்த 1,000 ரூபாய் தொகை வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, பத்திரிகை நண்பர்களும், ஊடக நண்பர்களும் இன்றைக்கு கொரோனா வைரஸ் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, அது எவ்வாறு பரவுகின்றது, எவ்வாறு அதை தடுக்க வேண்டும், அரசு எடுக்கின்ற நடவடிக்கை என்ன, மக்கள் அதை எப்படி பின்பற்ற வேண்டும் என்ற செய்தியை எல்லாம் அன்றாடம் தொலைக்காட்சி வாயிலாக, பத்திரிகை வாயிலாக தெரிவித்துக் கொண்டு இருக்கிறீர்கள். உங்களுக்கும் சிறப்பாக இந்த அரசு 3,000 ரூபாய் வழங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்கின்றேன். ஏன் என்றால், ஆங்காங்கே வாகனத்தில் போய் கொண்டு இருக்கிறீர்கள், அதற்கு வாகனச் செலவு ஆகும், உணவு செலவு ஆகும். மிக முக்கியமான காலக்கட்டம், இந்த காலக்கட்டத்தில், அரசு உங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக பதிவு செய்யப்பட்ட அரசு அங்கீகரிக்கப்பட்ட நம்முடைய பத்திரிகையாளர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் 3,000 ரூபாய் வழங்கப்படும் என்ற செய்தியை சொல்லி விடைபெறுகின்றேன்.

கொரோனா நோய் பரவுவதைத் தடுக்க அரசு எடுத்துவரும் தடுப்பு நடவடிக்கைகள் மட்டும் போதாது, மனித சமுதாயமே தங்கள் வேறுபாடுகளை புறந்தள்ளி ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – **04.04.2020**

கொரோனா பெருந்தொற்றினால் நாடு முழுவதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாட்டில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த தொற்றுநோய் சமூகப் பரவலாக மாறுவதை தடுக்கும் பொருட்டு, சமூக விலகல் கடைபிடிக்கப்படுகிறது. இத்தருணத்தில் பெருந்தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க அரசின் முயற்சிகளோடு அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. எனவே, பல்வேறு சமய தலைவர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த இயக்கங்களின் ஒருமித்த ஆதரவினைக் கோர முடிவு செய்யப்பட்டு, எனது உத்தரவின்பேரில் பல்வேறு மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில், சமய தலைவர்களுடனான கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மாநில அளவிலும் அரசு சார்பில் தலைமைச் செயலாளர் தலைமையில் 03.04.2020 அன்று கிறிஸ்த்துவ, இஸ்லாமிய, இந்து, ஜெயின் மற்றும் சீக்கிய மதத் தலைவர்களுடன் தனித்தனியே கூட்டம் நடத்தப்பட்டது.

மக்களிடையே கொரோனா தொற்று நோயின் தீவிர பரவல் தன்மையையும், அதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறிப்பாக, பெரியோர்கள், நோயுற்றவர்கள், குழந்தைகள் போன்றவர்களிடையே ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்கவும் அரசு எடுத்துவரும் முயற்சிகளான, தனி மனித சுகாதாரம், தனிமை படுத்துதல், சமூக விலகல் போன்றவற்றை கடுமையாக கடைபிடிக்க அரசோடு பல்வேறு சமுதாய தலைவர்களும், அவர்கள் சார்ந்த தன்னார்வலர்களும் இணைந்து விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ள உரிய ஒத்துழைப்பு வழங்க இக்கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், கொரோனா பெரும் தொற்று நோயினால் மனித சமுதாயத்திற்கு ஏற்படவுள்ள ஆபத்து பற்றியும் எடுத்துரைத்து இந்நோய் பரவுதை தடுக்க அரசு எடுத்துவரும் தடுப்பு நடவடிக்கைகள் மட்டும் போதாது என்றும், மனித சமுதாயமே தங்கள் வேறுபாடுகளை புறந்தள்ளி ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என்றும், சமூக விலகல், தனிமைப்படுத்துதல் போன்ற முயற்சிகளுக்கு அந்தந்த சமுதாய தலைவர்கள் சமூக ஆர்வலர்களை திரட்டி அரசோடு ஒன்றிணைந்து நோய்பட்டவர்கள், அவர்தம் குடும்பங்கள் மற்றும் நோயுற்றவரோடு தொடர்பு ஏற்பட்டவர்களை தனிமைப்படுத்த உதவினால் தான் இந்த நோயிலிருந்து அவர்களை மீட்டெடுக்கவும், இந்த நோய் சமூக பரவலாக மாறி மக்களிடையே பேரிழப்பை ஏற்படுத்துவதை தடுக்கவும் இயலும் என்றும் இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்ற எனது கோரிக்கை கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பல்வேறு மதத் தலைவர்களும் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை பாராட்டி, கொரோனா தொற்றுநோய் தடுக்க எடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்குவதாக தெரிவித்தார்கள். அவர்கள் எடுத்துரைத்த கருத்துக்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகளை அரசு எடுத்துள்ளது.

❖ நோய் தொற்று பொது மக்களுக்கு பரவுவதை தவிர்க்க, பொது மக்கள் எதிர்நோக்கும் பண்டிகைகள் காலத்தில், அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, மதம் சார்ந்த கூட்டங்களை தவிர்த்து சமூக விலகலை கடைபிடிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

❖ கொரோனா தொற்று நோய் ஜாதி, மத பேதமின்றி அனைவரையும் தாக்ககூடியதென்றும், இதற்கு மதச்சாயம் பூசுவதை அனைவரும் தவிர்க்க வேண்டும் என்றும், நோய் தொற்றால் பாதிக்கப்படுபவர்களையும், அவர்களுடைய குடும்பங்களையும் மக்கள் வெறுப்புணர்வுடன் பார்ப்பதை

தவிர்த்து, இதுபோன்ற தொற்று நோய் அனைவருக்கும் ஏற்படும் என்பதை உணர்ந்து அத்தகையவர்களை அனைவரும் அன்போடும், பரிவோடும் நடத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

❖ பல்வேறு மாவட்டங்களில் தனியார் மருத்துவமனைகள் திறக்கப்படுவதில்லை என்று தெரிய வருவதால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைத்து மருத்துவமனைகளையும் அழைத்து பேசி, அவை திறப்பதற்கும் செயல்படுவதற்கும் தேவையான பணியாளர்களை அனுமதிக்க, உரிய வாகன வசதிகளை ஏற்பாடு செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

❖ தனியார் மருத்துவமனைகள், நோய்தொற்று உள்ளவர்களை பாரபட்சமின்றி, பரிவோடும் அன்போடும் நடத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

❖ கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனினும், சில நோய் தொற்று உள்ளவர்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற விரும்பினால், இதற்காக அனுமதிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் (Notified hospital for COVID-19 treatment) சிகிச்சை பெற அனுமதிக்கப்படுகிறது.

❖ தொற்று நோய் உள்ளதா என கண்டறிந்து, சோதனைக்குப் பின்பு தொற்று நோய் அல்லாதவர்களை உடனுக்குடன் அவர்களது வீட்டுக்கோ அல்லது தனிமை படுத்தப்படும் மையங்களுக்கோ அனுப்பவேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

❖ இத்தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களையும், இத்தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நபரோடு தொடர்பிலிருந்த நபர்களையும் தனிமைப்படுத்தும்போது, சமய தலைவர்கள் உதவியோடு அவர்களின் வீடுகளிலோ அல்லது இதற்கான தெரிவு செய்யப்பட்ட இடங்களிலோ அரசின் கண்காணிப்பில் தனிமைப்படுத்திக்கொள்ள, உரிய வசதிகளை செய்து கொள்ளலாம் என்றும், அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதற்கென அந்தந்த பகுதியில் தனிமைப்படுத்தும் தன்னார்வல குழுக்கள் அரசுடன் இணைந்து பணி செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

❖ தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு மன அழுத்தத்தினால் ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்க சமுதாய தலைவர்கள் முன்நின்று ஒத்துழைக்கவேண்டுமென்றும், இதற்காக மாவட்டம் தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அமைத்துள்ள மன நல மருத்துவர்கள் அடங்கிய குழுக்கள் மூலம் skype போன்ற செயலிகளை பயன்படுத்தி தனிமையில் உள்ளவர்களை தொடர்பு கொண்டு ஆலோசனைகளை வழங்க அரசோடு இணைந்து செயல்படலாம் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

❖ தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் போன்றவற்றை வீடுகளுக்கே சென்று வழங்க அரசு தரப்போடு இணைந்து சமூக ஆர்வலர்கள் செயல்படலாம் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

❖ அரசு தயாரித்துள்ள பல்வேறு பிரச்சார பிரதிகள் மற்றும் கையேடுகளை சமய அமைப்புகளுக்கு வழங்கவும் அதை அவர்கள் பயன்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ அனைத்து மத தலைவர்களும் கோரியபடி, அவர்களின் ஆளுகையில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பிற கட்டிடங்களை தனிமை படுத்தப்பட்டவர்களுக்காக உரிய வசதிகளை அமைத்து பயன்படுத்திக்கொள்ள உதவும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது குறித்த தகவலை சென்னையில் மாநகராட்சி ஆணையரிடமும், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ பல்வேறு மத தலைவர்கள் கேட்டுக்கொண்டபடி, வயதானவர்கள், சர்க்கரை நோய், ரத்த கொதிப்பு நோய் உள்ளவர்களின் விவரங்கள் அறிந்து அவர்களுக்கு தேவைப்படும் உதவிகளை வழங்குவதற்கு அரசுடன் சேர்ந்து தன்னார்வல தொண்டர்கள் இப்பணியில் ஈடுபட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

❖ காலை நேரங்களில் சந்தை பகுதிகளில் கூடுதல் கூட்டத்தை தவிர்க்கவும், கூடுதல் சமூக விலகலை கடைபிடிப்பதை உறுதி செய்யவும், தன் ஆர்வலர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கி பயன்படுத்திக்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

அனைத்து மதத் தலைவர்களும், சமூக தொண்டர்களும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களுடனும், சென்னையில் மாநகராட்சி ஆணையருடனும் ஒருங்கிணைந்து செயல்பட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இது தவிர, மக்கள் நடமாட்டத்தை மேலும் கட்டுப்படுத்த, அத்தியாவசியப் பொருட்களை வாங்க காலை 6.00 மணி முதல் 2.30 மணி வரை அனுமதிக்கப்பட்டிருந்த கால அளவை நாளை ஞாயிற்றுக்கிழமை (05.04.2020) முதல் குறைத்து, காலை 6.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை மட்டுமே அத்தியாவசியப் பொருட்களை வாங்க அனுமதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதை அனைத்து பொதுமக்களும் கடைபிடிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விதிமுறைகளை மீறுபவர்கள் மீது சட்ட ரீதியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வருகிறது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 06.04.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.

இன்றைய தினம் உலகையே உலுக்கிக் கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவி வருகிறது. இந்தியாவிலேயும் இந்த நோயினுடைய வீரியம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. அந்த வகையில், தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் வைரஸ் நோயை தடுப்பதற்குண்டான பணிகளில் முழு மூச்சுடன் அரசு ஈடுபட்டிருக்கின்றது. இன்றைய தினம் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடைபெற்றது. ஏற்கனவே, ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று அரசின் சார்பாக கொரோனா வைரஸ் தொற்று நோயை கட்டுப்படுத்துவதற்கு, மேலும் பரவாமல் இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்ற ஆலோசனை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. அதன்படி, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளில் ஈடுபட்டு நோய் பரவாமல் இருப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் விமான நிலையங்களில் பரிசோதனை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,10,538. மேற்கண்ட பயணிகளில் வீட்டு கண்காணிப்பில் இருந்து வரும் பயணிகளின் எண்ணிக்கை 90,541.அதில் 28 நாட்கள் கண்காணிப்பு நிறைவு பெற்ற பயணிகளின் எண்ணிக்கை 10,814. தமிழ்நாட்டில் கொரோனா பரிசோதனை ஆய்வகங்களின் எண்ணிக்கை அரசு சார்பில் 11ம், தனியாரில் ஆய்வகங்கள் 6ம் இருக்கிறது. மேலும் 21 இடங்களில் இந்த ஆய்வகங்கள் அமைக்க அனுமதி வேண்டுமென்று மத்திய அரசிடம் வலியுறுத்தியிருக்கிறோம். அந்த 21 ஆய்வகங்களும் அனுமதி கிடைக்கும் என்று நம்புகிறோம். அதற்குத் தேவையான மருத்துவ கருவிகள் எல்லாம் வந்துவிட்டது.

மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டவுடன், அந்த 21ம் சேர்த்து சுமார் 38 ஆய்வகங்கள் செயல்படக்கூடிய சூழ்நிலை வருகின்றபொழுது, வேகமாக, துரிதமாக பரிசோதனைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை, ஆய்வகப் பரிசோதனைக் உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 4,612. இதில் இன்றுவரை கோரோனா வைரஸ் தொற்றுநோய் கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை 571. கோரோனா வைரஸ் நோய் என சந்தேகப்பட்டு, உள்நோயாளியாக தனிப் பிரிவில் உள்ளவர்களின் எண்ணிக்கை 1,848. இன்றைக்கு மருத்துவமனையை பொறுத்தவரை, நமக்குத் தேவையான அளவிற்கு, நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய அளவிற்கு 22,049 படுக்கைகள் தயார் நிலையில் இருக்கின்றன. 3,371 வென்டிலேட்டர்கள் அரசு மற்றும் தனியார் வசம் இருக்கின்றது. தேவையான முகக் கவசங்கள், உடல் பாதுகாப்பு உடைகள், N–95 கவசங்கள் ஆகியவை போதிய அளவு கையிருப்பில் உள்ளன. நாள்தோறும் 2 இலட்சம் முகக் கவசங்களும், 20,000 உடல் பாதுகாப்பு உடைகளும் கூடுதலாக பெறப்பட்டு வருகின்றன. மேற்கொண்டு வென்டிலேட்டர்கள் தேவைப்படுகின்ற காரணத்தினால் 2,500 வென்டிலேட்டர்கள் வாங்க கொள்முதல் ஆணை இன்றைக்கு வழங்கப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் நோய் சிகிச்சைக்கான மருந்துகளான காய்ச்சல் மருந்துகள், Antibiotic மருந்துகள் மற்றும் I.V திரவங்கள் தேவையான அளவிற்கு முழுமையாக கையிருப்பில் உள்ளன. 1 இலட்சம் துரித ஆய்வு உபகரணங்கள்(Rapid Test Kits) கொள்முதல் செய்வதற்கு இன்றைக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளதுஎன்பதைஇந்தநேரத்தில்தெரிவித்துக் கொள்கிறேன். இந்த Rapid Test Kit கிடைத்தவுடன் விரைவாக, வேகமாக 1 இலட்சம் பேருக்கு பரிசோதனை செய்ய முடியும், அந்த பரிசோதனையின் நேரமே 30 நிமிடம் தான். எனவே, பரிசோதனையை வேகமாக செய்வதற்காக வருகிற 9ஆம் தேதி நமக்கு அந்த Rapid Test Kits கிடைக்கும். இதனை சீனாவிலிருந்து நாம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 9ஆம் தேதி கிடைத்தவுடன் 10ஆம் தேதி எங்கெங்கெல்லாம் பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமோ எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதனை விரைவாக செய்வதற்கு உதவும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தியாவசியப் பொருட்களைப் பொறுத்தவரை, தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கு அரசால் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. வெளி

மாநிலத் தொழிலாளர்களை பொறுத்தவரையில், எங்களுக்கு கிடைக்கப்பட்ட தகவலின் அடிப்படையிலே, எல்லா மாவட்டங்களிலுமே அவர்களை தங்க வைத்து, அவர்களுக்குத் தேவையான தங்கும் வசதி, உணவு, மருத்துவ வசதி எல்லாம் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நானும் சென்னையில் இருக்கின்ற ஒடிசா, பீகார், உத்திரப் பிரதேசம், ஜார்க்கண்ட் போன்ற பல்வேறு மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வந்து பணிபுரிந்து வரும் தொழிலாளர்களை நேரடியாக சந்தித்து, அவர்களுக்குத் தேவையான உதவிகள் எல்லாம் எவ்வாறு செய்யப்பட்டிருக்கின்றன என்று நானே நேரடியாகச் சென்று பார்வையிட்டு, அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்து வருகிறோம். அதேபோல தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குச் சென்று பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டுமென்று பல்வேறு மாநில முதலமைச்சர்களை தொடர்பு கொண்டு, அவர்களுக்கு தேவையான உதவிகளை அந்தந்த மாநில அரசுகள் செய்து கொடுத்திருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பிற மாநில முகாம்களில் உள்ள தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை 7,326 அவர்களுக்கு தேவையான வசதிகள் நம் அரசால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல், தமிழ்நாட்டில் வெளி மாநில தொழிலாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களின் எண்ணிக்கை 268. அந்த முகாமில் தங்கியிருக்கும் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 11,530. பிற மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு 15 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு, 1 கிலோ சமையல் எண்ணெய் விலையில்லாமல் நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அமைப்புசாரா தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 83,500. 05.04.2020 வரை ரொக்கம் நிவாரணமாக 13,037 பேர்களுக்கு கொடுத்திருக்கிறோம். மீதம் ரொக்க நிவாரணமாக 70,430 பேர்களுக்கு கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். எல்லாம் வங்கிக் கணக்கு மூலமாக செலுத்தப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்கள் அனைவருக்குமே விரைவில் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

காவல் துறையைப் பொறுத்தவரைக்கும், இன்றைக்கு 144 தடை உத்தரவை மீறியவர்கள் மீது 94,873 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 94,158 பேர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதில் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 72,242. இந்த 144 தடை உத்தரவை மீறிய காரணத்தினால், அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை 25 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய்.

கேள்வி : நீங்கள் ஏற்கெனவே மத்திய அரசிடம் முதல் நாள் 3,000 கோடி ரூபாய் கேட்டிருந்தீர்கள், அப்புறம் 9,000 கோடி ரூபாய் கேட்டிருந்தீர்கள். கடைசியாக பாரதப் பிரதமருடன் வீடியோ கான்பரன்ஸ் மூலம் இந்த PPE, Medical Equipments எல்லாம் வாங்குவதற்கு 3,000 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறீர்கள், மத்திய அரசு Fund ஏதும் Release செய்வதாக உறுதி கொடுத்திருக்கிறார்களா ?

பதில் : முதல்கட்டமாக 500 கோடி ரூபாய் SDRF-க்கு கொடுத்திருக்கிறார்கள். படிப்படியாக கொடுப்பதாக சொல்லியிருக்கிறார்கள்.

கேள்வி : சீனாவிலிருந்து PPE போன்ற பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு அரசிடம் போதுமான நிதி இருக்கிறதா ?

பதில் : அதற்கெல்லாம் போதுமான நிதி இருக்கிறது. ஏற்கெனவே SDRF-க்கு கொடுத்ததை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், பொதுமக்களுடைய நன்மையைக் கருதி முன்னுரிமை கொடுத்து, அரசாங்கம் தேவையான நிதியை திரட்டி இந்த வைரஸ் நோய் முழுவதையும் தடுக்க

வேண்டும் என்பதற்காக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது, போதுமான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கேள்வி : இன்றைக்கு ஊரடங்கின் 13வது நாள், நோய் தொற்றின் தாக்கம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே, இந்த ஊரடங்கை நீட்டிப்பதற்கு தமிழக அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ?

பதில் : இந்த நோயினுடைய தாக்கம் நீங்கள் சொன்னதுபோல, அதிகரித்துக் கொண்டிருப்பதை நாம் பார்த்து கொண்டுதான் இருக்கிறோம். நாம் தனிமைப்படுத்திக் கொண்டால் இந்த நோய் பரவாது. நாம் தனிமைப்படுத்திக் கொள்ளாவிட்டால், நிச்சயமாக இந்த நோய் இன்னும் கூடுதலாக பரவிக் கொண்டுதான் இருக்கும். இதை தடுப்பதற்கு ஒரே வழி நம்மை நாம் தனிமைப்படுத்திக் கொள்வது தான். இந்த நோய் பரவாமல் தடுக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அந்த ஒத்துழைப்பின் மூலமாகத் தான் இந்த நோய் பரவாமல் தடுக்க முடியும். இது ஒரு தொற்று நோய் என்று ஊடகம் மற்றும் பத்திரிகைகளின் வாயிலாக நான் கூறியிருக்கிறேன். இந்தத் தொற்று நோய் எளிதாக பரவக்கூடியது, இந்த நோய் எவ்வாறு பரவுகிறது என்பதை ஊடகம் மற்றும் பத்திரிகை நண்பர்கள், தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள் வாயிலாக மக்களுக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றீர்கள். அதற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும், மக்கள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். இந்த நோயினுடைய அறிகுறி தெரிந்தவுடனேயே மருத்துவமனையில் சேர்ந்து, உரிய சிகிச்சையை எடுத்துக் கொண்டால் நலம் பெறலாம். தமிழகத்தில் 7 பேர் குணமாகி வீட்டிற்கு சென்றிருக்கிறார்கள். ஆனால், இன்றைய தினம் இந்த நோய் அறிகுறி தென்படாமலேயே அவர்கள் உடலில், இந்த நோய் ஏற்பட்டு விடுகிறது. சமீபத்தில் பரிசோதனை செய்ததிலிருந்து கண்டுபிடிக் கப்பட்டவை இவை. எந்த அறிகுறியும் இல்லாமலேயே positive வந்து விடுகிறது. அப்படியென்றால், எவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். அரசு என்னென்ன நடவடிக்கை எடுக்கின்றதோ அதற்கெல்லாம் ஒத்துழைப்பு நல்க வேண்டும். சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என்று சொன்னோம், பெரும்பாலானோர் கடைபிடிப்பது கிடையாது. ஆகவே, இந்த தொற்று நோய் என்னென்ன

காரணத்தினால் வருகின்றது என்பதை ஊடகம் மற்றும் பத்திரிகை மூலமாக தெளிவுபடுத்தியிருக்கிறோம். அதையும் அவர்கள் கடைப்பிடிப்பதில்லை. இதையெல்லாம் கடைபிடித்தால் நிச்சயம் இந்த நோய் பரவுவதை தடுக்கலாம்.

கேள்வி : தடை உத்தரவை கடைப்பிடிப்பதில்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள், அதை கடுமையாக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

பதில் : எப்படி செய்யலாம் என்று ஒரு வழிமுறையை நீங்களே சொல்லுங்கள். நாங்கள் செய்தால் இது சரியில்லை, அது சரியில்லை என்று சொல்கிறீர்கள். அரசாங்கம், மக்களையும் கஷ்டப்படுத்தக் கூடாது, அவர்களுக்கு எந்த தொந்தரவும் கொடுக்கக்கூடாது, அதே நேரத்தில், இந்த நோய் பரவாமல் தடுக்கப்பட வேண்டும். அரசாங்கம் ஒரு உத்தரவை போடுகிறதென்றால், மக்களுடைய நலன் கருதித்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. அதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களை கஷ்டப்படுத்தி, துன்புறுத்தி இந்தச் சட்டத்தை அமல்படுத்துவது என்பது இயலாத காரியம். ஒவ்வொருவரும் தன்னுடைய கடமையை உணர்ந்து, நோயினுடைய தன்மையை உணர்ந்து, நோயினுடைய வீரியத்தை உணர்ந்து, நோயினுடைய தாக்கத்தை உணர்ந்து, கடைபிடித்தால் நிச்சயம் தடுக்க முடியும். சட்டத்தை நாம் போடலாம், ஆனால் அதை நடைமுறைப்படுத்த மக்கள் ஒத்துழைப்பு வேண்டும்.

கேள்வி : பொருட்களை வீடுகளுக்கு கொடுக்கும் சூழ்நிலையை உருவாக்கினால், மக்கள் வெளியில் வருவதை தடுக்கலாமே ?

பதில் : இது திடீரென்று வந்துவிட்டது. அந்த அளவிற்கு ஆட்கள் தேவை. Prepared ஆக இருந்திருந்தால் நாம் உடனடியாக எல்லோருக்கும் கொடுத்து விடலாம். எது சாத்தியமோ அதைத்தான் செய்கிறோம். இன்றைக்கு பார்த்தீர்களென்றால், 90,541 பேர் வீட்டுக் கண்காணிப்பில் இருக்கிறார்கள், அவர்களுக்கும் காய்கறி, பால், மளிகைப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை Door delivery செய்ய சொல்லியிருக்கின்றோம். அனைவருக்கும் கொடுப்பது என்பது மிகவும் கடினமானது. இருந்தாலும் அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நல்ல ஆலோசனையை வழங்கியிருக்கிறது. உங்களால் முடிந்த அளவிற்கு, பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை அவர்களின் வீட்டிலேயே வழங்குங்கள், காய்கறிகளை வழங்குங்கள். அதுமட்டுமல்ல, அரசின் சார்பாகவே காய்கறிகளை நடமாடும் காய்கறி கடைகள் மூலம் விற்பனை செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. பல இடங்களில் நடமாடும் காய்கறி கடைகள் இன்றைக்கு விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சென்னையிலும் இந்த நடமாடும் காய்கறி கடைகள் மூலம் விற்பனை செய்ய வேண்டுமென்று ஆணையாளரிடத்தில் தெரிவித்திருக்கின்றோம். அவர்களும், அதற்கு ஏற்பாடு செய்வதாக தெரிவித்திருக்கின்றார். படிப்படியாக மக்களுடைய நடமாட்டத்தை குறைக்க வேண்டும், அதற்காக அரசால் படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : 1,246 பேர் டெல்லி மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்கள், அதில் 522 பேருக்கு positive ஆகியது, மீதி 750 பேருக்கு சோதனை செய்யப்பட்டு விட்டதா ? அவர்களுடைய நிலை என்ன ?

பதில் : நீங்கள் சரியான எண்ணிக்கை சொல்லவில்லை, tentative ஆகத்தான் சொல்கிறீர்கள். இந்த புள்ளி விவரத்தை யார் கொடுப்பது ? எப்படி கண்டுபிடிக்க முடியும் ? மக்கள் கொடுக்கின்ற புள்ளிவிவரத்தை வைத்துத்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் அதைத்தான் சொல்கிறோம், துறையும் அதைத்தான் சொல்கிறது. ஆகவே, அந்த மாநாட்டிற்குச் யார் யாரெல்லாம் சென்றார்கள் என்று எங்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், அவர்களெல்லாம் பரிசோதனை செய்யப்பட்டு, யார் யாருக்கு positive இருக்கிறதோ, அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, உரிய சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் யாராவது விடுபட்டிருந்தால், ஏற்கெனவே ஊடகத்தின் வாயிலாக நானும் தெரிவித்தேன், சுகாதாரத் துறையின் செயலாளரும் தெரிவித்திருக்கின்றார், தலைமைச் செயலாளரும் தெரிவித்திருக்கிறார்கள். யாராவது

மாநாட்டிற்குச் சென்று, இன்னும் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளாமல் இருந்தால் தாங்களாக முன்வந்து நீங்கள் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுங்கள் என்று நாங்கள் ஏற்கனவே அழைப்பு விடுத்திருக்கிறோம்.

நிறைய பேர் தாங்களாகவே முன்வந்து பரிசோதனை செய்து கொண்டுள்ளார்கள். நிறைய பேருக்கு நெகடிவ் ஆகி இருக்கிறது, சில பேருக்கு பாசிட்டிவ் ஆகி இருக்கிறது. நோய் என்பது இயற்கையாக வருவது. யாரிடமும் சொல்லிவிட்டு நோய் வருவதில்லை. யாரும் நோயை வரவழைப்பதும் கிடையாது. ஆனால் நோய் வந்துவிட்டால் குணப்படுத்துவது அரசின் கடமை. ஏனென்றால், ஒவ்வொருவருடைய உயிரும் மிக முக்கியம். அதேபோல, அவர் நன்றாக இருந்தால்தான், அவர் குடும்பத்தை காப்பாற்ற முடியும். அவர் இந்த நோயை மறைத்தால், அந்த குடும்பத்தை சார்ந்தவர்களுடன் பழகுகின்ற போது, அவர்களுக்கும் இந்த தொற்று ஏற்பட்டுவிடும். அதுமட்டுமல்ல, அவர் எங்கெங்கு போனாரோ, அங்கெல்லாம் அந்த தொற்று பரவிவிடும். ஆகவே, இதை கட்டுப்படுத்தவே முடியாது. நோய் அறிகுறி இருக்கின்றவர்களும், இதேபோல் வெளியில் சென்று வந்தவர்களும், வெளிநாட்டிற்கு சென்று வந்தாலும் சரி, அல்லது வேறு மாநாட்டிற்கு சென்று வந்தாலும் சரி, அவர்கள் தாங்களாக முன்வந்து பரிசோதனை செய்து கொண்டு, தன் உடலில் ஏதாவது நோய் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொண்டால், அவருக்கும் நல்லது, குடும்பத்திற்கும் நல்லது, நாட்டிற்கும் நல்லது.

கேள்வி : பத்திரிகையாளர் நலன் கருதி 3000 ரூபாய் ஊக்கத்தொகை அறிவித்தீர்கள். அதற்கு பத்திரிகையாளர்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலே வெளிமாநில தொழிலாளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து கொண்டு இருக்கிறோம். இன்றைக்குகூட குஜராத்தில் 40 தமிழர்கள் உணவு இல்லாமல் தவித்து வருவதாக தகவல் கிடைத்தது. அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்வதற்கு அரசு என்ன மாதிரியான நடவடிக்கைகள் எடுக்கும்?

பதில் : ஏற்கெனவே தெளிபடுத்தி விட்டேன். எந்தெந்த மாநிலத்திலே தமிழ்நாட்டிலிருந்து சென்று, தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்களோ, அவர்கள் அந்தந்த மாநில அரசுகளோடு தொடர்பு கொண்டு, அவர்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. எங்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலமாக தொடர்பு கொண்டு அவர்களுக்கு தேவையான உணவு, தங்குமிடம், மருத்துவ உதவிகளை செய்து கொடுத்திருக்கிறோம். இதற்கென ஒரு குழுவை ஏற்படுத்தி இருக்கிறோம். அரசின் சார்பாக 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவும் அந்த துறையை சேர்ந்த செயலாளர்கள் அந்தஸ்தில் நியமிக்கப்பட்டு, அந்த குழுவில் பல ஐஏஎஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களுக்கு அந்த தகவல் கிடைத்தால், உடனடியாக சம்பந்தப்பட்ட மாநில அரசோடு தொடர்பு கொண்டு பேசி அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருகிறது. மகாராஷ்ட்ரா, ஆந்திரா போன்ற பல மாநிலங்களில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையிலே அரசு தொடர்ந்து உதவி செய்து கொண்டு இருக்கிறது. நீங்கள் சொல்கின்ற அந்த தகவலை கொடுத்தால், குஜராத் பகுதியில் வாழ்கின்ற நம்முடைய தமிழர்களுக்கும், தமிழக தொழிலாளர்களுக்கும் தேவையான உதவிகளை அரசு செய்து கொடுக்கும்.

அதுமட்டுமல்லாமல், அமைப்பு சாரா தொழிலாளர்கள், பலபேர் எங்களுக்கும் உதவித்தொகை வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே நாங்கள் கட்டுமான தொழிலாளர்கள், ஆட்டோ தொழிலாளர்கள் போன்ற தொழிலாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்தோம். அந்த சலுகைகள் தங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, விடுபட்டுள்ள தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம், தமிழ்நாடு சலவை தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு பனைமர தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு கைவினை தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு கைத்தறி மட்டும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு காலணி, தோல்பொருள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு ஓவியர் நல வாரியம், தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம், தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம், தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர் நல வாரியம், தமிழ்நாடு சமையல் தொழிலாளர் நல வாரியம், கிராமிய கலைஞர்கள் நல வாரியம், ஆகிய வாரிய உறுப்பினர்களுக்கு எல்லாம் 1000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும்.

கேள்வி : பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டுள்ளதா?

பதில் : இன்னும் நிறைய பிரச்சனைகள் இருந்து கொண்டு இருக்கின்றன.

ஏற்கெனவே 21 நாட்கள் ஊரடங்கு உத்தரவு போடப்பட்டு உள்ளது. அது முடிந்த பிறகு தான் இந்த

நோயின் தன்மை அறிந்து தான் அதற்கேற்றவாறு தேதி அறிவிக்கப்படும்.

கேள்வி : 144 ஊரடங்கு உத்தரவு போடப்பட்டுள்ளது. ஆனால் நிறைய தனியார் பள்ளிகள் அடுத்த கல்வியாண்டிற்கான கட்டணத்தை செலுத்த வேண்டும் என்று பெற்றோர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பி வருகின்றன.

பதில் : நீங்கள் அது குறித்து தகவல் கொடுத்தால், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கேள்வி : நலவாரியத்தில் பதிவு செய்யாதவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது.....

பதில் : பதிவு செய்யாதவர்களை எல்லாம் எப்படி கணக்கெடுக்க முடியும். அரசாங்கத்தால் அப்படி கணக்கெடுத்து கொடுக்க முடியாது. அரசு சட்டதிட்ட விதிகளுக்கு உட்பட்டு அமைக்கப்பட்ட வாரியத்தில் இடம்பெற்ற தொழிலாளர்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படும்.

கேள்வி : சர்க்கரை குடும்ப அட்டைதாரர்களுக்கும் உதவித் தொகை வழங்க வேண்டும் என்ற பொதுமக்கள் கோரிக்கை குறித்து...

பதில் : ஏற்கெனவே தமிழகத்தில் 10 இலட்சம் சர்க்கரை அட்டைகள் இருந்தன. பலரிடம் இருந்து எங்களுக்கு கோரிக்கை வந்தது. எங்கள் குடும்ப அட்டைகளை அரிசி குடும்ப அட்டையாக மாற்ற வேண்டும் என்று. அரிசி குடும்ப அட்டைக்கு மாற விருப்பம் உள்ளவர்கள், சர்க்கரை குடும்ப அட்டையிலிருந்து அரிசி குடும்ப அட்டையாக மாற்றிக் கொள்ளலாம் என்ற அறிவிப்பை கொடுத்தோம். அந்த வகையிலே 4 இலட்சத்து 51 ஆயிரம் சர்க்கரை குடும்ப அட்டைதாரர்கள், அரிசி குடும்ப அட்டைதாரர்களாக மாற்றி கொண்டார்கள். மீதமுள்ள 5 இலட்சத்து 49 ஆயிரம் குடும்ப அட்டைதாரர்கள் மாற்றம் செய்யவில்லை. நாங்கள் ஏற்கனவே தெளிவுப்படுத்திவிட்டோம். அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தான் அரசு உதவி வழங்கும் என்று தெரிவித்திருக்கின்றோம். அந்த வகையிலே அவர்களுக்கு உதவிகளை வழங்குகிறோம். சிலர் அந்த குறிப்பிட்ட காலத்திலே குடும்ப அட்டையை மாற்றம் செய்யவில்லை. காலஅவகாசம் கேட்டார்கள், அதுவும் கொடுத்தோம். கால நீட்டிப்பு கூட செய்து கொடுத்தோம். அதில் எல்லாம் அவர்கள் குடும்ப அட்டைகளை மாற்றிக் கொள்ள தவறிவிட்டார்கள். அதற்கு அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாது. இருந்தாலும் அவர்களுக்கு சர்க்கரை, பருப்பு, எண்ணெய் கொடுக்கிறோம்.

கேள்வி : 144 தடை உத்தரவை அமல்படுத்தும்போது, காவல்துறையினர் மெயின்ரோட்டில் கண்காணிப்பதை நாங்கள் பார்க்க முடிகிறது. ஆனால் உள்ளே தெருக்களில் கண்காணிப்பு பணியை குறைவாக உள்ளதோ என்ற எண்ணம் இருக்கிறது. மக்கள் நடமாட்டம் அங்கே அதிகமாக இருக்கிறது.

பதில் : ஒரு நாள், இரண்டு நாள் என்றால் நம்முடைய காவல்துறை அதிகாரிகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பார்கள். 21 நாட்கள். கடுமையான வெயில். காவல்துறையின் கஷ்டத்தை பார்க்க வேண்டும். அனைவரும் கஷ்டத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும். இது ஒரு சோதனையான நேரம். இந்த சோதனை நேரத்தில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டும். காவல்துறையை மட்டும் நாம் குறை சொல்லக்கூடாது. இந்த கடுமையான வெயிலிலும் தேசிய நெடுஞ்சாலைகளிலும், மாநில சாலைகள், பல்வேறு மாவட்ட எல்லைச் சாலைகள், இன்டர்–ஸ்டேட் எல்லை சாலைகளில் எல்லாம் பணிபுரிந்து வருகிறார்கள். நமக்கு இருக்கின்ற காவல்துறை அதிகாரிகளை வைத்துக் கொண்டு தான் நாம் பணிபுரிந்து கொண்டு இருக்கிறோம். ஷிப்ட் முறையில் தான் பணிபுரிந்து கொண்டு இருக்கிறோம். ஒவ்வொருவரும் 8 மணிநேரம் நிற்கிறார்கள். வெயிலில் கால்கடுக்க நிற்கிறார்கள். அதை எல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பொதுமக்கள் தாங்களாக முன்வந்து, கட்டுப்பாட்டை விதித்து கொள்ள வேண்டும். அப்போது தான் எந்த சட்டம் போட்டாலும் அதை நிறைவேற்ற முடியும். இன்றைக்கு காவல்துறை என்பது ஒரு பாதுகாப்பு தான். பயிருக்கு எப்படி வேலி பாதுகாப்போ, அப்படி மக்களுக்கு பாதுகாப்பு காவல்துறை. ஒரு நாள், இரண்டு நாள் என்றால், நீங்கள் கூறுவதை போல அதிக காவலர்களை வைத்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும். தொடர்ந்து 21 நாட்கள் என்று சொன்னால், அவர்களும் மனிதர்கள் தான், மனசாட்சியோடு நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நமக்கு காவலுக்கு இருக்கக்கூடிய காவலர்களின் கஷ்டங்களையும் எண்ணிப் பார்த்து பொதுமக்கள் தங்களை வீட்டிலேயே தனிமைப்படுத்தி கொண்டால், அவர்களுக்கும் நல்லது, குடும்பத்திற்கும், வீட்டிற்கும் நல்லது, நாட்டிற்கும் நல்லது.

நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கொள்வது எல்லாம், இந்த நோய் பரவி விட்டால் தடுக்க இயலாது. மிகப் பெரிய நாடுகளான அமெரிக்கா, இத்தாலி, சீனா, ஜெர்மன், ஸ்பெயின் போன்ற நாடுகளில் கிடைக்கப்

பெற்ற பாடத்தை நாம் நன்கு உணர வேண்டும். இந்த நோய்க்கு இன்னும் மருந்தே கிடைக்கவில்லை, இருக்கின்ற மருத்துவ சிகிச்சை வைத்து தான் நாம் காப்பாற்றி கொண்டு வருகிறோம். ஆகவே, நோயினுடைய வீரியத்தை, தாக்கத்தை உணர்ந்து, பொதுமக்கள் கட்டுப்பாட்டோடு இருக்க வேண்டும். வீட்டிலேயே இருக்க வேண்டும். உங்களுக்கு தேவையான வசதிகளை அம்மாவுடைய அரசு முழுமையாக செய்து கொடுக்கும் என்பதை ஊடகத்தின் வாயிலாக, பத்திரிகையின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : அரசு எடுக்கும் சிறப்பான நடவடிக்கைகளை மக்கள் பாராட்டுகிறார்கள். கொடுக்கப்பட்ட நிதியான 1,000 ரூபாய் போதுமானதாக இல்லை என்ற குறை.....

பதில் : இது ஒரு எமர்ஜென்சி. அரசுக்கு இருக்கின்ற நிதி நிலைமை உங்களுக்கு நன்றாக தெரியும். இன்றைக்கு அரசுக்கு வருகின்ற வருவாய் எல்லாம் குறைந்துவிட்டது. ஜி.எஸ்.டி. மூலமாக தான் நமக்கு வருவாய் வரும். விற்பனை மூலமாக அரசுக்கு வரி வருவாய் வரும். இன்றைக்கு தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டு உள்ளன. பெரிய பெரிய நிறுவனங்கள் எல்லாம் மூடப்பட்டுள்ளன. இருந்தாலும், அரசு இருக்கின்ற நிதியை வைத்து, பகிர்ந்து கொடுத்து அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : 21 நாட்கள் மக்கள் வீட்டிலேயே இருப்பதால் மின் பயன்பாடு அதிகரித்துள்ளது. அதேநேரத்தில், மின் கட்டணத்தில் சலுகைகள் ஏதாவது வழங்கப்படுமா ?

பதில் : ஏற்கெனவே மின்சார வாரியம் கடன் சுமையில் உள்ளது. கடுமையான நிதி சுமையில் இருப்பது மின்சார வாரியமும், போக்குவரத்து துறையும் தான். ஒவ்வொரு மாதத்திற்கும் 1,300 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கி கொண்டு இருக்கிறது. ஆண்டிற்கு சுமார் 16,000 கோடி ரூபாய் நஷ்டத்தில் இன்றைக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் சந்தித்து கொண்டு இருக்கிறது. இதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கேள்வி : டெல்லி மாநாட்டில் கலந்து கொண்டு கொரோனா தொற்று ஏற்பட்டவர்களில், அவர்கள் குடும்பம், அவர்களுடன் பயணம் செய்தவர்கள், பழகியவர்கள், என எத்தனை நபர்களுக்கு நீங்கள் பரிசோதனை செய்தீர்கள் ?

பதில் : பரிசோதனை செய்து கொண்டே இருக்கிறோம். எண்ணிக்கை எல்லாம் சொல்ல முடியாது. எல்லா இடத்திலுமே தகவலை திரட்டி கொண்டு இருக்கிறார்கள். ஆங்காங்கே Block செய்து விட்டார்கள். சென்னையில் 37 இடங்களில் Block செய்து இருக்கிறார்கள். அதுமாதிரி ஒவ்வொரு இடத்திலுமே மாவட்டம் முழுவதும் பாசிட்டிவ் கேஸ்கள், நோய் அறிகுறி தென்பட்டவர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ, அங்கே எல்லாம் Block செய்து விட்டோம். யாரும் போக முடியாது, வர முடியாது. அங்கு இருப்பவர்களுக்கு முதற்கட்டமாக, இந்த மாநாட்டில் சென்றவர்களுக்கு பரிசோதனை செய்யப்படுகிறது. யார் யாருக்கு பாசிட்டிவ் இருக்கிறதோ, அவர்கள் குடும்பத்தினரை பரிசோதனை செய்வார்கள். அப்புறம் அந்த தெருவில் உள்ளவர்களுக்கு பரிசோதனை செய்யப்படும். பின்பு அடுத்த தெரு என ஐந்து கிலோ மீட்டர் ரேடியசில் இருக்கின்ற அனைவருக்குமே பரிசோதனைக்கு உட்படுத்துவோம். அப்படி இருந்தால் தான் நாம் முழுமையாக கண்டுபிடிக்க முடியும்.

அதுமட்டுமல்லாமல், அவர் எங்கெங்கு பயணம் செய்தார், யார் யாரை சந்தித்தார் என்ற தகவலை திரட்டி, பரிசோதனை செய்ய அரசு ஆரம்பித்துள்ளது. பொதுமக்கள் ஒத்துழைப்பு தேவை. எல்லோரும் ஒத்துழைப்பு கொடுத்தால் தான், இந்த நோய் பரவலை தடுக்க முடியும். ஆகவே, இது ஒரு தொற்று நோயாக இருப்பதன் காரணமாக, பலருக்கு பரவி இருக்கிறது. இங்கிலாந்து இளவரசர் திரு. சார்லஸ், இங்கிலாந்து பிரதமர் போன்றோர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரச குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கே வருகிறது, சாதாரண மக்களுக்கு ஏதாவது ஒரு ரூபத்தில் வர வாய்ப்பு இருக்கிறது. நோய் வந்துவிட்டால் பயப்படக் கூடாது. நோய் வருவது என்பது இயற்கை. அதை யாராலும் நிறுத்த முடியாது. நோய் வந்தவுடனேயே, அதை குணப்படுத்துவதற்கு தேவையான சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். அதைத்தான் நாங்கள் வலியுறுத்தி சொல்லி கொண்டு இருக்கிறோம். இது ஒரு தொற்றுநோய். இந்த தொற்றுநோய் எளிதாக பரவக்கூடியது. ஆகவே, அரசு எடுக்கின்ற நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு கொடுத்து, இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று பொதுமக்களை அன்போடு வேண்டி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் கேட்டுக் கொள்வதெல்லாம் தனிமைப்படுத்தி கொள்ளுங்கள், நீங்கள் வீட்டிலேயே இருங்கள், உங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் எல்லாம் வீடுதேடி வரும். ஆகவே, பொதுமக்கள் எக்காரணத்தைக் கொண்டும் வெளியில் வர வேண்டாம் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

கொரோனா நோய் தடுப்புக்கான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அரசு அனுமதிக்காக காத்திருக்க வேண்டியதில்லை, உடனடியாக பணிகளை துவங்கலாம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் உத்தரவின்படி கொரோனா நோய் தடுப்புக்கான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து உற்பத்தியை தமிழ்நாட்டில் மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் – 07.04.2020

உலகத் தொற்று நோயான கொரோனா வைரஸ் நோய் பரவலை தடுக்க தமிழ்நாடு அரசு பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக கொரோனா நோய் தடுப்புக்கான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளின் உற்பத்தியை தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு புதிய சலுகைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்தார். அதன்படி, தொழில் துறை அரசாணை எண்.113, தொழில் (எம்.ஐ.பி1) துறை, நாள்: 02.04.2020 ன்படி சலுகைகளை பெறுவதற்கான வழிமுறைகள் வெளியிடப்பட்டன.

உள் நுழைவு செயற்கை சுவாசக் கருவிகள் (Invasive Ventilators), N95 முகக் கவசங்கள், கொரோனா நோய் தடுப்புக்கான வைரஸ் எதிர்ப்பு மற்றும் மலேரியா எதிர்ப்பு மருந்துகள், (Anti Viral and Anti Malarial drugs used to treat COVID 19), அசித்ரோமைசின், ஹைட்ராக்ஸி குளோரோகுயின் மற்றும் வைட்டமின்–சி மாத்திரைகள், ICMR அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட RT-PCR வகை கொரோனா பரிசோதனை உபகரணங்கள் (Test Kits), தனி நபர் பாதுகாப்பு கவச உடை (Personal Protection Equipments as per applicable national standards), பல்வகை பண்பளவு கணிணித் திரைகள் (Multi Parameter ICU Monitors) ஆகியவற்றை உற்பத்தி செய்ய சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீஹெல்த் கேர், இமேஜிங் புராடக்ட்ஸ் (இந்தியா) லிமிடெட், வீனஸ், ஸ்ரீராஜராஜேஸ்வரி லைப் கேர், ஏர் லிக்விட் உள்ளிட்ட பல நிறுவனங்களும் மேற்படி பொருட்களை உற்பத்தி செய்வதற்கான கருத்துருவை அனுப்பியுள்ளனர். இதில் ஸ்ரீ ஹெல்த் கேர் நிறுவனம் கோரியபடி தண்டரை சிட்கோ பூங்காவில் உடனடியாக நிலம் வழங்கப்படுகிறது.

இச்சலுகையை பெற விரும்பும் நிறுவனங்கள் அரசு அனுமதிக்காக காத்திருக்க வேண்டியதில்லை. உடனடியாக பணிகளை துவக்கலாம். தங்களுடைய உற்பத்தியை துவக்கிய பின்னர் அரசுக்கு தெரிவித்தால் போதுமானது.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து கொரோனா நோய் தடுப்புக்கான தனி நபர் பாதுகாப்பு உடைகள், முகக் கவசங்கள், மருத்துவ உபகரணங்கள், மருந்து பொருட்கள் உள்ளிட்டவற்றை தமிழ்நாடு அரசும் பிற மாநில அமைப்புகளும் நிறுவனங்களும் தமது தேவைக்கேற்ப கொள்முதல் செய்ய உதவிடும் பொருட்டு மேற்படி உற்பத்தியாளர்களின் விரிவான பட்டியலை தொழில் வணிக ஆணையரகம் தயார் செய்து வருகிறது.

அதன்படி உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் https://www.msmeonline.tn.gov.in/ என்ற இணையதளத்தில் தங்கள் விவரங்களை பதிவு செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 103 உற்பத்தியாளர்கள் தங்களுடைய விவரங்களை பதிவு செய்துள்ளனர். இங்கு பதிவு செய்வது அரசு கொள்முதல் செய்வதற்கான உத்திரவாதம் அல்ல; மேற்படி நிறுவனங்களின் விவரங்களை சேகரித்து தேவைப்படும் அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு மட்டுமே. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தமது தேவையைப் பொறுத்து அவ்வப்போது தாமாகவே மேற்படி உற்பத்தியாளர்களை தொடர்பு கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற 14,07,130 தொழிலாளர்களுக்கு தலா ரூ.1,000 வழங்கப்பட்டுள்ளது!

கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையாக அறிவிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு காரணமாக வருவாய் இழப்பு ஏற்பட்ட தொழிலாளர்களுக்கு தமிழக அரசு வழங்கிய உதவித்தொகை மற்றும் உணவுப்பொருட்கள் விவரம் – 07.04.2020

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.03.2020 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் விதி 110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா ஓட்டுநர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள ஓட்டுநர்கள் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையாக அறிவிக்கப்பட்ட ஊரடங்கு காரணமாக வேலையிழப்பு ஏற்பட்டதனை ஈடுசெய்ய கட்டுமான வாரியத்தில் பதிவு செய்த 12,13,882 தொழிலாளர்களும், ஓட்டுநர் வாரியத்தில் பதிவு செய்த 83,500 தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ.1,000/– வழங்கவும் மேலும் இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள வெளிமாநிலத்திலிருந்து தமிழகத்தில் பணிபுரியும் கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் ஆகியோரின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 14,57,526 குடும்பங்களுக்கு 15 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு, 1 கிலோ சமையல் எண்ணெய் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளிமாநிலத்திலிருந்து தமிழகத்தில் பணிபுரிந்து ஊரடங்கின் காரணமாக தொழிற்சாலைகள், கடைகள், வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் மற்றும் தோட்ட நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து வருவாய் இழந்து தவிக்கும் வெளி மாநில தொழிலாளர்களின் நிலை கருதியும், பிற மாநில தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1,34,569 தொழிலாளர்களின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 15 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு, 1 கிலோ சமையல் எண்ணெய் வழங்கிட ஆணையிட்டுள்ளார்.

மேற்கண்டவாறு கட்டுமானம் மற்றும் ஓட்டுநர் நலவாரியத்திற்கு வழங்கிய பணப்பயனைப்போன்று தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் நல வாரியம், சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம், முடி திருத்துவோர் நல வாரியம், தையல் தொழிலாளர்கள் நல வாரியம், கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம், பனை மரத் தொழிலாளர்கள் நல வாரியம், கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவாளர்கள் நல வாரியம், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பு தொழிலாளர்கள் நல வாரியம், ஓவியர்கள் நல வாரியம், பொற்கொல்லர் நல வாரியம், மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம், வீட்டுத் தொழிலாளர்கள் நல வாரியம், விசைத்தறி தொழிலாளர்கள் நல வாரியம், பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் நிறுவனங்கள் தொழிலாளர்கள் நல வாரியம், உணவு சமைக்கும் தொழிலாளர்கள் நல வாரியம் ஆகிய 15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கும் ரூ.1,000/– வீதம் உதவித்தொகை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களால் 06.04.2020 அன்று அறிவிக்கப்பட்டவாறு 14,07,130 தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

தமிழக அரசு 17 வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு ரூ.1,000/– வீதம் உதவித்தொகை வழங்கிட ரூ.270.05 கோடியும், பிற மாநில தொழிலாளர்கள் உள்ளிட்ட அமைப்புசாரா தொழிலாளர்கள் குடும்பங்களுக்கும், கடைகள் மற்றும் நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் மற்றும் தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் பிறமாநில தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் உணவுப் பொருட்கள் வழங்க ரூ.101.73 கோடியும் செலவிட அனுமதி வழங்கியுள்ளது.

மேற்கண்ட அறிவிப்புகளின்படி அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) மூலம் தொழிலாளர்களுக்கு தலா ரூ.1,000/– வீதம் அவரவர் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட 17 தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து வங்கிக்கணக்கு விபரங்களை இது நாள் வரை அளிக்காத அமைப்பு சாரா தொழிலாளர்கள், வங்கிக் கணக்கு விவரங்களை உடன் அந்தந்த மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) அலுவலக தொலைபேசி மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அத்தொழிலாளர்களின் வங்கிக் கணக்கு விவரம் கிடைத்த பிறகே மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) அலுவலரால் அவர்களின் கணக்கில் பணம் செலுத்த இயலும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் பயனடையும் வகையில் குரல்வழிச் சேவை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
தலைமைச் செயலகத்திலும்,
மாண்புமிகு மத்திய சட்டம், நீதி, தொலைத்தொடர்பு
மின்னணு மற்றும் தகவல் நுட்பவியல் துறை அமைச்சர்
திரு. **ரவிசங்கர் பிரசாத்** அவர்கள் புதுடெல்லியிலும்,
குரல் வழிச் சேவையை காணொலிக் காட்சி மூலமாக
துவக்கி வைத்தார்கள் – 09.04.2020

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமைச் செயலகத்திலும், மாண்புமிகு மத்திய சட்டம் மற்றும் நீதி, தொலைத் தொடர்பு, மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ரவிசங்கர் பிரசாத் அவர்கள் புது டெல்லியிலும் 09.04.2020 அன்று தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, சென்னை – IIT மற்றும் பி.எஸ்.என்.எல். இணைந்து உருவாக்கியுள்ள கொரோனா குறித்த சுய தகவல் பதிவு மற்றும் விரைவு நடவடிக்கை அமைப்பின் 94999 12345 என்ற குரல்வழிச் சேவையை காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள்.

அப்போது, மாண்புமிகு மத்திய சட்டம் மற்றும் நீதி, தொலைத் தொடர்பு, மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ரவிசங்கர் பிரசாத் அவர்கள் பேசியதன் தமிழாக்கம் :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கே. பழனிசாமி அவர்களுக்கும், சுகாதார துறை அமைச்சர் அவர்களுக்கும், தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அரசு அலுவலர்களுக்கும் எனது வணக்கம்!

தமிழகத்தில் எடுத்துவரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக தமிழ்நாடு அரசுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன். கொரோனா நோய் நம் எல்லோருக்குமே மிகப் பெரிய சவாலாக உள்ளது. இந்தியாவுக்கு மட்டுமல்ல. உலகத்துக்கே இது சவாலாகும். இந்த காலக்கட்டத்தில் மக்களை காப்பாற்றுவதற்காக அனைத்து வகை தொழில் நுட்பத்தையும் நாம் பயன்படுத்துவது அவசியமாக உள்ளது. தற்போதுள்ள ஆரோக்கிய சேது ஐ.வி.ஆர்.எஸ். என்பது தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள நல்ல முயற்சியாகும்.

இந்தியாவில் 130 கோடி பேர் இருக்கும் நிலையில் 120 கோடிக்கும் மேற்பட்ட செல்போன்கள் உள்ளன. எனவே, இந்த சூழ்நிலையில் அவர்களுக்கு உதவி செய்ய இது வசதியாக இருக்கும். மனித குலத்துக்கே சாபக்கேடாக உள்ள அந்த கிருமி தொடக்கத்திலேயே

கட்டுப்படுத்தப்பட வேண்டும். மத்திய அரசுடன் மற்ற மாநில அரசுகளும் இணைந்து செயல்பட்டால்தான் இந்தியா முற்றிலும் இதிலிருந்து விடுபட முடியும்.

வணக்கம்!

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசியதன் தமிழாக்கம் :

மாண்புமிகு ரவிசங்கர் பிரசாத் அவர்களே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களே, மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே, மத்திய செயலாளர் அவர்களே, மற்றும் அலுவலர்களே, வணக்கம் !

மனிதனுக்கு எதிரான மிகப் பெரிய சாலாக கரோனா தொற்று உள்ளது. இந்தியா தனது அனைத்து திறனையும் பயன்படுத்தி அதற்கு எதிராக செயல்பட்டு வருகிறது இந்த குரல் வழி சேவையைப் பயன்படுத்த இணையவசதி தேவையில்லை. எளிமையாக, எளிதில் புரிந்து கொள்ளும் கேள்வி, பதில் வடிவத்தில், குறிப்பாக அவரவர் தாய்மொழியிலேயே தகவல்கள் மற்றும் அறிவுரைகள் வழங்கும் வசதி இதில் உள்ளது.

நன்றி! வணக்கம்!

இந்த குரல்வழிச் சேவையானது, மொத்த அலைபேசி பயனாளிகளில் நவீன கைபேசியை (ஸ்மார்ட் போன்) பயன்படுத்தாத 60 சதவிகித பயனாளிகளை சென்றடைய ஏதுவாக செயலி மற்றும் இணைய சேவை இல்லாத குரல் அழைப்புகளின் வாயிலாக, கொரோனா வைரஸ் குறித்தும், அந்நோய் தொற்று பரவும் விதம் குறித்தும் பொதுவான கேள்விகளை தானாகவே பதிவு செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பயனாளிகள் அளிக்கும் பதில்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறைக்கு மேல் நடவடிக்கைகளுக்காக பகிரப்படும்.

இந்த குரல்வழிச் சேவை மூலம், பயனாளிகள் மிஸ்டு கால் அல்லது குறுந்தகவலை 94999 12345 என்ற எண்ணுக்கு அனுப்ப வேண்டும். பயனாளிகள் பதிவு செய்த தகவலை குறுஞ்செய்தியாக உடனடியாகப் பெறுவார்கள். அதைத் தொடர்ந்து, பி.எஸ்.என்.எல். எண்ணிலிருந்து பயனாளிகள் அழைப்பை பெறுவார்கள். பயனாளிகள் தங்கள் நோய்நிலை, கொரோனா வைரஸ் சார்ந்த அறிகுறிகள், நீரழிவு நோய், இரத்த அழுத்தம் போன்ற உடல் உபாதைகள் குறித்த தகவல்களை இந்த அழைப்பின்போது தெரிவிக்கலாம். பயனாளிகளின் பதில்கள் மற்றும் இருப்பிடங்களை ஆராய்ந்து, மேல் நடவடிக்கைகளுக்காக தகவல்கள் பரிமாற்றம் செய்யப்பட்டு, நோயின் தன்மைக்கேற்ப அவசர ஊர்தி உள்ளிட்ட மருத்துவ சேவையை பெற, பயனாளிகளுக்கு மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை உதவி செய்கிறது. மேலும், நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக மேற்படி ஆதாரங்களை மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை பெற முடியும்.

இந்த சேவையின் மூலம், பயனாளிகள் அளிக்கும் பதில்கள் அவர்களது இருப்பிடங்களோடு ஆராய்ந்து, குறைந்த, நடுத்தர மற்றும் அதிக அபாய பயனாளிகள் என்று வகைப்படுத்தப்பட்டு, கீழ்க்காணும் சேவைகள் வழங்கப்படும்.

குறைந்த அபாய பயனாளிகள் – கை கழுவுதல், இருமும் முறை, சமூக விலகல் மற்றும் சுற்றுப்புற பொது சுகாதாரம் உள்ளிட்ட சுகாதார அறிவுரைகள் வழங்குதல்.

நடுத்தர அபாய பயனாளிகள் – மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை வாயிலாக அவசர மருத்துவ சேவைகள் கிடைப்பதற்கான உதவிகள் வழங்குதல்.

அதிக அபாய பயனாளிகள் – நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை வாயிலாக செயல்படுத்துதல்.

இக்குரல்வழிச் சேவை மூலமாக, பெருவாரியான மக்களை தொடர்பு கொண்டு, கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மாவட்ட அளவில் விரைந்து செயல்படுத்த முடியும். மேலும், பொதுமக்கள், குடும்ப நபர்கள் அல்லது தனி நபருக்கான கொரோனா குறித்த அறிகுறிகளை சுய பதிவு செய்தல், தங்கள் பகுதிகளில் கொரோனா சார்ந்த தகவல்களை அரசுக்கு தெரிவித்தல், கொரோனா நோய் குறித்து செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றி தெரிந்து கொள்ளுதல், அருகிலுள்ள அரசு அவசர கட்டுப்பாட்டு மைய அதிகாரியை தொடர்பு கொள்ளுதல், கைகழுவுதல், இருமும் முறை, சமூக விலகல், சுற்றுப்புற பொது சுகாதாரம் போன்றவைகள் குறித்த சேவைகளையும் பெற்று பயன்பெற முடியும். •

பொதுமக்கள் அன்புகூர்ந்து ஒத்துழைப்பு நல்கி இந்த வைரஸ் தொற்று நோய் தமிழகத்திலிருந்து முழுமையாக அகற்றுவதற்கு துணை நிற்க வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 09.04.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள குழுக்களுடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு பின்பு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.

அனைத்து ஊடக மற்றும் பத்திரிகை துறை நண்பர்களுக்கும் முதற்கண் வணக்கம்.

இன்றைய தினம் ஏற்கெனவே அரசு அறிவித்தபடி கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்வதற்காக 12 குழுக்கள் அமைக்கப்பட்டு அந்த குழுக்களும் சிறப்பாக பணியாற்றி கொரானா வைரஸ் தடுப்புப்பணிகளை மேற்கொண்டு வருகின்றன. ஒவ்வொரு குழுவிற்கும் தனித்தனி பணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குழுவில் துறை செயலாளர்கள் மற்றும் ஐஏஎஸ் அந்தஸ்தில் உள்ள உயர் அதிகாரிகள் இடம் பெற்றிருக்கின்றனர். இந்தக் குழு தனக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை திறம்பட செயல்படுத்துவதன் காரணமாக இன்றைக்கு தமிழகத்திலே கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். இதுவரை, விமான நிலையங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பரிசோதனை செய்யப்பட்ட பயணிகள் எண்ணிக்கை 2,10,538 நபர்கள். மேற்கண்ட பயணிகளில் வீட்டுக் கண்காணிப்பில் இருந்து வரும் பயணிகளின் எண்ணிக்கை 92,814 நபர்கள். அதில், 28 நாட்கள் கண்காணிப்பு நிறைவு பெற்றுள்ள பயணிகளின் எண்ணிக்கை 32,075. நோய் தொற்று ஏற்பட்டவர்களை பரிசோதனை செய்வதற்காக தமிழகத்தில் ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசின் சார்பாக 12, தனியார் சார்பாக 7 என மொத்தம் 19 ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. இன்றைய தேதிவரை ஆய்வக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 6,095 நபர்கள். இன்றைய தேதி வரை கொரோனா நோய்த்தொற்று கண்டறியப்பட்டு உள்ளவர்களின் எண்ணிக்கை 738 நபர்கள். இன்றைய தேதிவரை பரிசோதனை முடிவுகள் வர வேண்டிய நபர்களின் எண்ணிக்கை 344 நபர்கள். கொரோனா வைரஸ் நோய் என சந்தேகிக்கப்பட்டு உள்நோயாளிகளாக தனிப்பிரிவில் இருப்பவர்களின் எண்ணிக்கை 1,953 நபர்கள். கொரோனா நோய்த்தொற்று கண்டறியபட்டவர்களில் சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பியவர்கள் எண்ணிக்கை 21 நபர்கள். கையிருப்பில் உள்ள வெண்டிலேட்டர்கள் எண்ணிக்கை 3,371. தனிமைப் பிரிவில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை, அரசின் சார்பாக 22,049,

தனியார் சார்பாக 10,322 என மொத்தம் 32,371 படுக்கைகள் தயார் நிலையில் இருக்கின்றன. இதுவரை கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை 8 நபர்கள். கொரானா வைரஸ் வராமல் தடுப்பதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தற்போது அரசின் கையிருப்பில் மூன்று மடிப்பு முகக் கவசங்கள், N95 முகக் கவசங்கள், உடல் பாதுகாப்பு உடைகள், (PPE) காய்ச்சல் மருந்துகள், ஆன்ட்டிபயாட்டிக் மருந்துகள் மற்றும் IV திரவங்கள், PCR கிட்ஸ் அனைத்தும் போதிய அளவு கையிருப்பில் உள்ளன. 2500 வென்டிலேட்டர்கள் வாங்குவதற்காக கொள்முதல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல, 4 இலட்சம் துரித ஆய்வக உபகரணங்கள் (Rapid test kits) வாங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இன்று இரவு 50,000 (rapid test kits) வந்துவிடும். மத்திய அரசில் இருந்து 20,000 கொடுப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள், அவைகளும் நாளை வந்து விடும். PCR test 1.30 இலட்சம் எண்ணிக்கைகள் கொள்முதல் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை நடவடிக்கைகள் – 144 தடை உத்தரவை மீறியவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 1,17,796. கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,27,792 நபர்கள், பிறகு அவர்கள் ஜாமீனில் விடப்பட்டுள்ளனர். 144 தடை உத்தரவை மீறி வாகனத்தில் சென்றவர்களின் வாகன பறிமுதல் எண்ணிக்கை 99,797. வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டவர்களிடம் அபராதத் தொகையாக ரூபாய் 40,09,944 வசூல் செய்யப்பட்டுள்ளது.

நிவாரண விவரம்

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி அரிசி குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு ரேஷன் பொருட்கள் விலையில்லாமல் வழங்கப்படும். எல்லா அரிசி குடும்ப அட்டைக்கும் தலா ரூ.1,000 வழங்கப்படும் என்ற அறிவிப்பை கொடுத்தோம். அந்த வகையில், பயனாளிகளின் எண்ணிக்கை 2,01,46,993. இதற்கு ரூ.2014.70 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை 1,93,82,420 அட்டைதாரர்களுக்கு ரூ.1,000 வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில், வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது 96.30 சதவிகித குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நிவாரண பொருட்களாக 95,01,932 குடும்ப அட்டைகளுக்கு விலையில்லாமல் ரேஷன் பொருட்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கட்டுமானத் தொழிலாளர்களில் நிவாரணம் பெற 12,13,882 நபர்கள் தகுதியானவர்கள், இதற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.121.39 கோடி. இதுவரை 1,46,818 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள அனைவருக்கும் 2 நாட்களில் வழங்கப்பட்டு விடும்.

வெளிமாநில கட்டுமானத் தொழிலாளர்களைப் பொறுத்தவரைக்கும் 64,274 பேர் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 6.43 கோடி ரூபாய். இதுவரை 19,464 நபர்களுக்கு விலையில்லாமல் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள அனைவருக்கும் 2 நாட்களில் வழங்கப்பட்டு விடும். ஓட்டுநர் தொழிலாளர்கள் நிவாரணம் பெறுபவர்களின் எண்ணிக்கை 83,500. அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.8.40 கோடி. இதுவரை அத்தியாவசியப் பொருட்கள் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 26,222.

நம்முடைய மாநிலத்தில் உள்ள வெளி மாநிலத் தொழிலாளர்கள் மொத்த எண்ணிக்கை 1,71,085. கட்டடத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,12,074. பிற வணிக நிறுவனங்களில் 20,294 பேர் பணிபுரிகிறார்கள். கரும்பு வெட்டும் பணியில் 3,500 பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு பணி செய்ய சென்றவர்களின் எண்ணிக்கை 7,376.

இன்றைக்கு அரசால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. காய்கறி வாங்குவதற்கு இன்றைக்கு ஆங்காங்கே மார்க்கெட்டில் அதிகமாக மக்கள் கூடுகிறார்கள். சமூக இடைவெளியை பின்பற்றாத காரணத்தினால் காய்கறிகளை அவரவர்கள் பகுதிக்கே கொண்டு சென்று காய்கறிகளை வழங்குவதற்காக அரசு நடமாடும் காய்கறி விற்பனையை தொடங்கியிருக்கிறது. அதன் மூலமாக 08.04.2020 ஒரு நாள் மட்டும் தமிழ்நாடு முழுவதும் வேளாண்மைத் துறையின் மூலமாக சுமார் 2,000 மெட்ரிக் டன் காய்கறிகளை விற்பனை செய்யப்பட்டிருக்கின்றது. உழவர் சந்தை மூலம் மட்டும் 1070 மெட்ரிக் டன் காய்கறிகள் விற்பனை ஆகியிருக்கின்றன. அதுமட்,டுமல்லாமல், இன்றைக்கு 66 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மூலமாக காய்கறிகள் எல்லாம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் வேளாண்மைத் துறை, உள்ளாட்சித் துறை ஆகிய 2 துறைகளும் இணைந்து 3,500 வாகனங்களின் மூலமாக அந்தந்த பகுதி மக்களுக்கு அவர்கள் வசிக்கும் இடத்திலேயே காய்கறிகளை வழங்குவதற்காக நடமாடும் காய்கறி விற்பனை தொடங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, இன்றைக்கு சி.எம்.டி.ஏ. மூலமாக 100 வாகனங்கள் மூலமாக சென்னையில் நடமாடும் காய்கறி விற்பனை துவங்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறி, பழங்களையெல்லாம் ஆங்காங்கே இருக்கின்ற 111 குளிர்சாதன கிடங்குகளில் வைத்து பத்திரப்படுத்தி வைத்து பிறகு விற்பனை செய்து கொள்ளலாம். 30.04.2020 வரை அதற்கு வாடகை வசூல் செய்யப்பட மாட்டாது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

அத்தியாவசியப் பொருட்கள் முழுமையாக தங்கு தடையில்லாமல் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு எந்தெந்த மளிகைப் பொருட்கள் கிடைக்கவில்லையோ, அவையெல்லாம் கண்டறியப்பட்டு, அண்டை மாநிலங்களில் கூட்டுறவுத் துறையின் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு தமிழகத்தில் விற்பனை செய்யப்படும். இதனால் விலை கட்டுப்படுத்தப்படும்.

அதுபோல வெளி மாநிலங்களிலிருந்து மளிகைப் பொருட்கள் கொண்டு வரும் வாகனங்கள் தங்கு தடையில்லாமல் தமிழகத்திற்கு கொண்டுவருவதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு இன்றைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதோடு, இன்றைய தினம் தமிழகம் முழுவதும் மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை மேம்படுத்துவதற்காக 137 தனியார் மருத்துவக் கல்லூரிகள் / மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று நோய் ஏற்பட்டவுடன் இந்த மருத்துவமனைகளில் சேர்ந்து அவர்கள் சிகிச்சை பெற்றுக் கொள்ள அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். இதில் கொரோனா வைரஸ் நோய் ஏற்பட்டவுடனேயே அரசைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு உரிய முறையிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டுமென்பதற்காக அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்து கொடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். அதேபோல, இன்றைக்கு அரசு மருத்தவமனை, தனியார் மருத்துவமனை, அரசு மருத்துவ கல்லூரிகள் மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மொத்தமாக 96,773 படுக்கை வசதிகள் கண்டறியப்பட்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், யார் நோய்வாய்ப்பட்டாலும், அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்காக அனைத்து வசதிகளும் எங்களால் செய்து தரப்படுகின்றன, தயார் நிலையில் இருக்கின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, முதியோர் , மாற்றுத் திறனாளி களுக்கெல்லாம் உதவி செய்ய வேண்டு மென்பதற்காக அரசு ஆணையிட்டு, அவர்களுக்கும் உரிய வகையிலே மூன்று வேளையும் உணவு அளிக்கப்படுகின்றது. அந்த வகையிலே, திருமண மண்டபம், சமூக நலக் கூடத்திலே சுமார் 73,834 நபர்களை தங்க வைத்து அவர்களுக்குத் தேவையான உணவை நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

80 வயதை கடந்த 13,66,579 முதியோர்களுக்கு நேரடியாக அவர்கள் இல்லங்களுக்கே சென்று முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு கிடைக்க வேண்டிய இரண்டு மாத உதவித்தொகை 1,95,249 நபர்களுக்கு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடிகளில் 24 இலட்சம் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கு தேவையான அனைத்து பொருட்களும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கேள்வி : தமிழ்நட்டில் லாக்டவுன் நீட்டிப்பு செய்யப்படுமா ? ஒரு சில மாநிலங்களில் செய்திருக்கிறார்கள். இது தொடர்பாக தமிழ்நாடு அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது ?

பதில் : நோயினுடைய நிலைமை பொறுத்து தான் முடிவு எடுக்கப்படும். இது ஒரு தொற்றுநோய். நாளுக்கு நாள் இந்த தொற்று நோய் பரவலின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஆரம்பித்தில் பார்த்தீர்கள் என்றால், 150 பேருக்கு தான் தொற்று இருந்தது. இன்றைக்கு இந்த தொற்று 738ஆக உயர்ந்து இருக்கிறது. இன்று மாலை எவ்வளவு பேர் தொற்றுடன் வருவார்கள் என்று தெரியவில்லை. ஆகவே, ஒவ்வொரு நாளும், கொரோனா வைரஸ் தொற்று நோய் ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை பெறுபவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போய் கொண்டு இருக்கிறது. நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே இருக்கிறது. இதையெல்லாம் கருத்திலே கொண்டு, 19 பேர் கொண்ட மருத்துவர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவுடன் ஆலோசனை பெறுவதுடன், ஏற்கெனவே உள்ள 12 குழுக்களின் ஆலோசனைகளை பெற்றிருக்கின்றோம். இதையெல்லாம் ஆராய்ந்து தான் அரசு முடிவு செய்யும்.

கேள்வி : மளிகை பொருட்களில் பல இடங்களில் தட்டுப்பாடு இருப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக சொல்கிறார்கள், பதுக்கப்படுவதா சொல்கிறார்கள், பதுக்கினால் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

பதில் : இதையெல்லாம் தவிர்ப்பதற்கு, ஏற்கெனவே இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற போதே, தமிழகத்தில் ஏதாவது அத்தியாவசிய உணவு பொருட்களின் விலை உயர்கின்ற போது, அதை கட்டுப்படுவதற்காக அதற்கென ஒரு நிதி ஒதுக்கப்பட்டு, கூட்டுறவுத் துறையின் மூலமாக அப்பணியை செய்வதற்காக ஆணையிடப்பட்டது. அந்த நிதியை வைத்து வெளிமாநிலங்களில் கூட்டுறவுத் துறையே போய் எந்தெந்த பொருட்கள் கிடைக்கவில்லையோ, எந்தெந்த பொருட்களுக்கு தட்டுப்பாடு இருக்கிறதோ, அந்த பொருட்களை எல்லாம் கூட்டுறவுத் துறையே கொள்முதல் செய்து, இங்கே விற்பனை செய்யப்படும். அப்படி விற்பனை செய்கின்ற போது, விலையேற்றமும் இருக்காது, தட்டுப்பாடும் இருக்காது, பதுக்கலும் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. அதற்கு இன்றைக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு தேவையான நிதியும் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கேள்வி : இந்திய அளவில் எண்ணிக்கை அடிப்படையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. தொற்று நோய் பரவலில் தமிழ்நாடு எந்த Stage-ல் உள்ளது ?

பதில் : இப்போது தமிழ்நாடு Stage-2 ல் இருக்கிறது. Stage-3 போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே Stage-2ல் கட்டுப்படுத்துவதற்கு தான் அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. அதற்கு தான் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு தொற்று நோய் தடுப்பதற்கு உண்டான பணிகளையும் செய்து கொண்டு இருக்கிறது. அத்தியாவசிய பொருட்கள் மக்களுக்கு எளிதாக கிடைப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொண்டு வருகிறது. போக்குவரத்து சீர் செய்வதற்கும் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல உபகரணங்கள் வாங்குவதற்கும் குழு செயல்பட்டு கொண்டு இருக்கிறது. வெளிமாநிலத்தில் தங்கியுள்ள நமது தொழிலாளர்களுக்கு

தேவையான உதவிகளை செய்வதற்கும், தமிழ்நாட்டில் தங்கியுள்ள பிற மாநில தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகளை செய்வதற்கும் இந்த குழு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

கேள்வி : இன்றைக்கு IVRS அவசர தொலைபேசி எண்ணை அறிமுகப்படுத்தினீர்கள், அதில் எந்த மாதிரி சந்தேகங்களை கேட்கலாம், யார் கேட்கலாம், எல்லோரும் கேட்கலாமா ?

பதில் : அதைத்தான் நான் தெளிவாக சொல்லி இருக்கிறேனே. இன்று காலை தான் பேசினேன், எல்லா ஊடகத்திலும், பத்திரிகையிலும் வந்திருக்கிறது.

கேள்வி : ரேபிட் டெஸ்ட் கிட் வந்தவுடன் யாருக்கெல்லாம் பரிசோதனை செய்யப்படும், எப்படி ஆரம்பிக்கப்படும், அரசிற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

பதில் : நல்ல கேள்வி. நம்மை பொறுத்தவரைக்கும், யார் யாரெல்லாம் பாசிட்டிவ் கேஸ் வந்திருக்கிறதோ, அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு முதற்கட்டமாக பரிசோதனை செய்யப்படும். இரண்டாவது கட்டமாக, அவர்களை சுற்றி இருப்பவர்கள், யார் யாரெல்லாம் அவர்களுக்கு தொடர்பில் இருந்தார்கள் என்று கண்டறிந்து, அவர்களுக்கு இந்த பரிசோதனை செய்யப்படும். பிறகு அந்த சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு பரிசோதனை செய்யப்படும். அதற்கு தான் 4 இலட்சம் ரேபிட் டெஸ்ட் கிட் வழங்க இருக்கிறோம். துரிதமாக ஆய்வுப் பணியை மேற்கொள்வதற்காக இந்த நடவடிக்கையை அரசு எடுத்து இருக்கிறது. இதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

கேள்வி : முதற்கட்டமாக தமிழ்நாடு அரசு ரூ.3,280 கோடி ஒதுக்கி நிவாரணப் பணிகள் செய்து கொண்டு இருக்கிறது. இரண்டாம் கட்டமாக ஒரு நிவாரணத் தொகையை அறிவிக்க வேண்டும் என்று மக்கள் எதிர்ப்பார்க்கிறார்கள்.

பதில் : ஏற்கெனவே என்னென்ன வாரியத்திற்கு உதவித்தொகை வழங்கப்படும் என்று அறிவிப்பு கொடுத்தேன். இது அனைத்து தொலைகாட்சிகளிலும், பத்திரிகைகளிலும் வந்து இருக்கிறது. ஆகவே இப்போது பல்வேறு அமைப்பை சேர்ந்தவர்கள் எங்களுக்கும் உதவித்தொகை வழங்க வேண்டும் என்று அரசிற்கு கோரிக்கை விடுத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையும் அரசு ஏற்று, இன்றையதினம் என்னென்ன வாரியம், என்னென்ன அமைப்புகளுக்கு, அந்த வாரியத்தில் உள்ள ஏழை தொழிலாளர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பை இப்போது வெளியிடுகின்றேன்.

தூய்மைப் பணியாளர் நல வாரியம்
கதர்கிராமத் தொழிலாளர் நல வாரியம்
மீனவர் நல வாரியம்
மூன்றாம் பாலினத்தவர் நல வாரியம்
பழங்குடியினர் நல வாரியம்
சிறு வியாபாரிகள் நல வாரியம்
பூசாரிகள் நல வாரியம்
உலமாக்கள் நல வாரியம்
நாட்டுப்புற கலைஞர்கள் நல வாரியம்
சீர்மரபினர் நல வாரியம்
நரிக்குறவர் நல வாரியம்
திரைப்படத்துறை தொழிலாளர் நல வாரியம்

இந்த வாரியங்களில் 7 இலட்சம் நபர்கள் இடம் பெற்றுள்ளனர். இந்த 7 இலட்சம் பேருக்கும் தலா 1,000 ரூபாய் வழங்கப்படும்.

அதேபோல, தமிழ்நாடு முழுவதும் 1,370 பட்டாசு தொழிற்சாலைகளில் இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் பதிவு பெற்ற சுமார் 1,20,200 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுக்கும் தலா 1,000 ரூபாய் உதவித் தொகை அரசால் வழங்கப்படும்.

இது இரண்டையும் சேர்த்தால் 8,20,200 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்த தொழிலாளர்களுக்கு அம்மாவுடைய அரசு 82.02 கோடி ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும் என்று தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி : 108 ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்கப்படுமா ?

பதில் : அவர்கள் பணியே அதுதான். அவசர காலத்திற்கு பணிபுரிவதற்கு தான் அவர்கள் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம், இரவு பகல் பாராமல், அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றிய காவலர் ஒருவர் இறந்துவிட்டார். சென்னை, மயிலாப்பூர், போக்குவரத்து காவல்துறையில் காவலராக பணிபுரிந்து வந்த திரு. அருண் காந்தி என்பவர் 08.04.2020 அன்று பட்டினப்பாக்கம் தெற்கு கால்வாய் சந்திப்பில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்புப் ஊரடங்கு அமல்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த போது நெஞ்சு வலி ஏற்பட்டு மருத்துவமனையில் உயிரிழந்தார் என்ற செய்தி அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். திரு. அருண் காந்தி அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்து கொள்கின்றேன். அவருக்கு வயது 33 தான். திரு. அருண் காந்தி அவர்களின் குடும்பத்திற்கு சிறப்பினமாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். அதுமட்டுமல்ல, உயிரிழந்த திரு. அருண் காந்தி அவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் அரசுப் பணி வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கொரோனா வைரஸ் தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அரசு ஊழியர்கள் குறிப்பாக களப்பணியாற்றும் காவலர்கள், தூய்மைப் பணியாளர்கள், வருவாய் துறையை சேர்ந்த பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்பை சேர்ந்த பணியாளர்கள் போன்றவர்கள் எதிர்பாராதவிதமாக பணியில் இருக்கின்ற போது இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கும் அரசு 10 இலட்சம் ரூபாய் வழங்கும். அவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு கல்வித் தகுதிக்கேற்றவாறு

அரசின் சார்பாக வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : ஊரடங்கு உத்தரவை நீட்டிக்கும் பட்சத்தில் அதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கின்றதா ? 1,000 ரூபாய் நிவாரணத் தொகை என்பது 21 நாட்களுக்காக கொடுக்கப்பட்டு இருக்கிறது. மேலும், நீட்டிப்பு செய்யும் பட்சத்தில் அரசு அதற்கு தயாராக இருக்கிறதா ?

பதில் : அரசாங்கத்திடம் எவ்வளவு நிதி இருக்கிறதோ அதைத்தான் கொடுக்க முடியும். மற்ற மாநிலங்களில் இப்படி கொடுக்கவில்லை. நம் மாநிலத்தில் எவ்வளவு கொடுத்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பாருங்கள். மற்ற மாநிலங்களில் எல்லாம் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் கூட பிடித்தம் செய்தார்கள். நாங்கள் அதைக்கூட பிடித்தம் செய்யவில்லை. ஏன் என்றால், அரசு பணியாளர்கள் சிறப்பான முறையில் பணியாற்றி, அரசிற்கு ஒத்துழைப்பு நல்கி, இந்த சோதனையான காலத்தில் அரசிற்கு பக்கபலமாக இருந்து பணிபுரிந்து வருகிறார்கள். ஆகவே, அரசிற்கு எந்த அளவிற்கு நிதி இருக்கிறதோ, அந்த நிதியை பொறுத்து உதவி செய்யும்.

கேள்வி : குஜராத்திலிருந்து மார்ச் 10ஆம் தேதி தவ்ஹித் ஜமாத்தை சேர்ந்த 29 பேர் சென்னைக்கு வந்துள்ளார்கள். பல மசூதிகளில் தங்கி, அவர்கள் மத பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டு, காவல்துறையினர் அவர்களுடன் தங்கியிருந்த மேலும் 10 பேரை சேர்த்து, மொத்தம் 39 பேர்களை மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள். இவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுமா ?

பதில் : இந்திய நாட்டின் சட்டத் திட்டத்திற்கு புறம்பாக யார் நடந்தாலும், சட்டத்தின் அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுக்கும்.

கேள்வி : சில மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு தொடர்பாக...

பதில் : நீங்கள் குறிப்பிட்டு சொல்ல வேண்டும். அங்கே இருக்கிறது, இங்கே இருக்கிறது என்று சொல்லக்கூடாது. அரசாங்கம் உன்னிப்பாக கவனித்து செயல்பட்டு கொண்டிருக்கிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், எந்தெந்த மருத்துவமனையில் சேர்க்கலாம் என்ற செய்தியும் நாங்கள் அறிவித்திருக்கிறோம். அந்த அறிவிக்கப்பட்ட மருத்துவமனைக்கு தேவையான மருத்துவர்களை நியமித்து விட்டோம். அதற்கான ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பரிசோதனை செய்வதற்கு தேவையான அதிகாரிகளும் நியமிக்கப்பட்டு விட்டார்கள். எல்லாமே முறைப்படி செயல்பட்டு கொண்டு இருக்கிறது. உங்களுக்கு தவறான செய்தி கிடைத்திருக்கிறது. ஒரு செய்தி சொன்னால் சரியாக இருக்க வேண்டும். அரசாங்கத்தை பொறுத்தவரைக்கும் முழுமூச்சுடன் செயல்பட்டு கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மருத்துவரும், செவிலியரும், மருத்துவப் பணியாளரும், காவல்துறை சேர்ந்தவர்களும், வருவாய்த்துறையை சேர்ந்தவர்களும், உள்ளாட்சித் துறையை சேர்ந்தவர்களும் தங்களுடைய உயிரை பணயம் வைத்து, அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள். இப்படி தவறான செய்தியை ஊடகத்தின் வாயிலாக சென்றால் அவர்களுக்கு மனக்கஷ்டம் ஏற்படும். தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல், குடும்பத்தைப் பற்றியும் பொருட்படுத்தாமல், அர்ப்பணிப்பு உணர்வோடு மருத்துவ சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி தவறான கருத்துகளை பரப்புவது தவறு. அந்த மாதிரி இருந்தால், அரசு விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கும். இது ஒரு கூட்டுப் பொறுப்பு. ஒரு சாதாரண விஷயம் அல்ல. நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கொரோனா வைரஸ் சிகிச்சைக்கான ஆடையை போட்டுவிட்டால் 6 மணிநேரம் அறையை விட்டு வெளியில் வர முடியாது. மருத்துவர்கள் ஆகட்டும், செவிலியர்கள் ஆகட்டும், அந்த கொரோனா வைரஸ் தொற்று நோய் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெறுகின்றவர்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ பணியாளர்கள் அந்த உடையை அணிந்து கொண்டு வெளியே வரமுடியாது. 6 மணிநேரம் அங்கே தான் இருக்க வேண்டும். எவ்வளவு கஷ்டம் என்று எண்ணிப் பாருங்கள். ஒரு மணிநேரம் மின்சாரம் இல்லை என்றால் நாம் எவ்வளவு கஷ்டப்படுகிறோம். 6 மணிநேரம் அந்த உடையை போட்டுக் கொண்டு, அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றும் மருத்துவர்களுக்கு நாம் அத்தனைபேரும் துணைநிற்க வேண்டும், ஆதரவு தெரிவிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள், மனம் தளராமல் இன்னும் ஆர்வத்தோடு அந்த நோயாளியை கண்காணித்து குணப்படுத்த முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : மத்திய அரசு 510 கோடி ரூபாய் நிதி வழங்கியிருக்கிறார்கள். இன்னும் கூடுதல் நிதி கோரப்பட்டுள்ளதா ?

பதில் : ஏற்கெனவே இந்த கேள்வி எழுந்த காரணத்தினால், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கின்றோம். கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக நாங்கள் கேட்ட நிதியை உடனடியாக வழங்க வேண்டும் என்று தெளிவாக கடிதம் எழுதியிருக்கிறோம், இன்னும் பதில் வரவில்லை. எதிர்பார்க்கின்றோம்.

கேள்வி : பத்தாம் வகுப்பு பொது தேர்வு தொடர்பாக மாணவர்களிடம் குழப்பம் எழுந்திருக்கிறதே ?

பதில் : என்ன குழப்பம் இருக்கிறது. இது பத்தாம் வகுப்பு. தேர்வு எழுதினால் தான் யார் சிறப்பாக படிக்கிறார்கள் என்பது தெரிய வரும். மற்றது போல் அல்ல. ஒன்பதாவது வகுப்பு என்றால் ஆல் பாஸ் என்று சொல்கிறோம். ஆனால் பத்தாம் வகுப்பு என்பது அடுத்த கட்டத்திற்கு நகர்வது. ஒரு முக்கியமான தேர்வு. அதை அரசு பரிசீலித்து கொண்டு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : ஒரு சில மாவட்டங்களில் அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கான நேரத்தை குறைத்திருப்பது குறித்து...

பதில் : மாவட்டம் முழுவதும் ஒரே ஆணை தான் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. தமிழகத்தை பொறுத்தவரைக்கும் காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரை பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

வேலூரில் காலை 6 மணி முதல் மதியம் 12 மணிக்குள் முடிந்து விடுகிறது. அங்கே இருக்கின்ற அதிகாரிகளும் சரி, அங்கே இருக்கின்ற பல்வேறு நிறுவனங்களை சேர்ந்தவர்களும் சரி, காலை 6 மணி முதல் மதியம் 12 மணிக்குள் நாங்கள் அத்தியாவசிய பொருட்களை எல்லாம் வாங்கிக் கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்கள். அது ஒரு சிறு நகரம் தான். சென்னை போல் பெருநகரம் கிடையாது. பல இலட்சம் பேர் வசிக்கக்கூடிய பகுதி கிடையாது. வேலூரில் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் தான் வசிக்கிறார்கள். அதற்காக அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே இருக்கின்ற சூழ்நிலைக்கு தக்கவாறு நேரத்தை குறைத்திருக்கின்றார். அந்தந்த மாவட்டத்திற்கு தக்கவாறு நீங்கள் செயல்படுத்த வேண்டும் என்று ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தெளிவுப்படுத்தி இருக்கிறோம். இந்த 144 தடை உத்தரவை மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, வீணாக சுற்றி திரிபவர்கள் மூலமாக நோய் பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதனால் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அங்கே இருக்கின்ற நிலைமைக்கு தக்கவாறு முடிவு செய்கிறார்கள். அவர்கள் தானாக முடிவு செய்வது கிடையாது. அங்கே இருக்கின்ற வியாபார சங்கங்களோடு, தொண்டு நிறுவனங்களோடு பேசி என்ன கால அளவு கொடுத்தால் அங்கே இருக்கின்ற பொதுமக்கள் அத்தியாவசிய பொருட்கள் பெற முடியும். அந்த காலயளவை நிர்ணயித்து தான் இந்த உத்தரவை பிறப்பித்திருக்கின்றார்கள்.

கேள்வி : முதலமைச்சரின் பொது நிவாரண நிதி....

பதில் : முதலமைச்சரின் பொது நிவாரண நிதியை பொறுத்தவரைக்கும் 101 கோடி ரூபாய் இதுவரை வந்திருக்கிறது. அந்த நிதி முழுவதுமே கொரோனா வைரஸ் தடுப்புப் பணிக்காக செலவழிக்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், ஊடகத்தின் வாயிலாக, பத்திரிகையின் வாயிலாக நம்முடைய தமிழக மக்களுக்கு வேண்டுகோளாக வைக்கின்றேன். தாராளமாக இந்த கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு நிதி வழங்க வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் பெரிய பெரிய தொகை தான் வழங்க வேண்டும் என்று அவசியம் கிடையாது. 100 ரூபாய் இருந்தால் கூட தங்களால் இயன்ற நிதியை அரசிற்கு வழங்கலாம். இதனை கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு பயன்படுத்தி கொள்வோம். இந்த சிறிய நிதியை எப்படி அனுப்புவது என்று யாரும் கூச்சப்பட தேவையில்லை. நீங்கள் கொடுக்கின்ற ஒவ்வொரு ரூபாயும் நாட்டு மக்களுடைய உயிரை காப்பாற்றுவதற்காக அரசு பயன்படுத்தும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, அருள்கூர்ந்து தமிழகத்தில் இருக்கின்ற பொதுமக்கள், கருணை உள்ளம் கொண்டு, நோய்வாய்ப்பட்டு துன்பப்படுகின்ற அந்த நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அரசுக்கு உதவி செய்கின்ற வகையிலே நீங்கள் உங்களால் முடிந்த நிதியை இந்த கொரோனா வைரஸ் குணப்படுத்துவதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்க வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஊடகத்தின் வாயிலாக, பத்திரிகையின் வாயிலாக பொதுமக்களை கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த வைரஸ் நோய் என்பது ஒரு பெரிய தொற்று நோய். ஆகவே, இந்த நோய் அறிகுறி தென்பட்டால் உடனடியாக அருகில் இருக்கின்ற மருத்துவமனைக்கு சென்று, தங்களை பரிசோதனை செய்து, அந்த பரிசோதனையில் நோய் தொற்று இருந்தால், மருத்துவமனையில் சேர்ந்து, சிகிச்சை பெற்றுக் கொண்டால், பூரண குணமடையலாம். இன்றைக்கு பல வெளிநாடுகளில் நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நோயின் வீரியம், தாக்கம் எந்தளவிற்கு இருக்கிறது என்பதை ஊடகத்தின் வாயிலாக, பத்திரிகையின் வாயிலாக அவ்வப்போது தெரிவித்து கொண்டிருக்கிறீர்கள். இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு, அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும். தேவையில்லாமல் வெளியில் செல்லக்கூடாது. அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்கு மட்டும் செல்ல வேண்டும். நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, ஒரு வாரத்திற்கு தேவையான பொருட்களை நீங்கள் வாங்கிக் கொள்ள வேண்டும். காய்கறி வேண்டுமென்று சொன்னால், இப்பொழுது உங்கள் பகுதிக்கே கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இல்லாவிட்டால் அருகில் இருக்கின்ற கடைக்கு சென்று ஒரு வாரத்திற்கு தேவையான காய்கறிகளை வாங்கிக் கொண்டு வந்துவிட்டால், தினந்தோறும் வெளியில் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இது ஒரு தொற்று நோய். எப்படி ஒருவருக்கு ஏற்படுகிறது என்பதே தெரியாது. இது கண்ணுக்கு தெரியாத வைரசால் ஏற்படுகின்ற நோய். இதை மக்கள் உணர்ந்து, இந்த நோய் குறித்து தெரிந்து கொண்டு, உங்களை பாதுகாத்து கொள்ள வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அரசிற்கு முழு ஒத்துழைப்பு நல்குங்கள். அரசை பொறுத்தவரைக்கும், ஒரு உயிர் கூட தமிழகத்திலே போகக்கூடாது என்பது தான் எங்களுடைய நிலைப்பாடு. அதற்காக இரவுபகல் பாராமல் நம்முடைய அனைத்து துறைகளும் செயல்பட்டு கொண்டிருக்கின்றது என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகின்றேன். ஆகவே, பொதுமக்கள் அன்புகூர்ந்து ஒத்துழைப்பு நல்கி, நீங்கள் இந்த வைரஸ் தொற்று நோய் தமிழகத்திலிருந்து முழுமையாக அகற்றுவதற்கு துணை நிற்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

❖



“விழித்திருங்கள், விலகி இருங்கள், வீட்டிலேயே இருங்கள்” என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நோயை கட்டுப்படுத்த அரசுக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 13.04.2020

உலகம் முழுவதும் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில், கடந்த 24.03.2020 அன்று மாலை 6 மணி முதல் 31.03.2020 வரை ஊரடங்கு உத்தரவு முதலில் பிறப்பிக்கப்பட்டது. பின்னர் மத்திய அரசு அதை 15.04.2020 அன்று காலை வரை நீட்டித்தது. ஊரடங்கு உத்தரவு தீவிரமாக கடைபிடிக்கப்பட்டு வருவதன் காரணமாக தமிழ்நாட்டில் நோய்த் தொற்று பெரிய அளவில் பரவாது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தற்போது உள்ள ஊரடங்கு உத்தரவை நீட்டிப்பது தொடர்பாகவும், கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தொடர்பாக மாநிலங்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளையும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக 11.04.2020 அன்று கலந்தாய்வு மேற்கொண்டார். இக்கலந்தாய்வின்போது, தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளும், தமிழ்நாட்டிற்கு போதிய நிதி ஒதுக்க வேண்டும் எனவும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் நான் எடுத்துரைத்தேன். மேலும், 30.04.2020 வரை ஊரடங்கு உத்தரவினை நீட்டிக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தினை தெரிவித்தேன். நானும், மற்ற முதலமைச்சர்களும் கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கையான ஊரடங்கு உத்தரவினை நீட்டிக்க வேண்டும் என வலியுறுத்தினோம்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கலந்தாய்வுக் கூட்டத்தின் நடவடிக்கைகளின் அடிப்படையிலும், உலக சுகாதார அமைப்பின் கருத்தின் படியும், மருத்துவ நிபுணர் குழு மற்றும் பொது சுகாதார வல்லுநர் குழுக்களின் பரிந்துரைகளின் படியும், மாநிலத்தில் ஊரடங்கை தளர்த்தினால், நோய்த் தொற்று அதிகரிக்கக் கூடும் என்பதை கருத்தில் கொண்டும், 11.04.2020 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படியும், பேரிடர் மேலாண்மை சட்டம் 2005இன் படியும், குற்றவியல் விசாரணை முறை சட்டப் பிரிவு 144இன் படியும், 30.04.2020 வரை ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்படுகிறது.

கொரோனா நோய்த் தொற்றினை தடுக்கும் நோக்கில், பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005இன் படியும், குற்றவியல் விசாரணை முறை சட்டப் பிரிவு 144இன் படியும், தற்போது நடைமுறைபடுத்தப்பட்டு வரும் அனைத்து கட்டுப்பாடுகளும் தொடரும்.

❖ ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்படும் காரணத்தினால், தமிழ்நாட்டில் உள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு மே மாதத்திற்கான அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும், அதாவது ஒரு கிலோ சர்க்கரை, ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ சமையல் எண்ணெய், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு எப்பொழுதும் வழங்கப்படும் அரிசி ஆகியவை நியாய விலைக் கடைகளில் விலையின்றி வழங்கப்படும்.

❖ கட்டடத் தொழிலாளர்கள் உட்பட பதிவு பெற்ற அனைத்து அமைப்புசாரா தொழிலாளர் குடும்பங்களுக்கும், குடும்பம் ஒன்றுக்கு இரண்டாவது முறையாக 1,000 ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும்.

❖ பிறமாநிலங்களைச்சேர்ந்த தொழிலாளர்களுக்கு, மே மாதத்திற்காக 15 கிலோ அரிசி, ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ சமையல் எண்ணெய் விலையின்றி வழங்கப்படும்.

பல்வேறு தரப்பினரிடமிருந்து வந்த கோரிக்கைகளை பரிசீலித்து,

❖ தமிழ்நாட்டில் காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரையிலான காலத்தில், அடுமனைகள் (பேக்கரி) இயங்க தடையில்லை என்பதையும், ஏற்கனவே, உணவகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி அடுமனைகளிலும் பார்சல் விற்பனை மட்டுமே அனுமதி அளிக்கப்படும் என தெளிவுபடுத்தப்படுகிறது.

❖ மேலும், சென்னை மாநகராட்சி பகுதியில் உள்ள மக்கள், கொரோனா நோய் தொடர்பான தங்கள் சந்தேகங்களை தீர்த்துக் கொள்ள டெலி மெடிசின் சொஸைட்டி ஆப் இந்தியா நிறுவனத்தில் பதிவு பெற்ற சிறந்த மருத்துவர்களைக் கொண்டு, தொலை மருத்துவ முறை மூலம் தங்கள் மருத்துவ சந்தேகங்களுக்கு தெளிவு பெற தமிழ்நாடு அரசு வழிவகை செய்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நபரும், ஒவ்வொரு குடும்பமும் பாதுகாப்பாக இருப்பது தான் மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு மிகவும் முக்கியமானது. ஆகவே, தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்படுகின்ற அனைத்து வழிமுறைகளையும் தவறாமல் பின்பற்றி, “விழித்திருங்கள், விலகி இருங்கள், வீட்டில் இருங்கள்” என்ற கோட்பாட்டின் அடிப்படையில், சமூக இடைவெளியை கடைபிடித்து, கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்த அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/18-20
& WPP No. TN/PMG (CCR) 518/18-20

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், 27.03.2020 அன்று, கொரோனா வைரஸ் சிகிச்சைக்காக 500 படுக்கைகள் கொண்ட COVID-19 மருத்துவமனையாக மாற்றியமைக்கப்பட்டுள்ள சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை பார்வையிட்டார்கள்.

Published by Dr. P. SANKAR, IAS, on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr. P. SANKAR, IAS